# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 32 | சுடர் 31 | கதிர் 307 | வள்ளுவர் ஆண்டு 2047 | புரட்டாதி 12, புதன்கிழமை 28.09.2016







## ஜெனிவாவில் திரண்டு தமிழர்கள் போராட்டம்

### போர்க் குற்றங்கள் மீது பன்னாட்டு விசாரணைக்கு வலியுறுத்து



ஜெனிவா, செப்ரெம்பர் 28

இறுதிப் போரில் இடம்பெற்ற இனப்படுகொலை மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான கொடூரங்களுக்கு நீதிவேண்டி புலம்பெயர்ந்து வாழும் பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் சுவிற்சர்

>> 27ஆம் பக்கம்

## தமிழர் மனங்களில் இப்போதும் பிரபாகரனே தலைவர்

### சொய்சா எம்.பி. கருத்து

கொழும்பு, செப். 28

வடக்கு - கிழக்குத் தமிழர்களின் மனங்களில் பிரபாகரனே எப்போதும் தலைவராக இருக்கின்றார். அந்தத் தலைவரைக் கொலை செய்த மகிந்த மீது, அந்த மக்கள் இன்னும் கோபத்தில்தான் உள்ளனர். மேலும், வடக்கில் இப்போது முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனால் தொடக்கி வைக்கப்பட்டிருக்கும் இனவாதச் செயற்பாடுகள் முறியடிக்கப்பட வேண்டும்.



இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு பேசிய அவர் தெரிவித்ததாவது:

யார் என்ன சொன்னாலும் வடக்கு - கிழக்கு தமிழர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் த்லைவர் பிரபாகரனைத்

>> 26ஆம் பக்கம்

## புதிய அரசமைப்பு குறித்து எவருக்குமே அச்சம் வேண்டாம்

### அமைச்சர் அஜித் தெரிவிப்பு

கொழும்பு, செப். 28

அரசியல் தீர்வைக் கோரி வடக்கு மாகாண முதலமைச்சர். க.வி. விக்னேஸ்வரன் இனவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார். தேவையற்ற ஊர்வலங்களை நடத்தி வடக்கையும் தெற்கையும் மோதவிடப்பார்க்கின்றார். ஆனால் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய அரசமைப்பு தொடர்பில் எவரும் அஞ்சத்

>> 26ஆம் பக்கம்

## முஸ்லிம்களுக்கு தன் காணியை எழுதிவைத்த ஜெகநாதன்

முல்லைத்தீவு, செப். 28

எனக்கு ஏதேனும் நிகழ்ந்தால், நீராவிப்பிட்டியில் உள்ள எனது காணியை முஸ்லிம்களுக்கே வழங்க வேண்டும் என்று உயில் எழுதி வைத்துள்ளேன். முல்லைத்தீவு நகரப் பகுதியில் முன்னைய காலங்களில் தமிழ் மக்கள் எவரும் கடை வைத்திருக்கவில்லை. முஸ்லிம்களே கடைகளை வைத்திருந்தார்கள்.

இவ்வாறு

>> 26ஆம் பக்கம்

## விக்னேஸ்வரனுக்கு எதிராக செயற்படவேயில்லைச் சட்டம்

### மகிந்த ராஜபக்ச அம்பாறையில் ஆவேசம்

கொழும்பு, செப். 28

வடக்கில் விக்னேஸ்வரன் செயற்பட்டதுபோல், தெற்கிலுள்ள முதலமைச்சர் ஒருவர் செயற்பட்டிருந்தால், இனவாதத்தைத் தூண்டுகிறார் எனக்கூறி இந்த நேரம் சி.ஐ.டியினர் அவரைக் கைது செய்திருப்பார்கள். ஆனால், விக்னேஸ்வரன் விடயத்தில் சட்டம் இன்னும் செயற்படவில்லை.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி

>> 28ஆம் பக்கம்

## குடாநாட்டில்தான் டெங்கு அதிகம்

யாழ்ப்பாணம், செப். 28

வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டத்திலேயே டெங்கின் தாக்கம் அதிகமாக உள்ளது. மழை காலத்துடன் இது மேலும் அதிகரிக்கும். அதனைக் கட்டுப்படுத்துவதற்காகவே டெங்குக் கட்டுப்பாட்டு வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர் ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தேசிய

>> 29ஆம் பக்கம்

## பெட்டி படுக்கையுடன் தமிழ்நாடு செல்ல தயாராகுங்கள்

### சிங்களவருக்கு எதிரான போக்கை விக்னேஸ்வரன் நிறுத்தாவிட்டால் இது எச்சரிக்கை என்கிறது பொதுபல சேனா

கொழும்பு, செப்.28

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சிங்களவர்களுக்கு எதிரான போக்கை தொடர்ந்தும்

>> 26ஆம் பக்கம்

## இராணுவத்தால் வன்புணரப்பட்ட பெண் மீது பொலிஸ் சித்திரவதை

### விசாரணைகளை ஆரம்பித்தது மனித உரிமை ஆணைக்குழு

யாழ்ப்பாணம், செப். 28

4 இராணுவத்தினருக்கு 25 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கக் காரணமாக இருந்த விசுவமடுப் பெண், நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட பின்னர் பொலிஸாரால் துன்புறுத்தப்பட்டாரா என்பது தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அவரும்,

>> 28ஆம் பக்கம்

## இரு நாள்களில் மட்டும் வடக்கில் 3 அவலச் சாவுகள்

யாழ்ப்பாணம், செப்:28

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்று, நேற்றுமுன்தினம் 4 வயது பாலகன், 16 வயது மாணவி மற்றும் குடும்பத் தலைவர் ஆகியோர் அவலச் சாவடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

**ஆற்றில் மூழ்கி பாலகன் சாவு**

முல்லைத்தீவில் வட்டுவாகல் நீர் ஏரியில் விளையாடிக்கொண்டிருந்த நான்கு வயதுப் பாலகன் ஆற்றில் மூழ்கி உயிரிழந்ததாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன் போது வட்டுவாகல் பிரதேசத்தைச் சேர்ந்த பிரபாகரன் சுமிலன் என்ற பாலகனே உயிரிழந்தான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"பெற்றோருடன் குளிப்பதற்காக வட்டுவாகல் நீர் ஏரிக்குச் சென்ற அந்தச் சிறுவன், ஆற்றில் குளிப்பதற்காக வந்திருந்த

>> 27ஆம் பக்கம்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராணுவச் சிப்பாய் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், செப். 28

முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் உள்ள இராணுவ முகாமில் பணி புரியும் சிப்பாய் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று ஒப்படைக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உடுப்புக்குளம் அளம்பில் பகுதி முகாமில் பணிபுரியும் ஜெயவர்த்தனா (வயது 35) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சடலம் உடற் கூற்றுப் பரிசோதனைக்காக நேற்றைய தினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. குறித்த இராணுவச் சிப்பாயின் இறப்புக்கு பாம்புக் கடியே காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. (வ-101)

# ரி.ஐ.டியினரால் அச்சுறுத்தல் என முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப். 28

யாழ்.நகரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஊர்வலத்தில் கலந்துகொண்டதனால் ரி.ஐ.டியினர் என்று அடையாளப்படுத்திய நபர்கள் தம்மை அச்சுறுத்தியதாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது.

முன்னரும் தாம் போராட்டங்களில் கலந்துகொண்டதாகவும், தமது பிள்ளை வெளிநாட்டில் உள்ளதாகவும், இந்நிலையிலேயே அவ்வாறு அச்சுறுத்தப்பட்டதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டாளரின் தாயையும் அவரது மகளையும் ரி.ஐ.டிஎன்று கூறியவர்கள் அச்சுறுத்தியதோடு அலைபேசியையும் சோதனையிட்டனர் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-4)

# கேரதீவில் உப்பளம் அமைப்பது முதலமைச்சருக்குத் தெரியாதா?

## யாழ். ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சர்ச்சை

யாழ்ப்பாணம், செப். 28

கேரதீவு அறுகுவெளிப் பகுதியில் அமைக்க முயற்சிக்கப்படும் உப்பளம் தொடர்பில், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் சர்ச்சை ஏற்பட்டது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன் போது கேரதீவு அறுகுவெளிப் பகுதியில் அமைக்கப்படும் உப்பளத்துக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், இந்த விடயம் தொடர்பில் கடந்த வாரம் கருத்து வெளியிட்ட முதலமைச்சர், தமக்கு எதுவுமே தெரியாது எனக் கூறியுள்ளார். ஆனால் வடக்கு மாகாண காணி அமைச்சு அதற்கான அனுமதியை எழுத்து மூலம் வழங்கியுள்ளது - என்றார்.

இதன்போது இணைத் தலைவர்களுள் ஒருவரான வடக்கு முதலமைச்சர், தற்போதும் கூறுகின்றேன் எனக்குத் தெரியாது - என்றார்.

இவ்வாறானதொரு நிலையில் உப்பளத்துக்கான அனுமதியை பெற்ற உரிமையாளர் தான் பெற்ற அனுமதிகள் சகலவற்றையும் மாவட்டச் செயலரிடம் ஒப்படைத்தார்.

மீண்டும் கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், கையளிக்கப்பட்ட ஆவணத்தில் வடக்கு மாகாண காணி அமைச்சு எழுத்து மூலம் வழங்கிய அனுமதி உண்டா இல்லையா என்று ஆராய்ந்து பதிலளிக்க வேண்டும் என்று கோரினார்.

இதன் போது முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், விடயத்தை அடுத்த அமர்வில் ஆராயலாம் என்று கூறினார். கையில் உள்ள கோவையில் அவ்வாறான கடிதம் உண்டா இல்லையா என்று பார்க்க ஏன் ஒரு மாதம்தேவை? உடன்கூறவேண்டும் என்று மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர்சுமந்திரன் கோரியபோது, இணைத் தலைவர்களில் ஒருவரான முதலமைச்சர் பதிலளிக்கவில்லை. மற்றொரு இணைத்தலைவரான இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோவையை பார்வையிட்டு குறித்த அனுமதி உண்டு எனப் பதிலளித்தார்.


கருத்து வெளியிட்ட இணைத் தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, இங்கு முதலீடுகளை மேற்கொள்ளுமாறு நாமே அழைப்பு விடுகின்றோம். அதன் பின்பு ஒரு காரணத்திற்காக நிராகரிக்கின்றோம். பொருத்தமற்ற இடத் தேர்வால் நிறுத்துவதானால் நாமே பொருத்தமான இடத்தினை வழங்க வேண்டும். அதுவே சரியான தீர்வாக அமையும். கொழும்பு அரசின் சுற்றாடல் அதிகார சபையினரைப் பதிலளிக்குமாறு கோரினார்.

பதிலளித்த சுற்றாடல் அதிகாரசபை பிரதிநிதி, ஏனையவர்களின் அனுமதியின்பின்பு நாம் நேரில் பார்வையிட்டு மக்கள் குடியிருப்புக்களில் இருந்து 4 கிலோ மீற்றர் தொலைவில் வருவதனால் எந்த விதமான தீங்கும் ஏற்படாது என்று உறுதி செய்து 15ஆம் மற்றும் 16ஆம் மைல் கல்லுக்கிடையே மேற்கொள்ளுமாறு அனுமதி வழங்கப்பட்ட போதிலும், 12 ஆவது மற்றும் 13 ஆவது மைல் கல்லுக்கிடையில்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதனாலும் சர்ச்சை ஏற்பட்டது - என்றார்.

மீண்டும் ஆராய்ந்து ஒரு கிழமைக்குள் குறித்த பணியை ஆரம்பிக்க முடியுமா அல்லது முடியாதா? என்பதனை மாவட்டச் செயலருக்கு எழுத்தில் அறிவிக்க வேண்டும், என்று இணைத் தலைவர்கள் அறிவித்தனர். (வ-5-101)

# ஊடகவியலாளர் லசந்தவின் உடல் கல்லறையிலிருந்து தோண்டியெடுப்பு

## ட்ரோன் கமரா பறப்பால் பெரும் பரபரப்பு



யாழ்ப்பாணம், செப். 28

ஏழு ஆண்டுகளுக்கு முன் படுகொலை செய்யப்பட்ட சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் உடல் அவரது கல்லறையிலிருந்து மீண்டும் ஒரு பிரேதப் பரிசோனைக்காக நேற்றுத் தோண்டியெடுக்கப்பட்டது. சடலம் தோண்டி எடுக்கப்பட்டபோது ட்ரோன் கமரா பறக்கவிடப்பட்டதை அடுத்து அங்கு பதற்றநிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொரெல மயானத்தில் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் நீதிவான் ஒருவர் முன்னிலையில் லசந்த விக்ரமதுங்கவின் உடல் தோண்டியெடுக்கப்பட்டு மருத்துவப் பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டது. சோதனை முடிவடைந்தவுடன் மீண்டும் அது அடக்கம் செய்யப்படும்.

லசந்த விக்ரமதுங்க சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். அவர் 2009ஆம் ஆண்டு ஜனவரியில் கொழும்பில் உள்ள அவரது அலுவலகத்துக்கு செல்லும் வழியில் நான்கு ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். மகிந்த அரசு மீதான விமர்சகர்களில் ஒருவராக இருந்த லசந்த விக்ரமதுங்க கொல்லப்படுவதற்கு முன்னர் எழுதி அவர் கொலை செய்யப்பட்ட பின் சண்டே லீடர் இதழில் பிரசுரமான தலையங்கம், பன்னாட்டளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தான் இருமுறை கொடூரமாகத் தாக்கப்பட்ட சம்பவங்களைக் குறிப்பிட்ட அவர், இந்த தாக்குதல்கள் அரசால் உந்தப்பட்டு நடந்ததாகத் தெரிவித்து, தான் இறுதியாகக் கொல்லப்பட்டால், அரசுதான் அந்தக் கொலையை செய்திருக்கும் என்று கூறியிருந்தார்.

அவரது கொலை தொடர்பாக அவர் உடல் மீது முன்னர் நடத்தப்பட்ட பிரேதப் பரிசோதனைகள் சந்தேகத்துக்குரியவையாக இருக்கின்றன என்று பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்த நிலையில் கொழும்பு நீதிமன்றம் அவரது உடலை தோண்டியெடுக்க உத்தரவிட்டது. முன்பு நடத்தப்பட்ட பிரேத பரிசோதனைகளில் ஒன்றில் அவரது உடலில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்ததாகக் கூறப்பட்டது. ஆனால் மற்றொரு பிரேத பரிசோதனையில் துப்பாக்கிக் காயங்கள் ஏதும் இருப்பதற்கான தடயமே இல்லை என்று கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சடலம் நேற்று தோண்டி எடுக்கப்பட்டபோது ட்ரோன் கமரா இயக்கப்பட்டதை அடுத்து அங்கு பதற்றநிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனால் சடலம் தோண்டுவதை பொலிஸார் இடைநிறுத்தினர். பின்னர் ட்ரோன் கமரா பறப்பு அங்கிருந்து சென்றதையடுத்தே பதற்றம் தணிந்தது. அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் ஒருவரினால் அந்தக் கமரா பறக்கவிடப்பட்டு காட்சிகள் பதிவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

(ஏற்கனவே கிடைத்த செய்தி பக்கம் 11)

# போராட்டத்தை நிறுத்தினர் தமிழ் அரசியல் கைதிகள்

யாழ்ப்பாணம், செப். 28

அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் மேற்கொண்டு வந்த உணவு ஒறுப்புப் போராட்டம் நேற்று மதியத்துடன் முடிவுக்கு வந்தது. வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் உறுதிமொழியை ஏற்று தமது போராட்டத்தை கைவிடுவதாக அரசியல் கைதிகள் தெரிவித்தனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 21ஆம் திகதி உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். அவர்களில் மூவர் கடந்த சனிக் கிழமை வழக்குக்காக வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றம் செய்யப்பட்டனர். எஞ்சிய 18 பேரும் உணவு ஒறுப்பை முன்னெடுத்திருந்தனர்.

அவர்களில் 5 பேரின் நிலை கவலைக்கிடமானதை அடுத்து, நேற்றுக் காலை சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

நேற்று மதியம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.குணசீலன் மற்றும் மன்னார் பிரஜைகள் குழுவின் இணைப்பாளர் அந்தோனி சகாயம், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் தலைவர் அருட்தந்தை மா.சக்திவேல், அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சுந்தரம் மகேந்திரன் ஆகியோர் சிறைச்சாலைக்கு சென்று அரசியல் கைதிகளைச் சந்தித்தனர்.

அரசியல் கைதிகளின் வழக்குகளை துரிதமாக முடிவுக்கு கொண்டு வருமாறு கோரி, வடக்குமுதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு கடிதம் எழுதியிருப்பதை அரசியல் கைதிகளிடம் சுட்டிக்காட்டினர். இதனையடுத்து அரசியல் கைதிகள் தமது போராட்டத்தை கைவிடச் சம்மதித்தனர். நேற்று மதியம் 12.30 மணிக்கு அவர்களின் போராட்டம் முடித்து வைக்கப்பட்டது. (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினமும் 150 நாய் கடிப் பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 28

வளர்ப்பு நாய்கள், தெரு நாய்களினால் கடியுண்டு நாள் ஒன்றுக்கு 150 பேருக்கு மேல் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிக்கைக்காகச் சேர்க்கப்படுகின்றனர் என்று யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு மருத்துவர் கமிலஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

"2020ஆம் ஆண்டு நீர் வெறுப்பு நோயற்ற இலங்கையை உருவாக்க ஒன்றுபடுவோம் என்ற தொனிப்பொருளில் செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதியான இன்று உலக விசர்நாய்க் கடி நோய் தினம் அனுசரிக்கப்படுகிறது. குரங்கு, நாய், பூனை, மரஅணில், பெருச்சாளி போன்ற விலங்குகள் கடிப்பதனால் அல்லது விறாண்டுவதால் அதனைக் கவனிக்காது விடுமிடத்து நீர்வெறுப்பு நோய் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளது. இலங்கையில் வட பகுதியிலேயே செல்லப்பிராணிகளான நாய், பூனைகளால் கடிக்கு இலக்காகின்றவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது.

செல்லப்பிராணியாக வளர்க்கப்படும் நாய்களுக்குத் தடுப்பூசிகளை ஒழுங்காகப்போடுதல்வேண்டும். தெருநாய் தொடர்பாக அவதானமாக இருக்கவேண்டும். கடித்தாக்கத்தை ஏற்படுத்திய நாயை உரிய முறையில் கையாளுதல் வேண்டும். நாய் கடிக்கோ அல்லது பூனைக்கடிக்கோ இலக்கானவர் உடனடியாக மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக் கொள்வதுடன், தடுப்பூசிகளை மருத்துவரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக உரிய முறையில் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

அனைத்து மக்களும் விழிப்புணர்வுடன் இருப்பதன் ஊடாக எதிர்காலத்தில் நீர் வெறுப்பு நோயில் இருந்து முற்றாக விடுபட்டுக் கொள்ளலாம்" - என்றார். (வ-ரி7)

ஊர்வலத்தைக் கூட்டமைப்பு எதிர்த்தது என்றால்

# விக்கியைச் சம்பந்தன் பதவி நீக்காதது ஏன்?

## கேள்வி எழுப்புகிறது ஜே.வி.பி

கொழும்பு, செப். 28

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊர்வலத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எதிர்ப்பு என்றால், ஏன் அவரை முதலமைச்சர் பதவியில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை? தெற்கில் இனவாத அலையை உருவாக்கிய விக்னேஸ்வரனின், இனவாத நிகழ்சி நிரல் தோற்கடிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

"வடக்கு - கிழக்கு தமிழர்களின் பிரச்சினைகளுக்கு நல்லதொரு தீர்வைத் தேடும் முயற்சி இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இனவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்.

ஊர்வலங்களை நடத்தி அவர் தெற்கில் ஒரு அலையை ஏற்படுத்தியுள்ளார். தெற்கில் உள்ள இனவாதிகளுக்கு அவர் வழியேற்படுத்திக் கொடுத்துள்ளார். வடக்கிலும் தெற்கிலும் இந்த இனவாதம் தோற்கடிக்கப்பட வேண்டும்.

விக்னேஸ்வரனின் இந்தச் செயற்பாடு இனங்களிடையே குரோதத்தை விதைக்கும் இனவாத செயற்பாடாகவே உள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் இதை எதிர்க்கின்றார். அப்படியென்றால் அவரது கட்சி சார்பில் விக்னேஸ்வரனால் எப்படி முதலமைச்சராக இருக்க முடியும்? வடக்கு மாகாண சபையில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து அவரை முதலமைச்சர் பதவியில் இருந்து கவிழ்க்க முடியும்.

அரசு இவ்வாறான இனவாதச் செயற்பாடுகளை முறியடிக்க முன் வர வேண்டும்.

தெற்கிலோ வடக்கிலோ, இனவாதம் எங்கு தலைதூக்கினாலும் அது அடியோடு அழிக்கப்பட வேண்டும். இதற்காக மக்கள் ஒன்றிணைய வேண்டும்" - என்றார். (வ-5)

லக்கின அதிர்ஷ்டம்
இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 27.09.2016
வெற்றி வாரம் 2036
வர்ணம் நீலம்
மகரம்
வெற்றி இலக்கங்கள்
21 34 35 38
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 3,510,440 /-

## நல்லூர் பிரதேசசபை அறிவித்தல்
## காணி கொள்வனவு

1. 20/19A பலாலி வீதி (மடம் ஒழுங்கை)
2. இல 20/19 பலாலி வீதி, திருநெல்வேலி

எனும் முகவரியில் அமையப்பெற்ற ஆதனங்களை நல்லூர் பிரதேச சபையானது சபையின் அபிவிருத்தி நடவடிக்கைக்காக கொள்வனவு செய்ய முடிவு செய்துள்ளதால் வேறு எவரும் இவ்வாதனங்களை கொள்வனவு செய்ய முயற்சிக்க வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

செயலாளர்
நல்லூர் பிரதேசசபை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்லையா சுந்தரம்பிள்ளை



அவர்களின் 50 வருட கலைப்பணியைப் பாராட்டி 23.09.2016 அன்று நடைபெற்ற வடமாகாண முதலமைச்சர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டோரில் சிறந்த 'இசைத்துறை-ஆர்மோனியம்' இற்கான விருதினை பெற்றமைக்கு அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தர்மக்கேணி,
பளை.

வாழ்த்துவோர்
குடும்பத்தினர்

# ரயில் வந்த போது கடவை மூடப்படவில்லை

## தாண்டிக்குளம் மக்கள் குற்றச்சாட்டு

வவுனியா தாண்டிக்குளம் பிரதேச, ரயில் பாதுகாப்புக் கடவை ரயில் வந்த போது மூடப்படவில்லை என்று பொதுமக்கள் குற்றம் சுமத்தினர். பாதசாரிகள் ரயிலை அவதானித்து கடவையைக் கடந்தமையால் உயிராபத்து தவிர்க்கப்பட்டது என்று தெரிவிக்கப் பட்டது. வவுனியா தாண்டிக் குளம் ரயில் பாதுகாப்புக் கடவையில் நேற்று நண்பகல் 12.20 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது. ரயில் வந்தபோது ரயில் கடவை பூட்டப்படவில்லை. இருப்பினும் பாதசாரிகள் ரயிலை அவதானித்தமையால், வீதியைக் கடக்கவில்லை. ரயில் வருவதை அறிந்து ரயில் கடவைக் காப்பாளர் நடவடிக்கை எடுக்காமல் விட்டது தொடர்பில் பாதசாரிகள் விசனம் வெளியிட்டனர்.

"இந்த விடயம் எனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. காப்பாளர்களுடைய அசமந்தப் போக்கு தொடர்பில் கவனம் செலுத்தப்படும்" இவ்வாறு வடபகுதி ரயில் கடவைக் காப்பாளர்சங்கத்தலைவர் தெரிவித்தார். (வ-5-2)

தேவை
டிப்பர் மூலம் கிறவல் மணல் விநியோகிப்பவர்கள் தேவை.
தொடர்பு: 078 248 9471

கலர் பிரதியாக்கம்
Colour Printing
சான்றிதழ்கள்
புத்தக கவர்கள்
துண்டுப்பிரசுரங்கள்
விசிற்றிங் கார்ட்
CD கவர், ஸ்ரிக்கர்
அழைப்பிதழ்கள்
Colour
போன்றவற்றை உலகத்தரம் வாய்ந்த பிரதியாக்கல்களாக மிகக் குறைந்த கட்டணத்தில் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள........
அச்சகதாரர்களுக்கு விசேட விலைக்கழிவு
MOORTHY DIGITAL
021 222 1358
60/20 STANLEY ROAD,
JAFFNA.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





**அனுராதை**
(தேசிய மட்டத்திலான தமிழ்த்தின குறுநாடக எழுத்தாக்கப் போட்டி - 2016 முதலாம் இடம்பெற்றமை)

**தக்ஷனா**
(தேசிய மட்டத்திலான பசும்பால் நுகர்வைப் பிரபல்யப்படுத்துதல் தொடர்பான தொலைக்காட்சி கைப்பிரதி ஆக்கப் போட்டி - 2015 - முதலாம் இடம்பெற்றமை)

Congrats

எமது பாடசாலை மாணவி செல்வி அனுராதை ஜெயசோதி 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய மட்டத்திலான தமிழ்மொழித்தின குறுநாடக ஆக்கப்போட்டியில் முதலாமிடம் பெற்றுள்ளார். இவரையும் வழிப்படுத்திய ஆசிரியர் திருமதி பா.சுவேந்திரன் அவர்களையும் பாராட்டுகின்றோம். 2015இல் நடைபெற்ற பாடசாலை மாணவர்கள் மத்தியில் பசும்பால் நுகர்வைப் பிரபல்யப் படுத்துதல் தொடர்பான தொலைக்காட்சி கைப்பிரதியாக்கப் போட்டியில் எமது மாணவி செல்வி தக்ஷனா துரைசிங்கம் தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெற்றுள்ளார். இவரையும் வழிப்படுத்திய ஆசிரியர் செல்வி பூ.ஜெயமலர், அதிபர் திருமதி க.சுலபாமதி ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- பாடசாலைச் சமூகம் -
யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்,சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி திருமண சேவை

மணமகள்மாருக்கு பதிவுக் கட்டணங்கள் இலவசம்.
(21.09.2016 தொடக்கம் 2.10.2016 வரை) எம்மிடம்
ஏராளமான ஜாதகங்கள் போட்டோக்களுடன் உள்ளன. நீங்கள்
விரும்பும் மணமகனையோ/ மணமகளையோ மிகப்
பொருத்தமாக உடன் தெரிவு செய்து தரப்படும். (சி.2300)(12.18)

383/14B , கோயில் வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்
(நல்லூர் கோயிலுக்கு வடக்குப் பக்கம்)
021 222 9306, 077 138 7596
Email:- nakapoosanywedding@gmail.com

## தொடர்மாடி குடியிருப்புக்கள் & வீடுகள்

சகலவித தளபாடங்களுடன் தளிருட்டப்பட்டவை

குறுகியகால வாடகைக்கு 30றகும் மேற்பட்ட வீடுகள்



கொள்ளுப்பிட்டி
வெள்ளவத்தை
தெஹிவளை
பம்பலப்பிட்டி

24/7 Security
Air Condition
Fully Furnished

நாள், வார, மாத வாடகைக்கு
1, 2, 3 படுக்கையறைகளுடன்

info@colomboapartments.lk
HOTLINE 011 480 1818 / 077 354 0632 / 077 633 2580
www.colomboapartments.lk

## மேல்நீதிமன்றம் - யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

யாழ்.மேல்நீதிமன்ற வலயத்துக்குட்பட்ட நீதிமன்ற வளாகங்களில் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்குரிய (2017) கேள்விப் பத்திரங்கள் தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

01. யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகம்
02. மல்லாகம் நீதிமன்ற வளாகம்
03. சாவகச்சேரி நீதிமன்ற வளாகம்
04. ஊர்காவற்றுறை நீதிமன்ற வளாகம்
05. பருத்தித்துறை நீதிமன்ற வளாகம்
06. யாழ்ப்பாணம் சிறுவர் நீதிவான் நீதிமன்றம்

எனவே சுத்திகரிப்புப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விவரங்களையும் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றக் கணக்காளரிடம் ஒவ்வொரு நீதிமன்ற வளாகத்துக்கும் தனித்தனியே மீளளிக்க முடியாத வைப்பாக ரூ.100/= ஐயும், மீளளிக்கக் கூடிய வைப்பாக ரூ.25,000/= ஐயும் செலுத்தி 20.10.2016 வியாழக்கிழமை நண்பகல் 12 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் 20.10.2016 பிற்பகல் 1.30 மணிவரை ஏற்றுக்கொள்வதுடன் பிற்பகல் 2.00 மணிக்கு விலை மனுக்கள் கேள்விதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒவ்வொரு நீதிமன்றங்களுக்கும் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காகத் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

**மா.இளஞ்செழியன்,**
மேல்நீதிமன்ற நீதிபதி / தவிசாளர்,
மேல்நீதிமன்ற பெறுகைக்குழு, மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

**கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா**
**கற்கைநெறி முழுநேரம்**
**முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் - 2015**

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் 17.10.2016 ஆம் திகதி முதல் 26.10.2016 ஆம் திகதிவரை நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 28.09.2016 ஆம் திகதிமுதல் 30.09.2016 ஆம் திகதிவரை கல்வித்துறை அலுவலகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பங்களை கல்வித் துறை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சார்த்திகள் பரீட்சைக்கட்டணத்தினை பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம். பற்றுச்சீட்டை பரீட்சை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் .
26.09.2016
(சி.2638) (13.18.17)

## விற்பனைக்கு

வடலியடைப்பு, பெரிய மதவடியில் பிரதான வீதியோடு, 5 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு தரகர் வேண்டாம்.

077 513 7324, 077 301 7503

## அறைகள் வாடகைக்கு

யாழ்ப்பாணக் கச்சேரிக்கு அருகில் பெண் பிள்ளைகள் தங்குவதற்கு அறைகள் வாடகைக்கு உள்ளன.

077 989 4594, 075 077 7503

## பொது மற்றும் ஆங்கில ஆசிரியர் தேவை

உடனடியாக ஆவணங்களுடன்
தொடர்புகொள்ளவும்
திருநெல்வேலி சிமாட் கிட்ஸ்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
தொ.பே. 077 386 7458
021 205 2262

## விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

# தனியார் மருத்துவக் கல்லூரிகள் நாட்டுக்கு மிகவும் அவசியம்

## உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 28

நாட்டுக்குத் தனியார் மருத்துவக் கல்லூரிகள் மிகவும் அவசியம் என உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். கண்டியில்நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

உயர்தரத்தில் சித்திபெறும் 20 வீதமானோரே பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாவதாகவும், மிகுதி 80 வீதமானோருக் குப் பல்கலைக்கழக வாய்ப்பு இல்லாமல் போவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தனியார் பல்கலைக் கழகங்களை ஆரம்பிப்பதற்கு எமக்கு வாய்ப்பு இருந்தும், நாம் அதனைச் செய்யாது மாணவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகவும் அமைச்சர் கூறினார்.

தனியார் பல்கலைக்கழகங்கள் 10 தொடக்கம் 15 வரையில் ஆரம்பிக்கப்படுமானால், பெருமளவான பணத்தை எமது நாட்டில் சேமிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். நாம் இவையாவற்றையும் செய்வது நாட்டுக்காக என்றும்- பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 7 பீடாதிபதிகள் தன்னை வந்து சந்தித்து இதற்கு முழு ஒத்துழைப்பு நல்குவதாகத் தெரிவித்துள்ளனர் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த)

## பணியாளர் தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல நகைவியாபார நிலையத்துக்கு விற்பனையாளர் உடன் தேவை. (சி.26436) (13.18)

தொடர்பு: 075 042 2389

## காணி விற்பனைக்கு உண்டு

பெரியவிளான் ¼ kmருக்கு அருகில் உள்ள தெல்லிப்பழை வீதியில் மெயின்றோட் அருகில் வற்றாத வெட்டுக் கிணற்றுடன் 40 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பகுதியாகவும் விற்கப்படும்.

தொடர்புகளுக்கு
ம.அருளப்பு- 077 945 9186

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அணிகளுக்கான புகைப்படம் - 2016

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அணிகள் மற்றும் விளையாட்டு அவைக்கான 2016ஆம் ஆண்டுக்கான புகைப்படங்கள் 01.10.2016 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் எடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விளையாட்டு அணிகள் மற்றும் விளையாட்டு அவை அங்கத்தவர்களைத் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

- பதிவாளர் -
(சி/26437) (11.17.18)

ZOA
RELIEF | HOPE | RECOVERY

ZOA has been operating in Sri Lanka for the past 20 years, first in relief and rehabilitation, and now in facilitating longer-term, sustainable socio-economic development initiatives in the North and East.

## Vacancy: Project Officer (based in Mannar)

We are looking for a dynamic, innovative and dedicated individual who will work with us to promote and enhance the lives and livelihoods of the communities we serve.

### Key Responsibilities

- Be a supportive member of a team of ZOA staff involved in the project
- Work closely with marginalized communities and community networks
- Maintain a regular presence in the field to support staff and community member sinachieving targets
- Network widely with stake holders focused on community enhancement
- Build capacity of women and empower them to engage in governance and politics
- Support community-based women's groups (Self Help Groups) in multiple activities including savings and credit, and motivate members to be involved in reconciliation and peace building
- Strengthen women's groups to take on issues related to women's rights, including labour rights
- Raiseaware nessonaccountability and transparency, and empower community members to hold leaders and high-placed authorities to account

### Experience and skills required

- Minimum 2 years working experience in project implementation
- Knowledge on areas of concern in community enhancement and the development sector
- A grasp of the situation on the ground in the North of Sri Lanka
- Ability to multi-task and support overall management of ZOA's Northern programmed
- Must be fluent in Tamil and conversant in English (knowledge of Sinhala will be an added advantage)
- A valid motorcycle license and willingness to conduct field visits in a cost-effective manner

ZOA strongly encourages application from female and minority candidates. Please send in your CV with a cover letter to jobs@zoasrilanka.org before 2nd October - 2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் நான்கு தீர்மானங்கள்

## 281 திட்டங்களுக்கும் அனுமதி

யாழ்ப்பாணம், செப். 28

நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் 4 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 2 ஆயிரத்து 997 மில்லியன் ரூபா பெறுமதியான 281 திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் காலை 9 மணிக்கு, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, நியமன நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் ஆகியோர் தலைமையில் ஆரம்பமானது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் ஆரம்பத்தில், நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்களுக்கான சபையின் அனுமதி கோரப்பட்டது. அவற்றுக்கு அனுமதி வழங்கப்பட்டது. தொடர்ந்து துறைசார் ரீதியான ஆராய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. நான்கு தீர்மானங்கள் இதன் போது எடுக்கப்பட்டன.

வடக்குக்கு வழங்கப்படும் என்று வாக்குறுதியளித்த 65 வீட்டுத் திட்டத்திற்குப் பதிலாக கல் வீடுகளை வழங்க வேண்டும், கொழும்பு அரசால் மேற்கொள்ளப்படும் அன்னாசித் செய்கைத் திட்டத்தைப் போன்று மாகாணம் முன்னெடுக்கப்படும் திட்டமும் இலவசமாக இருத்தல் வேண்டும், வீதி அபிவிருத்தி அதிகார சபை ஒப்பந்தங்களை வழங்கும் போது எந்தத் திட்டமானாலும் கேள்வி கோரலின் பிரகாரம் மட்டுமே வழங்கப்பட வேண்டும், வடமராட்சி கிழக்குப் பகுதியில் மருதங்கேணி உப தபாலகத்தினை முதன்மைத் தபாலகமாக தரம் உயர்த்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ற-5,101)

# மின்தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், செப்.28

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்தார்.

வவுனியாவில் தெற்கிலுப்பைக்குளம் கிராமத்திலும், மன்னாரில் அரிப்பு, சவேரியார்குளம், வெள்ளிமலை, CECB ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும். (ற-ரி)

## காணவில்லை

முக்கொம்பன், பூநகரி, 65வீட்டுத்திட்டத்தைச் சேர்ந்த **கணேஷ் லவகுசன்** என்பவர் கடந்த 12.08.2016 அன்று காணாமல் போயுள்ளார். இவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.



**076 538 8283/ 077 383 4078**

## BA, Bcom, B.BA (Medium Tamil)

### இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்,ஒலுவில் (வெளிவாரி)

- ✓ மேற்படி பல்கலைக்கழகத்தினால் A/L 2015உடம் இதற்கு முன்னைய வருடங்களில் பரீட்சை எடுத்தவர்களுக்கான புதிய பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- ✓ கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவர்.
- ✓ பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- ✓ பதிவுகள், கருத்தரங்குகள், பரீட்சை என்பன யாழ்ப்பாணத்திலேயே நடைபெறும்.
- ✓ விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
- ✓ மேற்கூறப்பட்ட பட்ட நெறிகளின் கால எல்லை மூன்று ஆண்டுகளாகும்.

**குறிப்பு:- விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கான (ஆண், பெண் இருபாலருக்கும்) பாதுகாப்பான தங்குமிட வசதி இலவசம்.**

**021 222 8148, 021 568 9477 077 846 9721, 077 607 1954**

விவரங்களுக்கு:-
S.அருள்நங்கை (நிர்வாகி)
**புதிய உயர்கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சு/26430)
(11.18)

வடமாகாண அரசாங்க நிர்மாண நிர்மாணிகள் சங்கம்

## மீள்புனரமைப்பு பொதுக்கூட்ட அறிவித்தல்

**மேற்படி எமது சங்கத்தின் மீள்புனரமைப்பு பொதுக்கூட்டமானது எதிர்வரும் 30.09.2016ம் திகதி (வெள்ளிக்கிழமை) யாழ்ப்பாணம் பொதுநூலக மாநாட்டு மண்டபத்தில் மு.ப. 10.00 மணிமுதல் நடைபெறவுள்ளது. நிகழ்வின் பிரதம அதிதியாக மாண்புமிகு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார். எனவே வடமாகாணத்திலுள்ள அனைத்து அரச பதிவுள்ள (CIDA/ICTAD) நிர்மாணிகளும் இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இக்கூட்டத்திற்கு தவறாது சமூகமளிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.**

### நிகழ்ச்சி நிரல்

| நேரம் | நிகழ்வு |
|---|---|
| 09.30 - 10.00 | அங்கத்தவர்கள் வரவும் பதிவு செய்தலும் |
| 10.00 - 10.10 | விருந்தினர்கள் வருகை / அழைப்பு |
| 10.10 - 10.15 | மங்கள விளக்கேற்றல் |
| 10.15 - 10.20 | இறை வணக்கம் |
| 10.20 - 10.40 | ஒருங்கிணைப்பாளர்களின் தலைவர் உரை |
| 10.40 - 11.25 | சிறப்பு விருந்தினர்கள் உரை |
| | **கௌரவ அங்கஜன் இராமநாதன்** நாடாளுமன்ற உறுப்பினர் |
| | **கௌரவ மாவை சோமசுந்தரம் சேனாதிராஜா** நாடாளுமன்ற உறுப்பினர் |
| | **திருமதி.விஜயகலா மகேஸ்வரன்** கௌரவ நாடாளுமன்ற உறுப்பினரும், மகளிர் விவகார இராஜாங்க அமைச்சரும் |
| 11.25 - 11.40 | பிரதம விருந்தினர் உரை |
| 11.40 - 12.00 | புதிய நிர்வாகசபை தெரிவு |
| 12.00 - 01.15 | தொழிநுட்ப அமர்வு- அனுசரணையாளர்களது விளம்பர நிகழ்வுகள் |
| 01.15 - 01.20 | நன்றியுரை.. தொடர்ந்து மதிய போசன விருந்துபசாரம் |

தொடர்புகளுக்கு : சி. குகதாசன் - 077 1882545 / சி.சுந்தரலிங்கம் - 077 3369578

**நிகழ்வு அனுசரணை :**

TOKYO CEMENT GROUP · meTecno METECNO LANKA (PVT) LIMITED · METROOF Total Roofing Solutions · Official Printing Sponsor Harikanan PRINTERS OF THE NORTH · SEYLAN BANK PLC The bank with a heart · Rocell Eternal elegance · சிற்றி ஹாட்வெயர் · Everpure Hi-Tec (Pvt) Ltd. · NHT Narayana Hardwares Trader

edexcel · PEARSON · CIOB · RICS




SPECIAL OFFER UNTIL 30[th] SEPT. 2016 SPECIAL OFFER

Sharpen your **skills** with **BCAS** today for **Colourful Careers** tomorrow

**UGC** அங்கீகாரம் கொண்ட **UK Degree** இனை யாழ்ப்பாணத்தில் பூர்த்தி செய்யும் வாய்ப்பு

- ENG **ENGINEERING** Civil & Construction, Telecommunication, Electrical | Electronics
- BM **MANAGEMENT** Business Management | Marketing, Human Resource Management
- IT **COMPUTING & SYSTEM DEVELOPMENT**
- BMS **BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY**
- LLB **LAW**
- QS **QUANTITY SURVEYING**

*BA (Hons) / BSc (Hons) / BEng (Hons) & LLB (Hons)*

UGC Recognized TVEC Approved

**BCAS CAMPUS** BRITISH COLLEGE OF APPLIED STUDIES

JAFFNA 077 710 2131 / 077 960 3753
COLOMBO 077 283 4595

18 YEARS

**Jaffna Campus** 16, Point Pedro Road, Jaffna

ISO 9001:2008 CERTIFIED

HOTLINE : 021 2219910 | Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பாமதி அமிர்தகுமார்

தோற்றம் 13.09.1970 மறைவு 28.09.2014

பண்புடனே பரிவையீந்து
பாசமுடன் கல்வி கொடுத்து
உறவுகளுக்குக் கரம் கொடுத்து
ஊருக்கெல்லாம் உதவி செய்து
பந்தமெல்லாம் பரந்து அணைத்து
பாதியிலே பரமனையடைந்தீர்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


பொன்னாலை - தெற்கு,
சுழிபுரம்.

பரிதவித்து உழலும்
குடும்பத்தினர்.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் நடராஜா கனகலிங்கம்

(மர அரிவு காலை, மரக்காலை உரிமையாளர்)



வளர்த்தெடுத்து அறிவூட்டி
ஆளாக்கி வைத்துவிட்டு
அவசரமாய் ஏன் அப்பா
அவனிவிட்டு சென்றீர்கள்?
ஆண்டுகள் ஆறென்ன ஆயிரம்தான்
கடந்தாலும் ஆறாது எம் இதயம்

திதி: திரயோதசி (25.09.2016)

குடும்பத்தினர்.
42/1, அராலி வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

(6ல/4932) (11,17,18)

தோற்றம் 28.06.1958 மறைவு 06.09.2010

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 07 . 02 . 1945



மறைவு 29 . 08 . 2016

### அமரர் மயில் இராஜயோகன் இராஜராஜேஸ்வரி

எமது அன்பின் குடும்ப விளக்கு எம்மை விட்டுப் பிரிந்து
ஒரு மாதமென்ன ஓராயிரம் ஆண்டானாலும் உமை நாம் மறவோம்

வட்டுதெற்கு,
வட்டுக்கோட்டை.

(6ல/4902)(11,18)

குடும்பத்தினர்.

## பதினோராம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

### பொன்னுத்துரை சரவணபவன்

(ராசா - மண்டைதீவு -6)

திதி: அபரபக்கதிரயோதசி



அன்னை மடியில் 1953.04.26
ஆண்டவன் அடியில் 2005.10.01

பாதியிலே எமை விட்டு பரமனிடம் சென்று
நீங்கள் பதினோர் ஆண்டுகள் வந்தது அப்பா
படைத்தவன் செயலில் அழிப்பதும் அவன் செயலே !
பசியாற புசிக்கின்றோம் பகல் இரவு காண்கின்றோம்
எம்முடனே நீங்கள் இன்றி ஏங்கி ஏங்கி வாழ்கின்றோம்
எந்தையே ! காலம் கடுகதியில் செல்கின்றதே !
காத்திருக்கும் எம் நினைவும் கானல் நீர் ஆகின்றதே !
நிலையில்லா வாழ்வில் நிலையான சுகம் நாடி சென்றவரே !
தில்லைக்கூத்தன் திருவடியில் நின் ஆத்மா சாந்தி பெற
வேண்டுகின்றோம் நாளெல்லாம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

59, பொற்பதி வீதி,
கொக்குவில்.

நின் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

## அதிகளவு சாராயம் வைத்திருந்தவருக்கு தண்டம் விதிப்பு

தென்மராட்சி, செப்.28

நிர்ணயிக்கப்பட்ட அளவை விடக் கூடுதலாகக் கொண்டு செல்லப்பட்ட சாராயப் போத்தல்களைப் பறிமுதல் செய்ய உத்தரவிட்டதுடன், குறித்த நபருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்தது சாவகச்சேரி நீதிமன்று.

ஒருவர் பத்துப் போத்தல்கள் சாராயம் கொண்டு செல்ல அனுமதி உள்ளபோதிலும் 11 போத்தல்கள் சாராயம் கொண்டு சென்ற வேளையில், பொலிஸாரிடம் குறித்த நபர் அகப்பட்டார். அவருக்கு எதிராக சாவகச்சேரிப் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் நிர்ணயிக்கப்பட்ட அளவை விடக் கூடுதலாக அரச சாராயம் கொண்டு சென்றார் எனக் குற்றஞ்சாட்டி வழக்குத் தாக்கல் செய்யப் பட்டது. (ற-9)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நினைவு மலர் வெளியீடும்

மலர்வு 13.08.1949
உதிர்வு 11.08.2016



### அமரர் சபாரத்தினம் தர்மரத்தினம்

(ஓய்வுநிலை சிரேஷ்ர சாலைப் பரிசோதகர் - இ.போ.ச.,
தலைவர் - அல்வாய் சாமணந்தறை
ஆலடிப்பிள்ளையார் ஆலயம்)



*அன்பின் உருவமாய் ஆளுமையின் சிகரமாய்*
*தர்மத்தின் உறைவிடமாய் பண்பின் இலக்கணமாய்*
*வீடு தேடி வந்தோர்க்கு இல்லை என்று சொல்லாதவரிற்கு*
*கொடுக்கக் கொடுக்க குறையாத அட்சய பாத்திரமாய்*
*கருவறையிலிருந்து கல்லறை வரையான வாழ்வுக்கு*
*முன்னுதாரணமாய் வாழ்ந்து*
*ஆலடிப் பாலகணபதியின் திருவடிகளில் சரண் புகுந்த பப்பாவே!*

கடந்த 11.08.2016 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.09.2016) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றுத் தொடர்ந்து 01.10.2016 சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையும், நினைவுமலர் வெளியீட்டு நிகழ்வும் கொற்றாவத்தை செட்டித்தறை சித்திவிநாயகர் கல்யாண மண்டபத்தில் இடம்பெற இருப்பதால் இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

'கலாகேந்திரா',
அல்வாய்,
077 396 5583

நீங்கா நினைவுடன்,
மனைவி - த.கலாவதி,
பிள்ளைகள் - வி.செந்தூரன், வி.குமரன்,
வி.துவாரகன்.

(6ல 4907)(11,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத் திறனாளிகளின் விவரங்கள் தரப்படாததால் திட்டங்களில் தாமதம்

## கிளி. மாவட்ட செயலாளர் கவலை

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகளுக் கான திட்டங்களை செயற்படுத் துவதற்கு மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளின் விவரங் கள் கோரப்பட்டன. அவை இது வரை கிடைக்கவில்லை.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமை நாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட தொழில் பயிற்சி அதிகார சபையால் மேற் கொள்ளப்பட்டு வரும் தொழில் பயிற்சி கற்கைநெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு தொழில் சார் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு அரச அதிபர் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது-

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளை ஊக் கப்படுத்தும் பொருட்டு பல்வேறு திட்டங்கள் என்னிடம் உள்ளன. கிளிநொச்சியில் கடமைகளைப் பொறுப்பெடுத்தபோது மாற்றுத் திறனாளிகளைச் சந்தித்திருந் தேன். அப்போது அவர்களுக் கான பல திட்டங்களை முன்னு ரிமை அடிப்படையில் முன்னெ டுத்துச்செல்வதற்கு முன்வந்து, கூட் டத்துக்கு வந்திருந்தவர்களிடம் மாற்றுத் திறனாளிகளுடைய முழுமையான தகவல்களை வழங்குமாறு கோரியிருந்தேன். இதுவரை எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை. அதை யிட்டு கவலை அடைகின்றேன். மாற்றுத் திறனாளிகளுக்கு முன் னுரிமை அடிப்படையில் பல் வேறு திட்டங்களை முன்னெ டுத்து செல்வதற்கு எப்போதும் தயாராகவே உள்ளேன்.

> இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுப்பதற்கு தொழில் சார் பயிற்சிகளையும், அதற்கான உபகரணங்களையும் வழங்குவது மாத்திரமன்றி, தொழில் வாய்ப்புக்களுக்காக காத்திருக்கும் இளைஞர், யுவதி களை இனம் கண்டு அவர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கு முன்னிற்க வேண்டும்.

தற்போது எமது இனம் சீரழிந்து போவதற்கு இளைஞர் யுவதி களுக்கு வேலை வாய்ப்புக்கள் இல்லாமையே பிர தான காரணம். இளை ஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப் பதற்கு தொழில் சார் பயிற்சிகளையும், அதற்கான உபகர ணங்களையும் வழங் குவது மாத்திரமன்றி, தொழில் வாய்ப்புக் களுக்காக காத்திருக் கும் இளைஞர், யுவதி களை இனம் கண்டு அவர்களுக்குப் பயிற்சி களை வழங்குவதற்கு முன்னிற்கவேண்டும்.

எதிர்காலத்தில் கிளிநொச்சி மாவட் டத்தில் இளைஞர் யுவதிகளை தொழில்சார் பயிற்சி நெறிகளுக்கு உள் வாங்கும் பொருட்டு அடை யாளம் காணும் செயற்பாடுகளில் நிறுவனங்கள் முன்னின்று செயற்பட வேண்டும் – என்றார்.

கிளிநொச்சி 55ஆம் கட்டை பகுதியில் அமைந்துள்ள தொழில் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற 14 மாற்றுத் திறனாளிகள் மற் றும் 16 இளைஞர் யுவதிகளுக்கு தொழில்சார் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ந-5,21,ரி,34)

# சலுகை மின்கட்டண ஆரம்ப விழா

யாழ்ப்பாணம், செப்.28

விவசாயிகளுக்கான சலுகை மின்கட்டண தேசிய ஆரம்ப விழா எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு நடைபெறவுள் ளது என்று இலங்கை மின்சார சபை வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர் யு.குண திலக தெரிவித்தார்.

சலுகை மின்கட்டணம் வழங் கும் திட்டம் தேசிய ரீதியில் அறி முகப்படுத்தப்பட்டுள்ளது. இந் தத் திட்டத்தின் மூலம் இலங் கையில் உள்ள சகல விவசாயி களும் பயன் பெறமுடியும். இந்தத் திட்டம் முதற்கட்டமாக வடமாகாணத்தில் ஆரம்பிக் கப்படவுள்ளது. விவசாயிகளுக் கான ஆரம்ப கட்டண விழா அன்று 25 பேர் இந்தத் திட்டத் தில் இணைத்துக் கொள்ளப் படவுள்ளனர்.

நீர்வேலி பொன் செல்வ மகால் அரங்கில் நடைபெறவுள்ள இந்த ஆரம்ப விழாவில் மின் வலு மற்றும் மீள் புத்தாக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம் பலாபிட்டிய தலைமை வகிக்க வுள்ளார் என அவர் தெரிவித் துள்ளார். (ந-ரி)

# உலக சிறுவர் தின நிகழ்வுகள்

தென்மராட்சி, செப்.28

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மாணவர் நாடாளுமன்றத்தால் உலக சிறுவர் தின நிகழ்வுகள் எதிர் வரும் முதலாம் திகதி மு.ப. 9.30 மணிக்கு வித்தியாலய மண் டபத்தில் நடத்தப்படவுள்ளது.

வித்தியாலய அதிபர் செ.பேரின் பநாதன் தலைமையில் நடை பெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக சிறுவர் பாது காப்பு அலுவலர் செல்வி தி.நட ராசாவும், சிறப்பு விருந்தினர் களாக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் ந.திரு விசாகனும், மக்கள் வங்கியின் கைதடிக் கிளை அலுவலர் திருமதி சுமணா ரமணகுமா ரும் கலந்து கொள்வர். (ந-9)

# பனம் கைப்பணி பயிற்சி நெறி

பனை அபிவிருத்தி சபை, முள்ளியவளையில் பனங் கைப் பணிப் பயிற்சியை ஆரம் பித்துள்ளது. பயிற்சி நெறிக்கு ஐம்பது வரையிலான பயனாளி கள் இணைக்கப்பட்டுள்ளனர். கடந்த திங்கட்கிழமை முள்ளி யவளை நாவற்காடு பொது நோக்கு மண்டபத்தில் இந்தப் பயிற்சி நெறி சம்பிரதாய பூர் வமாக ஆரம்பிக்கப்பட்டது.

பனை அபிவிருத்தி சபையின் முல்லைத்தீவு மாவட்ட இணைப் பாளர் பா.ரஜீதரன் பயிற்சி நெறியை ஆரம்பித்தார். பயிற்சி மூன்று மாதங்களுக்கு நடைபெறும்.

பயிற்சியின் நிறைவில் பயனா ளிகளுக்கு சான்றிதழ்கள், உபகரணங்கள், மூலப் பொருள் கள் என்பன வழங்கப்படும். பனை ஓலை, தும்பு, ஈர்க்கில் போன்ற வற்றில் இருந்து எவ்வாறு கைப்பணிப் பொருள்களைத் தயாரிப்பது சம்பந்தமான பயிற் சிகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-17)

# குருதிக்கொடை

பன்னாட்டு சிறுவர் தினத்தை முன்னிட்டு 1991 ஆம் ஆண்டு விமானத் தாக்குதலில் படு கொலை செய்யப்பட்ட கிளி நொச்சி இந்துக் கல்லூரி மாண வன் கனகசிங்கம் சத்தியமூர்த்தி யின் நினைவாக இன்று குருதிக் கொடை நிகழ்வு நடத்தப்பட வுள் ளது என்று கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் உயர்தர மாண வர்கள் தெரிவித்தனர்.

நிகழ்வு இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறஉள்ளது. கிளிநொச்சி இந்துக்கல்லூரி யின் உயர்தர மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர் கள், ஆசிரியர்கள், பொதுமக் கள் என பலரும் கலந்து கொள் ளவுள்ளனர் என்றும், இந்த உயரிய பணியில் அனைவரும் கலந்து கொள்ள முடியும் என்றும் கல்லூரிச் சமூகத்தி னர் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தியாலைப்பணிப் பாளர், வலயக்கல்விப்பணிப் பாளர், அமரர் சத்தியமூர்த்தி யின் தந்தை, நோயாளர் நலன் புரிசங்கத்தின் உபசெயலாளர், ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். (ந-ரி3)

# யாரும் உரிமை கோராத காரணத்தால் ராணுவத்துக்கு வழங்கப்பட்டது காணி

## மாந்தை கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் வெளியானது தகவல்

முல்லைத்தீவு, செப். 28

10 ஏக்கர் காணி பிரதேச செய லரால் இராணுவத்துக்கு வழங் கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் பாலிநகர் வித்தி யாலயத்துக்கு முன்பாக உள்ள காணியே வழங்கப்பட்டது. காணிக்கு எவரும் உரிமை கோராததால் இராணுவத்துக்கு வழங்கப்பட்டுள்ளது என்று தெரி விக்கப்படுகின்றது.

மாந்தை கிழக்குப் பிரதேச செய லக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் பிர தேசசெயலக மண்டபத்தில் நடை பெற்றது. அதில் இந்த விடயம் வெளிவந்தது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட் டத்தில் கல்வி தொடர்பான விட யங்கள் ஆராயப்பட்டன. வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் பாலிநகரில் இராணு வத்துக்கு காணி வழங்கிய விட யம் தொடர்பில் கேள்வி எழுப் பினார்.

பாலிநகர் மகா வித்தியால யத்துக்கு முன்பாக தனியாருக்கு சொந்தமான 10 எக்கர் காணி யில் இராணுவ முகாம் அமைந் துள்ளது. பாடசாலை மாணவர் களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. மக்கள் தங்களுடைய கருத்துக்களை வெளியிட முடியாத கால கட் டத்தில் பிரதேச செயலகத்தால் காணி இராணுவத்துக்கு வழங் கப்பட்டது. ஒரு பாடசாலைக்கு முன்பாக இராணுவ முகாம் அமைந்துள்ளது என்றால் அது இங்குதான். அதுவும் வேலிகள் மூடி அடைக்கப்பாது திறந்த நிலையில் கம்பிகளால் மட்டும் வேலி அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் உள நிலை அதனால் பாதிக்கப்படுகின்றது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

மக்கள் சுதந்திரமாக எதனையும் பேசமுடியாத நிலையில் எவ் வாறு காணிக்கு உரிமை கோர முடியும். இவ்வாறான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் வைத்து முடிவெடுக் கப்படவில்லை. பிரதேச செய லர்களும் நிர்ப்பந்தத்தில் காணி களை இராணுவத்திற்கு வழங் கியுள்ளனர். பாலிநகர் மகா வித்தியாலயத்துக்கு முன்பாக அமைந்துள்ள இராணுவ முகாமை உடனடியாக அகற்றி பாடசாலைச் சமூகத்தின் இயல் பான கல்விச் செயற்பாட்டுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.- என்று அவர் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு தலைமை தாங்கிய இணைத் தலைவர்களுள் ஒருவரான அமைச்சர் ரிசாத் பதியுதீன், பிரதேச செயலரிடம் மேற்படி விடயம் தொடர்பில் வினவினார்.

கடந்த காலங்களில் யாரும் காணிக்கு உரிமைகோரவில்லை. அதனால் காணி பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கப்பட்டது. தற்போது ஒருவர் அந்தக் காணிக்கு உரிமை கோருகின் றார். அவரிடம் இருந்த காணிக் கான ஆவணங்கள் போர்க் காலத்தில் தொலைந்து விட்டது. காணி தொடர்பான முடிவுகளை எடுக்க முடியாதுள்ளது- என்று மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் தெரிவித்தார்.

பாடசாலைக்கு முன்பாக இரா ணுவ முகாம் அமைந்திருக்க முடியாது. இராணுவ முகாமை அகற்றுவது தொடர்பில் அடுத்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என்று இணைத் தலைவர்களுள் ஒருவரான அமைச்சர் ரிசாத் தெரிவித்தார். (ந-5,21,ரி7)

# கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னும் 11.9 சதுர கி.மீ. பரப்பில் மிதிவெடிகள்

கிளிநொச்சி, செப். 28

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னமும் 11.9 சதுர கிலோ மீற்றர் பரப்பில் மிதிவெடிகள் அகற்றப்படவுள்ளன. ஆறு ஆண்டுகளுக்கு மேலாக மாவட் டத்தில் மிதிவெடி அகற்றும் நட வடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தில் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது. அதில் தெரிவிக்கப்பட்டதாவது-

போரில் ஈடுபட்ட இரு தரப்பி னரும் மாவட்டத்தின் பல பகுதி களில் வெடி பொருள்களை புதைத்துத் தமது பாதுகாப்பை பலப்படுத்தியிருந்தனர். புதைக் கப்பட்ட வெடி பொருள்கள் எங் கெங்கு புதைக்கப்பட்டுள்ளன என்பது பற்றிய ஆய்வுகளின் பின்னர் அவற்றை மீட்கும் நடவடிக்கை ஆரம்பிக் கப்பட்டது. 597.92 சதுர கிலோமீற்றர் பரப் பளவில் மிதிவெடிகள் புதைக்கப் பட்டுள்ளன என்று அடையாளப் படுத்தப்பட்டது. வெடி பொருள் களை அகற்றும் பணிகள் மேற் கொள்ளப்பட்டன. 582.47 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட பிரதேசத்தில் இது வரை வெடி பொருள்கள் அகற் றப்பட்டுள்ளன.

வெடி பொருள்கள் அகற்றப்பட்ட பிரதேசத்தில் இருந்து, ஒரு லட்சத்து 950 மிதிவெடிகளும், 438 கவச எதிர்ப்பு மிதிவெடி களும், 2 லட்சத்து 22 ஆயிரத்து 188 வெடிக்காத வெடி பொருள் களும் மீட்கப்பட்டன.

வெடிபொருள்கள் உள்ளன என்று அடையாளப்படுத்தப்பட்ட முகமாலை, ஜெயபுரம், வன் னேரி, பொன்னகர் போன்ற இடங்களில் வெடிபொருள்கள் அகற்றப்பட உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ந-5,21,ரி3)

# வாழைப்பழ விலையில் வீழ்ச்சி

சாவகச்சேரி, செப்.28

சாவகச்சேரி பொதுச் சந்தை யில் வாழைப் பழத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

தற்போது ஒரு கிலோ வாழைப் பழம் கிலோ 100 ரூபாவாக விற்பனை செய் யப்படுகிறது.

கடந்த வாரம் ஆவ ணிச் சதுர்த்தியின் போது கிலோ 250 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட வாழைப் பழம் தற்போது 100 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது என வும் அடுத்த வாரம் ஆரம்பமாகும் நவ ராத்திரி விழாவின் போது மேலும் விலை யில் வீழ்ச்சியடை யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் வாழைப்பழ உற்பத்தி வீழ்ச்சியடைந்ததால் தென்பகுதி மற்றும் வன்னிப் பிரதேசத்திலிருந்து தினமும் பெருமளவு வாழைக்குலைகள் வாகனங்களில் கொண்டு வரப்படுகின்றன. (ந-9)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தரத் தீர்வை எதிர்பார்க்கையில் சில அமைப்புக்கள் குழப்புகின்றன

## யாழ். வணிகர் கழகத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.28

தமிழ் மக்களுக்கான ஒரு நிரந்தரத் தீர்வை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம். எமது மக்களுக்கு நிரந்தர சமாதானம் தேவை. அதனை நாம் பெற்றுக்கொடுக்க பாடுபடவேண்டும். சமாதானத்தை குழப்புவதற்கு என்றே சில அமைப்புக்கள் செயற்படுகின்றன.

இவ்வாறு யாழ். வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரம் தெரிவித்தார்.

யாழ். வணிகர் கழகத்தால் மாற்றுத் திறனாளிகளான முன்னாள் போராளிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை யாழ். வணிகர் கழக மண்டபத்தில் நடைபெற்றது. அதில் தலைமை உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எமது இனம் இன்று சின்னாபின்னமாகி உள்ளது. எமக்குரிய முக்கிய பிரச்சினை போரால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு வாழ்வாதாரம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதே. இரண்டாவது எமது மண்ணில் அவர்களைப் பொருளாதார ரீதியில் முன்னேற்றவேண்டியுள்ளது. எமக்கு தேவைப்படுவது நிரந்தர சமாதானம். அந்த இலக்கை நோக்கித்தான் சென்றுகொண்டிருக்கின்றோம். எமது ஒரு சந்ததியை இழந்த நிலையில் வாழ்கின்றோம்.



முன்னாள் போராளிகள் தமது இனத்தின் விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள். அங்கவீனமுற்று தங்கள் வாழ்க்கையை இழந்த நிலையில் புதிய வாழ்க்கையை அமைப்பதற்கு முயன்றுகொண்டு இருப்பவர்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ். வணிகர் கழகம் தன்னாலான உதவிகளை செய்கின்றது. இந்த நிலையில் முன்னாள் போராளிகள் தங்களுக்கான வாழ்வாதாரத்தைத் தரும்படி கேட்டனர். எங்களைப் பொறுத்தவரையில் பெரிய அளவிலான வாழ்வாதார உதவிகளைச் செய்யமுடியாது. தங்கள் குழந்தைகளின் கல்வி வசதிக்காவது உதவி செய்யுங்கள் என்று கேட்டிருந்தனர். விழிப்புலனற்றுள்ள முன்னாள் போராளிகளின் குடும்பங்களில் 189 குழந்தைகளுக்கான கல்விக்கான உதவித் திட்டங்களை வழங்க முன்வந்துள்ளோம். வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க வெள்ளைப் பிரம்பு தினமான ஒக்ரோபர் 15 ஆம் திகதி அவர்களுக்கு தேவையான வெள்ளைப் பிரம்புகளை வாங்கிக் கொடுப்பதற்கு வணிகர் கழகம் தீர்மானித்துள்ளது. இனிவரும் காலங்களிலும் இவர்களுக்குத் தேவையான வசதிகளையும் செய்துகொடுப்பதற்கு தயாராக உள்ளோம்- என்றார்.

வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் தெரிவித்ததாவது:

பஸ்களில் அங்கவீனர்களுக்கு என இரண்டாவது ஆசனம் ஒதுக்கப்பட்டு உள்ளது. இங்குள்ளவர்கள் அதனைச் சரியாக பின்பற்றுவதில்லை. அங்கவீனர்கள் ஏறும் பட்சத்தில் பல மைல் தூரம் சென்றாலும் நின்றுகொண்டே செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. ஒரு சில நடத்துநர், சாரதிகள்கூட அதைக் கண்டுகொள்வதில்லை. வங்கிகளில் கூட எம்மை பெரிதாகக் கணக்கெடுப்பதில்லை. இந்த நிலை மாறவேண்டும்.

வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தைப் பொறுத்தவரையில் பிறந்த குழந்தைகள்போல் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். வன்னி மண்ணில் சாதாரண மக்களே கஷ்டப்படும் நிலையில் எம்மைப்போல் பார்வையற்றவர்கள் பல நெருக்கடிகளுக்கு மத்தியிலே வாழ்கின்றனர். இந்தச் சங்கமானது விழிவலுவற்றவர்களை ஒன்றிணைத்து செயற்படுகின்றது. விழிப்புலன் இழந்தோர் சுயகௌரவத்துடன் வாழவேண்டும். சங்கத்தில் 268 பேர் உள்ளார்கள். அவர்களில் 90 வீத மாணவர்கள் சமூகத்தின் தேவைக்காகப் புறப்பட்டு தம்மையே அழித்துக் கொண்டவர்கள். இந்த தேவை நிறைவேறியதோ? இல்லையோ? இரண்டாவது பிரச்சினை. அந்தத் தேவை நிறைவேறவேண்டும் என்ற நோக்கத்துக்காக தமது அவயவங்களை இழந்து நிற்கிறார்கள். சமுதாயத்தின் தேவையின் பொருட்டு சென்றவர்களின் எச்சங்களாக இன்று உலாவருகின்றார்கள். அவர்களை எவராலும் அழிக்க முடியாது. அவர்கள் இறைவனால் படைக்கப்படும்போது முழுமையாக படைக்கப்பட்டார்கள். சமுதாயத்தின் தேவை கருதிச் சென்றதன் பின்னரே அங்கவீனர்களாக மாறினார்கள். அவயவங்களை இழந்து நிற்பவர்களை இந்தச் சமுதாயம் ஒதுக்கிவிட்டு செல்லலாகாது. இவர்கள் தமது வீட்டுத் தேவைக்காகச் செல்லவில்லை. இந்த நாட்டின் தேவைக்காகச் சென்றவர்கள். அதை உணர்ந்து விழிப்புலனற்று அவதிப்படும் எமக்கு உதவ முன்வரவேண்டும். பல இடங்களில் நாம் எமது அங்கவீனத்தால் பாதிக்கப்படுகின்றோம். உங்களில் ஒருவராக எங்களை ஏற்றுச் செல்லுங்கள். இவர்களுக்கு இன்னொருவரின் உதவி அவசியம் தேவைப்படுகின்றது. இவர்களின் பொருளாதாரம் மிகவும் அவசியமாகவும்- அதிகமாகவும் தேவைப்படும் நிலையிலும் உள்ளது. அவர்களை அரவணைத்துச் செல்லுங்கள்.

விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு என நிரந்தரக் கட்டடம் இல்லை. தற்போது 4 ஆவது இடம் மாறி உள்ளோம். நிரந்தர இடம் அமைய வேண்டும். ஒக்ரோபர் 15 ஆம் திகதி வெள்ளைப்பிரம்பு தினம் கொண்டாடப்படுகிறது. அந்தத் தினத்தில்தான் எம்மை நாம் அடையாளப்படுத்திக் கொள்கின்றோம். அந்தத் தினம் செய்வதற்கு எமக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்- என்றார். (ற-ரி)

# யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3 ஆயிரம் வீடுகள் நிர்மாணம்

## மீள்குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில்

யாழ்ப்பாணம், செப். 28

யாழ். மாவட்டத்தில் மீள்குடியேற்ற அமைச்சால் தலா 8 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 3 ஆயிரத்து 265 வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன. வீட்டுத் திட்டப் பணிகளை அடுத்த மாத இறுதிக்குள் முழுமைப்படுத்துமாறு மாவட்டச் செயலர் இறுக்கமான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

நெடுந்தீவு பிரதேசத்துக்கு 50 வீடுகளும், வேலணை பிரதேசத்துக்கு 84 வீடுகளும், ஊர்காவற்றுறை பிரதேசத்துக்கு 101 வீடுகளும், காரைநகர் பிரதேசத்துக்கு 81 வீடுகளும், யாழ்ப்பாணத்துக்கு 221 வீடுகளும், நல்லூருக்கு 103 வீடுகளும், சண்டிலிப்பாய்க்கு 157 வீடுகளும், சங்கானைக்கு 122 வீடுகளும், உடுவிலுக்கு 167 வீடுகளும், தெல்லிப்பழைக்கு 890 வீடுகளும், கோப்பாய்க்கு 325 வீடுகளும், சாவகச்சேரி 308 வீடுகளும், கரவெட்டி 211 வீடுகளும், பருத்தித்துறை பிரதேசத்துக்கு 133 வீடுகளும், மருதங்கேணி பிரதேசத்துக்கு 312 வீடுகளுமாக 3 ஆயிரத்து 265 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 48 வீடுகள் இதுவரையில் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளன. ஆயிரத்து 473 வீடுகளின் கூரை வேலை நிறைவடைந்துள்ளது. கூரை வேலை ஆரம்பிக்கும் நிலையில் ஆயிரத்து 253 வீடுகள் உள்ளன.

இந்த வீட்டுத் திட்டத்துக்காக 2 ஆயிரத்து 612 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ஆயிரத்து 964 மில்லியன் ரூபா மாவட்டச் செயலகத்துக்கு கிடைத்துள்ளது. (ற-5)

## கிளிநொச்சி மாவட்டத்தில் புதிதாக

# சமுர்த்திக் கொடுப்பனவுக்கு 13 ஆயிரம் பேர் விண்ணப்பம்

கிளிநொச்சி, செப். 28

கிளிநொச்சி மாவட்டத்தில் 13 ஆயிரத்து 113 பேர் சமுர்த்திக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குப் புதிதாக விண்ணப்பித்துள்ளனர். அவர்களுக்கான கொடுப்பனவுகள் இன்னமும் வழங்கப்படவில்லை என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடைபெற்றது. அதிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 11 ஆயிரத்து 740 குடும்பங்கள் சமுர்த்தி நிவாரணம் பெறுகின்றன. மேலதிகமாக 13 ஆயிரத்து 113 குடும்பங்கள் சமுர்த்திக் கொடுப்பனவுக்காக விண்ணப்பித்துள்ளன.

கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் 6 ஆயிரத்து 266 குடும்பங்கள் சமுர்த்திக் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்கின்றன. 6 ஆயிரத்து 510 குடும்பங்கள் புதிதாக விண்ணப்பித்துள்ளன.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 554 குடும்பங்கள் சமுர்த்திக் கொடுப்பனவுகளை பெறுகின்றன. 2 ஆயிரத்து 200 குடும்பங்கள் புதிதாக விண்ணப்பித்துள்ளன.

பளை பிரதேச செயலாளர் பிரிவில் 911 குடும்பங்கள் சமுர்த்திக் கொடுப்பனவுகளைப் பெறுகின்றன. ஆயிரத்து 507 குடும்பங்கள் புதிதாக விண்ணப்பித் துள்ளன.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 9 குடும்பங்கள் சமுர்த்திக் கொடுப்பனவுகளை பெறுகின்றன. 2 ஆயிரத்து 896 குடும்பங்கள் புதிதாக விண்ணப்பித்துள்ளன.

ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான சமுர்த்திக் கொடுப்பனவை 2 ஆயிரத்து 820 குடும்பங்களும், 2 ஆயிரத்து 500 ரூபா சமுர்த்திக் கொடுப்பனவுகளை 2 ஆயிரத்து 15 குடும்பங்களும், 3 ஆயிரத்து 500 ரூபா சமுர்த்திக் கொடுப்பனவுகளை 6 ஆயிரத்து 905 குடும்பங்களும் பெற்றுக் கொள்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-5,21,ரி3)

# இந்தியாவிலிருந்து நாடு திரும்ப 2 ஆயிரம் பேர் தயார் நிலையில்

## இலங்கை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 28

தமிழகத்தில் தங்கியுள்ள 2 ஆயிரத்து 508 ஈழ அகதிகள் நாடு திரும்புவதற்கு தயாராக உள்ளனர் என்று இலங்கை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தெரிவித்தது. ஏற்கனவே தாயகம் திரும்பிய அகதிகளின் வாழ்வாதார நிலமைகள் தொடர்பிலும் வடக்கு மாகாண ஆளுநர் கூரே, மாவட்டச் செயலர்களுடன் முக்கிய சந்திப்பு நடத்தினார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் காலை வடக்கின் 5 மாவட்டங்களினதும், மாவட்டச் செயலர்களுடன் சிறப்புக் கலந்துரையாடல் நடைபெற்றது.

2011 ஆம் ஆண்டிலிருந்து ஓகஸ்ட் மாதம் நடுப் பகுதி வரையில் ஆயிரத்து 854 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 564 பேர் இந்தியாவில் இருந்து வடக்கு மாகாணத்துக்கு திரும்பி வந்துள்ளனர். அவர்களில் யு.என்.எச்.சி.ஆர். ஊடாக ஆயிரத்து 295 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 494 பேரும், நேரடியாக 559 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 70 பேருமாக நாடு திரும்பியுள்ளனர்.

நாடு திரும்பிய அகதிகளுக்கான வாழ்வாதார வதிவிட வசதிகள் எவ்வாறு வழங்கப்பட்டுள்ளன என்பது தொடர்பில் ஆளுநரின் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. காணிகள் இல்லாத அகதிகளுக்கு உடனடியாக காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இதனை விட 2 ஆயிரத்து 508 அகதிகள் நாடு திரும்புவதற்கு தயாராக இந்தியாவில் நலன்புரி நிலையங்களில் உள்ளனர் என்று இலங்கை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. (ற-5,10ி)

## மாணவ முதல்வர் தினமும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், செப்.28

யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் மாணவ முதல்வர் தினமும், மலர் வெளியீடும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் சபாலிங்கம் அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர் க.நீலகண்டனும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் கு.குருபரனும் கலந்து கொள்வர். (ற-ரி)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 28

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும், நிறுவுநர் நினைவு தினமும் நாளை மறுதினம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும், கௌரவ விருந்தினராக இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜனும் கலந்து கொள்வர். (ற-ரி)

## கலை விழா

யாழ்ப்பாணம், செப். 28

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் திக்கம் பாலர் பாடசாலை மாணவர்களின் வருடாந்த கலைவிழா இன்று புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

திக்கம் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு திக்கம் பாலர் பாடசாலைப் பணிப்பாளர் திருமதி இந்திராணி ஸ்ரீரங்கன் தலைமை வகிக்கவுள்ளார்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரும், சிறப்பு விருந்தினராக வல்வெட்டித்துறை நகர சபை உத்தியோகத்தர் செ.சுதாகரனும் கலந்து கொள்ளவர். (ற-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகாமைத்துவ உதவியாளர்களுக்கான இடமாற்றப் பட்டியல்

யாழ்ப்பாணம், செப்.28

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் பணிபுரியும் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான வருடாந்த இடமாற்றல் பட்டியல் யாழ்.மாவட்டச் செயலகத்தால் அனுப்பப்பட்டுள்ளது.

பிரதேச செயலகங்களில் 7 வருடங்களுக்கு மேலாகத் தொடர்ச்சியாகக் கடமையாற்றும் அலுவலர்களே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 2017 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இடமாற்றத்துக்கான மேன் முறையீடு செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## முதியோர் தின ஆரம்ப நிகழ்வு

தென்மராட்சி, செப்.28

கைதடி சாந்தி நிலையத்தில் சர்வதேச முதியோர் வாரத்தின் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

நிலைய அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண முதலமைச்சரின் செயலாளர் திருமதி வி.கேதீஸ்வரனும், முதலமைச்சர் செயலக நிர்வாக அலுவலர் ஜோன் லோரன்ஸும், கௌரவ விருந்திணர்களாக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திர னும், யாழ். மாவட்டச் செயலக சமூக சேவைகள் அலுவலர் ஆ.சுரேஷ்குமாரும், கண்டாவளைப் பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் சு.ஜெயானந்தராசாவும், கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர் நா.கருணாகரனும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் கிளிநொச்சி சிவநகர் முதியோர் சங்கத்தின் வெளியீடான "மூதாளர் நலன் பேணுவோம்" என்னும் இசைப் பாடல் இறுவட்டு வெளியீடும் நிலைய முதியோர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (ற-9)

# வடக்கு மாகாண சபையின் சேவை முல்லைத்தீவுக்கு கிடைக்கவில்லை

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவநேசன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 28

வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளைப் பயனுள்ள விதத்தில் உணர்ந்து கொள்ள முடியாதவர்களாக முல்லைத்தீவு மாவட்ட மக்கள் உள்ளனர். மாகாண சபை கடந்த மூன்றாண்டுகளில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு குறிப்பிட்டுக் கூறக்கூடியதான எந்த அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை. இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினர் க.சிவநேசன் குற்றஞ்சாட்டினார்.

வடக்கு மாகாண சபையின் மூன்றாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது- வடக்கு மக்களின் பிரதிநிதிகள் சபை, மூன்றாண்டு காலத்தைப் பயனுள்ள விதத்தில் கடந்துள்ளதா என்ற கேள்வி தமிழ் மக்கள் அனைவரது மனங்களிலும் எழுந்துள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய எந்தவொரு அபிவிருத்தித் திட்டங்களும் மாகாண சபையால் முன்னெடுக்கப்படவில்லை. மாகாணசபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின்கீழ் முன்னெடுக்கப்படுகின்ற சிறிய அளவிலான செயற்திட்டங்கள் மாவட்ட அபிவிருத்தியில் மாற்றங்களைக் கொண்டுவரப் போதுமானவை அல்ல. மாவட்டத்தின் அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒருங்கிணைந்த வேலைத் திட்டங்கள் எதுவும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

அர்ப்பணிப்புடனும், தூர நோக்குடனும், சமூக அக்கறையுடனும் பணிபுரிகின்ற ஒரு பகுதி அதிகாரிகளின் செயற்பாடுகளை மதிப்பிறக்கம் செய்யும் வகையில் செயற்படுகின்ற பாரபட்சம், ஊழல், அசமந்தப் போக்கு போன்ற பண்புகள் நிறைந்த இன்னொரு தொகுதி அதிகாரிகளும்கூட இன்னமும் மாகாண சபையின் அதிகார மட்டங்களில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இவ்வாறான நிலமைகளை சீர்ப்படுத்த மாகாண முதலமைச்சர் தகுந்த அதிகாரிகளின் உதவியுடனும் சம்பந்தப்பட்ட பகுதி மாகாணசபைஉறுப்பினர்களின் ஆலோசனையுடனும் நடவடிக்கைக் குழுக்களை உருவாக்கி செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

மாங்குளத்தில் வட மாகாண சபையின்தலைமைப்பணிமனை வளாகம் என்ற பழைமையான மாகாண சபைத் தீர்மானம் கூட கிடப்பில் போடப்பட்டுள்ளது என்றே நாம் உணர்கின்றோம்.

வட மாகாண சபையையும் அதன் அரசியல் தலைமையையும் தமிழ் மக்கள் மிகவும் பலவீனமானதாக கருதுவதற்கு மிகவும் முக்கியமான காரணம் வேலைவாய்ப்புகளை வழங்குவதில் காணப்படுகின்ற மிகவும் தாழ்வு மட்டத்திலான நிலையாகும். வேலைவாய்ப்பு என்பதும் எமது மக்களின் குறிப்பாக இளைஞர்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். அவ்வுரிமை கொழும்பு அரசாலும், அதன் அமைச்சர்களாலும் மாவட்ட முகவர்களாலும் சமூக நீதிக்கெதிரான முறையிலும் தமிழினத்தை அழிக்கும் நோக்கிலும் மீறப்பட்டு வருகின்றது.

எஞ்சியுள்ள இரண்டு ஆண்டு காலத்தில், மாகாண சபையின் செயற்பாடுகளுக்கென கொழும்பு அரசின்மூலம்வழங்கப்படுகின்ற நிதி முழுமையாக பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தக் கூடிய பொறிமுறையை, செயற்பாட்டைப் புதிதாக முன்னெடுக்க வேண்டும்.

மாகாணத்தின் மக்கள் பிரதிநிதிகள் முதல் அதிகாரிகள் வரையிலும் அவர்கள் மீது ஆதாரத்துடன் முன்வைக்கப்படக் கூடிய ஊழல் மற்றும் பாரபட்சமான நிர்வாகம் சம்பந்தமான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட வேண்டும்.

மாவட்ட மட்டத்தில், இயலுமாயின் பிரதேச செயலக மட்டத்தில் மாகாணசபைப் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட பகுதி அதிகாரிகள் ஆகியோரை இணைத்து ஓர் ஆலோசனைக் குழுவை அமைத்து அதன் வழிகாட்டலில் அந்தப் பகுதியின் எதிர்காலத்திற்கான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக வணிகர் வளாகங்கள் உருவாக்கப்பட்டு உள்ளூர் விவசாயிகள், தொழிலாளர்கள், சிறு வியாபாரிகள், நடமாடும் வியாபாரிகளின் பங்களிப்புடன் அந்தப் பகுதி மக்களுக்குப் பயனுள்ள சேவைகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் சமூக மேம்பாட்டுக்கான செயற்திட்டங்களில் ஈடுபட்டுள்ள அனைத்து உள்ளூர் மற்றும் பன்னாட்டு அமைப்புகளை இயலுமானவரையிலும் ஒரு குடையின்கீழ் இணைத்து கலந்துரையாடல்கள் மூலம் தீர்மானங்களை மேற்கொண்டு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதன் மூலம் மாகாணத்தின் பரந்துபட்ட, சீரான அபிவிருத்தியை உறுதிப்படுத்த முனைய வேண்டும்.

ஜனாதிபதியுடனும் பிரதமருடனும் ஏற்படுத்தக்கூடிய இணக்கப்பாடு மூலம் வடக்கில் உள்ள கொழும்பு அரசின் துறைசார் வெற்றிடங்களை, மாகாண மற்றும் மாவட்ட விகிதாசாரம் மாறாத வகையில் அந்தந்த மாவட்ட இளைஞர்கள் மூலம் நிரப்புவதற்குரிய வழிவகைகளை கண்டுகொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்- என்றுள்ளது. (ற-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புலம்பெயர் ஈழத் தமிழர் ஜெனிவாவில் வீதிமறியல்

ஜெனிவா. செப் 28
புலம்பெயர்ந்துள்ள ஈழத்தமிழர்கள் ஜெனிவாவில் முன் னெடுத்துள்ள கவனவீர்ப்புப் போராட்டத்தின்போது இளைஞர்கள் வீதி மறியலில் ஈடுபட்டனர்.

இலங்கையில் நடைபெற்று முடிந்த இறுதிப் போரின்போது இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி வேண்டி புலம்பெயர் தமிழர்களால் பெரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் கணிசமான அளவு மக்கள் கலந்து கொண்டதுடன் தமிழர்களுக்காகப் பல கோசங்களையும் எழுப்பியதைக் காண முடிந்தது.

இதன்போதே போராட்டத்தில் ஈடுபட்ட குறித்த இளைஞர்கள் ஈழத்தமிழர்களுக்கு நீதி வேண்டி வீதிமறியலில் ஈடுபட்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (த)

# உத்தரவை மீறிய கமால் குணரத்ன

### ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க கோருகின்றார் சரத் பொன்சேகா

கொழும்பு, செப் 28
இராணுவத் தளபதியாக இருந்த தனது உத்தரவை நடைமுறைப்படுத்தத் தவறிய, அண் மையில் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவுக்கு எதிராக ஒழுக்காற்று நட வடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று கோரியுள்ளார் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

கொழும்பு வார இதழுக்கு அளித்துள்ள செவ்வியிலே அவர் இவ்வாறு கோரியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:-
2009 ஆம் ஆண்டு பிரபாகரன் கொல்லப்பட்ட பின்னர், அவரது அடையாள அட்டையையும், அடையாளத்தகட்டையும், கொழும்புக்கு அனுப்புமாறு நான் மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவுக்கு உத்தர விட்டேன். எனினும், அவை கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டதா என்பதை என்னால் அறிய முடியவில்லை.

பிரபாகரனின் அடையாள அட்டையை மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவே வைத்திருக்கிறார் என்பதை அவர் ஊடகங்களுக்குத் தெரியப்படுத்திய பின்னர் தான் எனக்குத் தெரியும். அதனை இராணுவ அருங்காட்சியகத்துக்கு வழங்கப் போவதாக அவர் கூறியிருக்கிறார்.

பிரபாகரனின் அடையாள அட்டையைக் கொழும் புக்கு அனுப்புமாறு நான் உத்தர விட்ட பின்னரும் அதனை அவர் எவ்வாறு வைத்திருக்க முடியும்?

இந்த ஒழுக்க மீறலுக்கு எதிராக, மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு தற்போதைய இரா ணுவத் தளபதியிடம் கோரவுள்ளேன்.

நந்திக் கடலுக்கான பாதை நூலில், பிரபா கரனின் உடலை ஒரு குழந்தையாலும் அடையாளம் காண முடியும் என்று மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், அதனை ஆதாரத்துடன்செய்யவேண்டியிருந்தது. இராணுவத்தில் இருந்த எவருமே பிரபாகரனை நேரில் கண்டதில்லை. அதனால் தான் பிரபாகரனின் உடலை அடையாளம் காணக் கருணாவை அனுப்பி வைத்தேன்.

அது மாத்திரமன்றி, பிரபாகரனின் உடல் மரபணுப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டது- என்றார். (த)




## ரமித் ரம்புக்வெலவின் லைசன்ஸுக்குத் தடை

கொழும்பு, செப் 28
இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர் ரமித் ரம்புக்வெலவின் சாரதி அனுமதிப்பத்திரத்தைத் தற்காலிகமாக இரத்துச் செய்யுமாறு நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மகனான ரமித் ரம்புக்வெல கடந்த 22 ஆம் திகதி, மதுபோதையில் காரைச் செலுத்தி மரம் ஒன்றில் மோதி விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுப் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

குறித்த விபத்து சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்றதோடு, அவதானமின்றி வாகனம் செலுத்தியமை, விபத்தைத் தவிர்க்காமை, போதையில் வாகனம் செலுத்தியமை, போலியான இலக்கத் தகட்டைக் கொண்ட வாகனத்தை ஓட்டிச் சென்றமை, மற்றுமொருவரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட வாகனத்தைச் செலுத்தியமை உள்ளிட்ட ஐந்து குற்றச்சாட்டுகளை முன் வைத்து, கறுவாத்தோட்டப் பொலி ஸாரால் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

விபத்து இடம்பெற்ற வேளையில் மேற்கொள்ளப்பட்ட பலூன் சோதனையில் அவர் போதையில் இருந்ததாக உறுதிப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த வழக்கு, கொழும்பு போக்குவரத்து நீதிவான் சந்தன கலங்சூரிய முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது குற்றச்சாட்டுகளின் முதல் இரண்டையும் தாம் ஒப்புக் கொள்வதாகவும், ஏனைய குற்றச் சாட்டுகள் தொடர்பில் தான் நிரபராதி எனவும் ரமித்ரம்புக்வெல சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

விசாரணைகளின் பின்னர் அவரது சாரதி அனுமதிப்பத்திரத்தைத் தற்காலிகமாகத் தடை செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார். எதிர்வரும் ஒக்ரோபர் 18ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (த)

## சர்வதேசப் பொலிஸ் மாநாடு கொழும்பில்

### 4 ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, செப் 28
சர்வதேச பொலிஸ் மாநாடு எதிர்வரும் 4ஆம், 5ஆம், 6 ஆம் திகதிகளில் இலங்கையில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் நடை பெறவுள்ளதுடன் இதில் ஆசிய, ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த உயர் பொலிஸ் அதிகாரிகள் 40 பேர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சர்வதேச போதைப் பொருள் வியாபாரம், ஊழல் மோசடி ஒழிப்பு போன்றவற்றில் சர்வதேசப் பொலிஸாரின் பணிகள் என்பன குறித்து இந்த மாநாட்டின்போது விசேடமாகக் கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் தடம் புரண்டதால் மலையக சேவை பாதிப்பு

கொழும்பு, செப்.28
நாவலப்பிட்டியிலிருந்து கொட்டகலை வரை எரிபொருள் தாங்கி ஏற்றிச் சென்ற ரயில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் கொட்டகலை ரயில் நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் தடம் புரண்டுள்ளது.
இதன் காரணமாக நேற்றுக் காலை முதல் மலையகத்துக்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.
கொட்டகலை ரயில் நிலையப் பகுதியில் உள்ள கொட்டகலை எரிபொருள் மத்திய நிலையத்துக்கு எரிபொருள் இறக்கும் பணியில் ஈடுப்பட்டுக் கொண்டிருந்த வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
ரயிலில்3எரிபொருள்தாங்கிகள்இருந்தவேளை, ஒரு என்ஜின் உட்பட ஒரு எரிபொருள் தாங்கியும் இவ்வாறு தடம்புரண்டுள்ளதாக ரயில் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அத்துடன், ரயில் பாதையும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.பாதையைச் சீர் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (கு)

# கோயில் மடப்பள்ளிக்கு தீ வைத்த பௌத்த பிக்கு

## வெருகல் பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

திருகோணமலை, செப்.28
திருகோணமலை, வெருகல் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ்வரும் மலை நீதியம்மன் கோயிலின் மடப்பள்ளி ஒருவரினால் எரிக்கப்பட்டுள்ளதாகக் கிராம மக்கள் தெரிவித்தனர்.
நேற்று முற்பகல் 10.30 மணியளவில் காவியுடை தரித்த நபர் கோயிலின் மடப்பள்ளிக்குத் தீவைத்துவிட்டு அருகிலுள்ள ரஜமகா விகாரைக்குள் புகுந்து கொண்டதாகச் சம்பவத்தை நேரில் கண்ட மக்கள் தெரிவித்தனர்.
இது குறித்து உடனடியாகக் கிராம உத்தியோகத்தர் கனக சுந்தரம் ஜெயரூபன் பிரதேச செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து சேருநுவர பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் அங்கு விரைந்து பதற்றத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.
சம்பவம் தொடர்பாகச் சேருநுவர ரஜமகா விகாரையில் ஊழியம் செய்யும் ஒருவரைப் பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
தீ வைப்பினால் மடப்பள்ளி முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளதாகவும், மடப்பள்ளியில் வைக்கப்பட்டிருந்த கோயில் பொருள்கள் அனைத்தும் தீயினால் முற்றாக எரிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
இதேவேளை - குறித்த கோயில் 2009ஆம் ஆண்டும் பௌத்த பிக்கு ஒருவரால் உடைத்துச் சேதப்படுத்தப் பட்டதாகக் கிராம மக்கள் தெரிவித்தனர். (கு)




# லசந்தவின் சடலம் தோண்டியெடுப்பு

கொழும்பு, செப் 28
பிரபல ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் சடலம் நேற்று பொரளை பொது மயானத்திலிருந்து மீண்டும் தோண்டியெடுக்கப்பட்டது.
குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணை அதிகாரிகள் கல்கிசை நீதிவான் நீதிமன்றில் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் கல்கிசை நீதிவான் மொஹம்மட் சஹாப்தீன் சடலத்தைத் தோண்டி எடுக்க உத்தரவிட்டார்.
இதற்கமைய கொழும்பு மேலதிக நீதிவான் மொஹம்மட் மிஹால் முன்னிலையில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு லசந்தவின் சடலம் தோண்டியெடுக்கும் பணிகள் ஆரம்பமாகின.
2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டார்.
களுபோவில வைத்தியசாலையில் அப்போது முன்னெடுக்கப்பட்ட பிரேத பரிசோதனைகளில் குறைபாடுகள் இருந்ததால், அதனை நிவர்த்தி செய்ய லசந்தவின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டுப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது. (கு)

# அரச செலவில் வெளிநாடு செல்ல திறைசேரியின் அனுமதி கட்டாயம்

## மாகாண சபையின் அமைச்சர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் கண்டிப்பான உத்தரவு

கொழும்பு, செப்.28
2017ஆம் ஆண்டு முதல் எந்த வொரு மாகாண அமைச்சர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் வெளிநாட்டுக்கான கண்காணிப்புப் பயணங்களை மேற்கொள்வதற்குத் திறைசேரியின் அனுமதி பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.
நாட்டிலுள்ள மாகாண சபை உறுப்பினர்கள் அரச செலவில் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வது கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையில் உள்ளது.
மத்திய மாகாணசபை உறுப்பினர்கள் குழுவொன்று பெருமளவு நிதியைப் பயன்படுத்தி ரஷ்யாவுக்கான பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.
இந்த நிலையில் மத்திய மாகாண சபை உறுப்பினர்களின் ரஷ்யப் பயணத்தை இரத்துச் செய்யுமாறு ஜனாதிபதி தனக்கு அறிவித்துள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் நிலூகா ஏக்கநாயக்க கூறினார்.
எவ்வாறாயினும் மத்திய மாகாண சபையின் 30 பேர் கொண்ட உறுப்பினர்கள் நேற்று அதிகாலையிலேயே ரஷ்யா நோக்கிப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.
எதிர்வரும் 5ஆம் திகதி மத்திய மாகாண சபையின் மற்றொரு குழு இந்தப் பயணத்தில் ஈடுபடவுள்ள நிலையில், ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய இந்தப் பயணத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுத்ததாக மத்திய மாகாண ஆளுநர் நிலூகா ஏக்கநாயக்க கூறினார். (கு)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## துரதிர்ஷ்டம் என்னவென்றால்...!

முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தனது யாழ்ப்பாண ஊர்வலத்தின் மூலம் தெற்கில் ஏற்படுத்திய அரசியல் அதிர்வுகள் இன்னும் ஓய்ந்தபாடில்லை. அவருக்கு எதிரான கருத்துக்கள் தொடர்ந்தும் பதிவு செய்யப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.

முதலமைச்சராகப் பதவியேற்றபோது தமிழர்களின் விருப்பத்திற்கு மாறாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் முன்பாகத் தனது குடும்பத்தினருடன் போய் பதவியேற்று சிங்கள மக்களுக்கு நல்லிணக்கத்தை வெளிப்படுத்தியவர் என்பதை சிங்களத் தலைவர்களும் மக்களும் மறந்து விட்டார்கள்.

அதனால்தான் விக்னேஸ்வரன் வடக்கில் இனவாதத்தைப் பரப்புகிறார் என்று கொந்தளிக்கிறார்கள். அவரைக் கைது செய்யவேண்டும் என்று இன்று மகிந்த அணியில் இருக்கும் உதய கம்மன்பில சீறுகிறார். அவரது தலைவர் மகிந்தவுக்கு முன்பாகத்தான் விக்னேஸ்வரன் நல்லிணக்கத்தை வெளிப்படுத்தி முதலமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார் என்பதை அவரும் மறந்துவிட்டார்.

அண்மையில்கூட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணம் வந்திருந்தபோது அவரை "எங்கள் ஜனாதிபதி" எனப் பாசத்தோடு விழித்த விக்னேஸ்வரன், "பலவிதமான சிக்கல்களுக்குள்ளும் தடங்கல்களுக்குள்ளும் நெருக்குதல்களுக்குள்ளும் அகப்பட்டுத் தத்தளித்துக்கொண்டிருக்கும் எங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இயற்கையாகவே தம்முள் கொண்டிருக்கும் மனிதாபிமான உணர்வு, பௌத்த கொள்கைகளில் அவருக்கு இருக்கும் ஆர்வம் காரணமாக இந்த நாட்டை நல்வழியில் நல்லிணக்கத்துடன் நல்ல நிர்வாகத்துடன் நல்ல முறையில் நடத்துவார் என்று எமக்கு நம்பிக்கை உண்டு" என்று தெரிவித்திருந்ததையும்கூடச் சிங்கள மக்கள் மறந்துவிட்டார்கள்.

தன்னைப் "பொய்யர்" என்று விளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது, மேடையில் அவரோடு விக்கினேஸ்வரன் அன்னியோன்னியமாகக் கதைபேசி மகிழ்ந்ததையும் அவர்கள் மறந்துவிட்டார்கள். தன்னைப் "பொய்யர்" என்று கூறிய கூற்றை ரணில் விக்கிரமசிங்க திரும்பப் பெற்றுக்கொண்டால்தான் அவருடன் கைகுலுக்குவேன் என்று முன்னர் விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தபோதும் அதனை ஒரு பொருட்டாக எண்ணாமல் - மன்னித்து, மறந்து - ரணில் விக்கிரமசிங்கவை ஏற்றுக்கொண்டதை மறந்துவிட்டார்கள்.

இப்படியெல்லாம் நல்லிணக்கத்துக்கும் சிங்கள-தமிழ் மக்கள் இலங்கை என்ற ஒரே நாட்டுக்குள் சேர்ந்து வாழ்வதற்கும் விக்னேஸ்வரன் செய்த அரும்பெரும் பணிகளை எல்லாம் ஒருநொடியில் தூக்கியெறிந்துவிட்டு அவரைச் சிங்களத் தலைவர்கள் பலரும் இன்று ஒரு இனவாதிபோன்று சித்திரிப்பது கவலையளிக்கக்கூடியதுதான்.

ஆனால், அதைவிடக் கவலையளிக்கக்கூடியதும் துரதிர்ஷ்டவசமானதும் எதுவென்றால், முதலமைச்சர் விக்னேஸ்வரன் சிங்கள மக்களுடன் இப்படியான சிறந்த நல்லிணக்கவாதியாக இருக்கையில், அவரை தமிழர்களின் உரிமையை வென்றெடுப்பதற்குக் கிடைத்த உன்னத தலைவர் என்று சில தமிழர்கள் கொடி பிடித்ததன் மூலம் அவர் சம்பாதித்து வைத்திருந்த நல்லிணக்கவாதி என்ற பெயரை சிங்களவர்கள் மத்தியில் ஒரே நாளில் நொருங்கச் செய்துவிட்டமைதான்.



சண்டே ரைம்ஸ் பத்திரிகையில்இருந்து
ரெங்கன்

நியூயோர்க் நகரில் இலங்கை ஜனாதிபதியும் அவரது பரிவாரங்களும் தங்கள் விடுதிகளைச் சென்றடைந்த வேளையில், ஏற்கனவே அந்த நகரில் நடந்திருந்த குண்டு வெடிப்பின் சூத்திரதாரி பற்றிய விவரம் கிடைத்திருப்பதாக அதிகாரிகளின் அறிவிப்புக் கிடைத்திருந்தது. அடுத்த 24 மணிநேரத்தில் 28 வயதான அகமது கான் ரகாமியைப் பிடித்துவிட்டதாகவும், அவர் மீது பெரும் அளவில் மக்கள் அழிவை ஏற்படுத்தும் ஆயுதம் வைத்திருந்ததற்காகவும், பொது இடத்தில் குண்டுத் தாக்குதல் நடத்தியதுபோன்று வேறுகுற்றங்களின் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் செய்திவந்தது.

திங்கட்கிழமையன்று இந்திய விடுதியொன்றில் தமது சகபாடிகளுக்கு விருந்தளித்தபோது ஜனாதிபதி இதுபற்றிக் குறிப்பிட்டார். "எவ்வளவு விரைவாக அந்த மனிதனை அவர்கள் பிடித்துவிட்டார்கள் என்பதைப் பாருங்கள். எந்தளவுக்கு அவர்களின் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ளது" என்று-குறிப்பிட்டார் ஜனாதிபதி. பரிசாரகர் ஒருவர் தவறுதலாக தந்தூரிக் கோழிக்கறி, ஆட்டுக்கறி, செம்மறி ஆட்டுக்கறி, மீன்கறி முதலியவற்றை வைத்துவிட்டுச் சென்றார். அவைகளை அப்புறப்படுத்துமாறு ஜனாதிபதி கூறிவிட்டார். அதன் பிறகு தந்தூரி மரக்கறி உணவு அவருக்கு வழங்கப்பட்டது. இந்தப் பயணத்தின்போது நிறையவும் நண்பர்களை அவர் பெற்றுக்கொண்டிருப்பது தெரியவந்தது.

'ரெட்டன் ரைம்ஸ்' சதுக்கத்தில் இடம்பெற்ற 'கிளின்ரன் குளோபல் இனிஷியேடிவ்' முழு அளவிலான கூட்டத்தில் கலந்து கொண்டார். சிறிசேனவை வரவேற்றுப் பின்னர், ஐ.நா.செயலாளர் நாயகம் அறிக்கையொன்றை வெளியிட்டபோது, இலங்கை ஜனாதிபதியின் நல்லாட்சி மற்றும் மீள் நல்லிணக்கம் தொடர்பான முழுமையான அர்ப்பணிப்பைத் தாம் பாராட்டுவதாகக் கூறினார். இலங்கைக்கு பான் கீ-மூன் செய்துள்ள பெரும் சேவைகளை ஜனாதிபதி பாராட்டினார். ஐ.நாவும் முழு உலகமும் அளித்துள்ள ஆதரவுக்கு அவர் நன்றி தெரிவித்தார். காலநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் ஒப்பந்தத்தை அங்கீகரிப்பதில் பான் கீ- மூன் செய்துள்ள பெரும் சேவைகளைத்தாம் மிக உயர்வாக மதிப்பதாக ஜனாதிபதி கூறினார். ஆஸ்திரேலியப் பிரதமருடனான சந்திப்புக்கு ஏற்பாடாகியிருந்த இடம் வேறு நிகழ்ச்சிக்கு வழங்கப்பட்டுவிட்டதால், ஆஸ்திரேலியப் பிரதமர் மால்கம் ரேன்புல்லுடனான சந்திப்பு நின்ற நிலையிலேயே இடம்பெற்றது. இலங்கை அமைச்சர்களை ஜனாதிபதி அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவுடன் கைகுலுக்கியபோது, "ஓ, நீர்தான் அந்த கிரிக்கெட் வீரரா? உமது கிரிக்கெட் அனுபவங்களை உமது புதிய பணியில் செயற்படுத்துகிறீர் என்று நினைக்கிறேன்" என்று அர்ஜுனவிடம் ரேன்புல் கூறினார்.

இன்னொரு இருதரப்புச் சந்திப்பின்போது, இந்தியப் பிரதி வெளியுறவு அமைச்சர் எம்.ஜே. ஆகார், காஷ்மீர் நிலமைகள் குறித்து ஜனாதிபதிக்கு விளக்கம் அளித்தார். பிரதமர் மோடி மற்றும் வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஆகியோர் காஷ்மீர் நிலமை காரணமாக ஐ.நா. மாநாட்டுக்குவர முடியாமல் போனதை அவர் விளக்கினார். காஷ்மீர் பள்ளத்தாக்கில் இந்திய காவல் நிலையமொன்றின்மீது தீவிரவாதிகள் நடத்திய மிகப் பெரிய தாக்குதல் ஒன்றில் 18 இந்திய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். அதனால் பாகிஸ்தான்-இந்தியா ஆகிய இருநாடுகளுக்குமிடையில் பதற்ற நிலை விரிவடைந்தது. குறிப்பிட்ட அளவில், பாகிஸ்தான் மீது எதிர் நடவடிக்கை எடுக்கவும், ராஜதந்திர நெருக்குதல்களை அதிகப்படுத்தவும், உயர்மட்ட அதிகாரிகள் ஆலோசித்து வந்தனர். இந்திய சட்ட அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் கூறுகையில்; எல்லை நகரான யூரியில் நடத்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதல் குறித்து இந்தியாவில் பாகிஸ்தானுக்கு எதிரான உணர்ச்சிகள் கொந்தளிப்புக்கு உள்ளாகியிருக்கின்றன என்றும்-பாகிஸ்தான் தொடர்பான பொறுமை நலிவடைந்து கொண்டிருப்பதாகவும் கூறியிருந்தார். இந்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங், ருவிற்றரில் பாகிஸ்தான் ஒரு பயங்கரவாதிகள் நாடு என்று வர்ணித்திருந்தார்.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர், ஜனாதிபதி சிறிசேன, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பைச் சந்தித்தபோது அவர்கள் தரப்பு நிலைப்பாட்டை ஷெரீப் விளக்கினார். இந்தியாதான்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிசேனவின் மேசைக்குச் சென்று ஒபாமா கை குலுக்கினார்

## உலகுக்கு உதாரணமாக விளங்கும் ஜனநாயகம் கட்டியெழுப்பப்படும்(ஐ.நாவில் ஜனாதிபதி)

பாகிஸ்தானுக்கு எதிராகப் பயங்கரவாதத்தைத் தூண்டுகிறது என்று ஷெரீப் குற்றஞ்சாட்டினார்.

**அமெரிக்க அதிபர் அளித்த கௌரவம்**

செவ்வாய்க்கிழமை இரவு அரசுத் தலைவர்கள் மற்றும் அரசுகளின் உயர் பிரதிநிதிகளுக்கும் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா அளித்த விருந்துபசாரத்தின்போது இலங்கை ஜனாதிபதியின் அருகிலேயே பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் அமர்ந்திருந்தார்.

ஒரு கட்டத்தில் ஒபாமா, சிறிசேனவின் மேசைக்கு நடந்து சென்று கை குலுக்கியதன் பின்னர் "இலங்கை நன்றாகச் செயற்படுகின்றது. நாம்அனைவரும் ஆதரவளிக்க வேண்டும்" என்று மற்றவர்களைப் பார்த்துக் கூறினார். கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ அதற்குத் தலை அசைத்து ஒப்புக்கொண்டார்.

பொருளாதார ரீதியிலும் சிறிசேனவுக்கு நல்ல செய்தியே கிடைத்தது. மிலேனியம் செலேஞ் கோப்பரேஷன் பிரதம நிர்வாக அதிகாரி டனா ஜே.ஹைட் அம்மையார் ஜனாதிபதியைச் சந்தித்து இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்கவிருக்கும் செய்தியை வெளியிட்டார். மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளையடுத்து, 2009ஆம் ஆண்டு இந்த நிறுவனம் இலங்கைக்கான தனது உதவிகளை நிறுத்தியிருந்தது. இப்பொழுது அமெரிக்க டொலர் மதிப்பில் 792 மில்லியன் வழங்கவிருப்பதாக அவர் ஜனாதிபதியிடம் கூறினார். சுவீடனும் தனது ராஜதந்திர பணிமனையை விரைவில் இலங்கையில் நிறுவ இணங்கியிருக்கும் செய்தியும் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர மூலம் ஜனாதிபதிக்குக் கிடைத்தது. ஐ.நா.பொதுச் சபையில் உரை நிகழ்த்துவதற்கு முன்னர், அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜோன் கெரியையும் ஜனாதிபதி சந்தித்தார். இலங் கைக்கான முழு அளவு ஆதரவு வழங்கப்படும் என்று கெரி வாக்களித்தார். நேபாளத்தின் தற்போதைய பிரதமரும் முன்னாள் பயங்கரவாத அமைப்பின் தலைவருமான புஷ்ப கமால் தஹால் பிரசந்தாவையும் ஜனாதிபதி சந்தித்தார்.

**பொதுச்சபையில் சுருக்கமான உரை**

பொதுச் சபையில் சிங்கள மொழியில் சுருக்கமான தொரு உரையை ஜனாதிபதி நிகழ்த்தினார். அதில் ஒருசில கருத்துக்கள் வருமாறு:

"இலங்கையில் புதியதொரு சமூக; அரசியல் மற்றும் பொருளாதார கலாசாரத்தை உருவாக்கும் செயற்பாட்டுக்கு கடந்த 20 மாதங்களாக நான் தலைமை தாங்கி வருகின்றேன். உலக மக்களில் மிக மகிழ்ச்சியான ஒரு சமுதாயமாக எமது நாட்டுமக்களை உருவாக்குவது எனது நோக்கம். எமது சமகாலப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதில் பௌத்த மத போதனைகள் பெரிதும் உதவுகின்றன. அதேபோல் உலகுக்கு மிகப்பெரும் ஞானங்களை வழங்கியுள்ள கிறிஸ்தவம், இந்துசமயம் மற்றும் இஸ்லாமியமும் எமக்கு உதவியாக இருக்கின்றன. இந்தத் தத்துவங்களும் உபதேசங்களும் எம்மை நம்முள்ளே பார்த்துக் கொள்ள உதவுகின்றனவென்று நான் நம்புகின்றேன். உள்நாட்டில் ஜனநாயகம், சட்ட ஆட்சி மற்றும் நல்லாட்சியை நிலைநாட்ட நாம் முயன்று வருகின்றோம். அதன்மூலம் இனிமேலும் ஒரு போர் எமது நாட்டில் ஏற்படாமல் இருப்பதற்கான வழிசமைக்க முயல்கின்றோம். 30 ஆண்டுகாலமாக நடந்து முடிந்த போரின் மூலம் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் காரணமாக இப்பொழுது நாட்டில் நல்லிணக்க செயற் பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் ஒரு போரை அல்லது பயங்கரவாதத்தை எமது நாடு எதிர்கொள்ளாமல் இருக்க இது உறுதியளிப்பதாக இருக்கும். சகலமக்களும் பகுத்தறிவோடும், சுதந்திர சிந்தனையோடும் அமைதியாக வாழ்வதற்கு வழி சமைக்கப்படும்."

"எதுவானாலும் இவைகளைத் தோற்றுவிப்பதில் நாம் அவசரப்படவில்லை. மிகக் கவனத்தோடும், புத்தியோடும், விழிப்போடும், பொறுமையோடும் எமது ஒவ்வொரு அடிகளையும் நாம் எடுத்து வைக்கின்றோம். எமது தாய் நாடு பெரிய கனவுகளுடன் இருக்கிறது. உங்கள் ஆசீர்வாதங்களும் ஆதரவும் இவைகளைப் முழுமைசெய்து கொள்ளத் தேவைப்படுகின்றன"- என்றார்.

முடிவுரையாக, "எமது இளைஞர்களை உலகின் மிக உன்னத அறிவைப்பெற்றவர்களாக வளர்த்தெடுக்கவும், உலகில் ஒரு முன்னுதாரண ஜனநாயக நாடாக இலங்கையைக் கட்டியெழுப்பவும் உங்கள் ஒத்துழைப்பும் உதவியும் தொடர்ந்து தேவைப்படுகின்றன என ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கும் ஐ.நா. அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.

சிறிசேனவின் ஐ.நா. பயணம் வெற்றிகரமாக அமைந்தது. உலகத்தலைவர்களை அவர் சந்தித்தபோது அவர்கள் அனைவரும் அவர் நாட்டைக் கட்டியெழுப்ப முயற்சித்து வருவதைப் பாராட்டினார்கள்" என்று வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

> 'ரெட்டன் ரைம்ஸ்' சதுக்கத்தில் இடம்பெற்ற 'கிளின்ரன் குளோபல் இனிஷியேட்டிவ்' முழு அளவிலான கூட்டத்தில் கலந்து கொண் டார். சிறிசேனவை வரவேற்றதன் பின்னர் ஐ.நா.செயலாளர் நாயகம் அறிக்கையொன்றை வெளியிட்டபோது, இலங்கை ஜனாதிபதியின் நல்லாட்சி மற்றும் மீள் நல்லிணக்கம் தொடர்பான முழுமையான அர்ப்பணிப்பைத் தாம் பாராட்டுவதாகக் கூறினார்.

# யாரிடம் தான் சொல்லி அழ முடியும்?

கடந்த 14 ஆம் திகதிய உதயனின் வாசகர் திருமுகம் பகுதியில் வெளிவந்த மனிதாபிமானம் எம்மவர் மத்தியில் தொலைந்தே போய்விட்டதா? என்ற தலைப்பிலான கடிதம் மனதில் ஏற்படுத்திய ஆத்திரஉணர்வு காரணமாகவே இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். யாழ்.போதனா வைத்தியசாலைக் கிளினிக்குக்கு சிகிச்சைக்காகச் சென்ற அந்த நோயாளித் தாயாரும், தாய்க்கு உதவவென உடன்சென்ற அவரது மகளும் வைத்தியசாலையில் எந்த அளவுக்கு அவமானத்தைச் சந்தித்திருப்பர் என்பதைக் குறித்த வாசகர் திருமுகக் கடிதத்தை வாசித்ததன் மூலம் எவராலும் புரிந்துகொள்ள முடிந்திருக்கும்.

நோயாளியின் பெயரில் வழங்கப்படும் நோய் மற்றும் மருந்துகள் குறித்த விவரங்கள் அடங்கிய கிளினிக் கொப்பி நோயாளர்களிடம் ஒப்படைக்கப்படாது வைத்தியசாலையிலேயே பாதுகாப்பாகப் பேணப்படுவது வழமையான நடைமுறை. குறித்த சம்பவத்தில் அந்த நோயாளித் தாயாரது கிளினிக் கொப்பியைத் தேடி எடுத்துக் கொடுக்க குறித்த பகுதியில் கடமையில் இந்த சிற்றூழியரால் இயலாது போயிருந்தால், குறித்த அந்த நோயாளித் தாயாருக்கு புதிய கொப்பியொன்றைப் பதிவு செய்து வழங்கியிருக்க வேண்டிய பொறுப்பு அந்தச் சிற்றூழியரைச் சார்ந்ததே. வெறுமனே சாக்குப்போக்குக் கூறி கொப்பி தொலைந்து விட்டதாக பொறுப்பற்ற பதில் வழங்கி தமது கடமையை நிறைவேற்றத் தவறிய அந்தச் சிற்றூழியரது செயற்பாடு கடுமையாகக் கண்டிக்கத்தக்கது. புதிய கிளினிக் கொப்பியை வழங்குவதற்கான காரணத்தை, அந்த நோயாளித் தாயாரைத் தாமே குறித்த வைத்தியரிடம் அழைத்துச் சென்று விவரத்தை வைத்தியர் அறியச் செய்து, அந்த நோயாளி தமக்கான சிகிச்சையை, மருந்து வகையைப் பெற்றுக் கொள்ள உதவவேண்டிய மனிதாபிமானப் பொறுப்பு அந்தச் சிற்றூழியருக்கு உண்டு. ஆயினும் குறித்த விடயத்தில் அசண்டையீனமாக அலட்சியப் போக்குடன் நடந்துகொண்ட அந்தச் சிற்றூழியர் சுகாதாரத் திணைக்களத்தில் கடமையாற்றத் தகுதியற்ற ஒருவர் என்பதைச் சகலரும் ஏற்றுக் கொள்வர் என்பது நிச்சயம். இதில் மிக வெட்கக் கேடான அடுத்த தொடர்ச் சம்பவம் குறிப்பிட்ட நோயாளிக்குச் சிகிச்சையளிக்கப் பொறுப்பாயிருந்த குறிப்பிட்ட அந்த வைத்தியரது கவலைதனமான செயற்பாடாகும். அர்ப்பணிப்பு உணர்வுடன் நோயாளியை அன்போடும், கருணையோடும் நடத்தி உதவிடக் கடமைப்பட்டுள்ள அந்த வைத்தியர், அதிலும் தம்மால் தமது நோய்க்கான மருந்தைப் பெற்றுக் கொள்ள இயலாது தடை ஏற்பட்டுள்ளதே என்ற ஆதங்கத்துடன், குறித்த வைத்தியரை அந்த நோயாளி அணுகியவேளை, கொஞ்சமேனும் மனிதத் தன்மையற்ற விதத்தில் அந்த நோயாளித் தாயாரையும் அவருக்கு உதவியாகச் சென்ற அவரது மகளையும் அவமானப்படுத்தும் வகையில் 'கொப்பி இல்லாமல் நானென்ன உமது தலையிலா மருந்து எழுத முடியும்?' எனக் கேட்டு அவமானப்படுத்தியதாக குறித்த வாசகர் எழுதிய வாசகர் கடித மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது.

ஒன்றை மட்டும் வாசகர்கள் மனதில் இருத்த வேண்டும். பலதரப்பட்ட வரிகள் என்ற வகையில் நாம் அரசுக்கு நாளாந்தம் கொட்டி அழும் வரிப்பணத்தை அரசு பிச்சையாகப் போட்டே, இவர்களுக்கெல்லாம் இலவச மருத்துவக் கல்வி வசதி வழங்கி, மருத்துவர்களாக்கி, எமக்கு வைத்தியம் செய்ய விட்டிருக்கிறது. அந்த நன்றிக்கடனுக்குக்காகவாவது இவர்கள் நோயாளர்கள் மீது கருணை உணர்வோடு நடந்து, அரசின் இலவச மருத்துவ வசதியை அவர்கள் பெற்றுப் பயனடைய உதவக்கூடாதா?

யாழ்.போதனா வைத்தியசாலை உயர் நிர்வாகத் தரப்பு வைத்தியசாலையின் செயற்பாட்டை அண்மைக் காலமாக பொது மக்கள் திருப்திப்படும் அளவுக்குச் சிறப்பாக நிறைவேற்றி வருவதாகப் பரவலாக பேசப்படுகிறது. பத்திரிகைகள் எழுதி வருகின்றன. அந்த நற்செயலுக்கு ஒரு கரும்புள்ளி போன்று இத்த கையபோக்குடைய ஒரு சிலரும் வைத்தியத்துறைக்குள் கலந்துள்ளமை தான் மனதுக்குள் கவலை தருமொன்று.

கோ.சபாபதி
வண்ணார்பண்ணை.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அலெப்போ தாக்குதலால் அதிர்ச்சியடைந்துள்ளேன்

## பான் கீ – மூன் தெரிவித்தார்

சிரியாவின் அலெப்போ நகரில் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்மூடித்தனமான தாக்குதல்களால் மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளதாகத் குறிப்பிட்டார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ – மூன்.
அமெரிக்கா-ரஷ்யா இடையே அண்மையில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதையடுத்து, சிரியாவின் உள் நாட் டுப்போர் முடிவு கண்டிருந்தது.
ஆனால், இரு நாடுகளும் ஒன்றின்மீது ஒன்று கடும் நிபந்தனையை விதித்ததையடுத்து மீண்டும் அங்கு போர் ஆரம்பமானது.
ஆயுதக் குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும் சிரியாவின் இரண்டாவது பெரும் நகரமான அலெப்போ நகரை (20 லட்சத்து 50 ஆயிரம் மக்கள் வாழ்கிறார்கள்) மீட்க ரஷ்யாவின் உதவியுடன் சிரிய இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. அமெரிக்காவின் உதவியுடன் ஆயுதக் குழுவும் கடுமையாகப் போராடி வருவதால், அலப்போ நக ரெங்கும் குண்டுமழை பொழியப்படுகிறது.
நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் 85 பேர் கொல்லப்பட்டனர். இந்த நிலையிலேயே பான் கீ – மூன், அலெப்போ நகரை எண்ணி அதிர்ச்சியடைந்துள்ளதாகக் குறிப்பிட்டார். சிரியா விவகாரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை ஏற்பாடு செய்த அவசரக்கூட்டம் ஒன்றில் வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
சிரியாவின் உள்நாட்டுப் போர் முடிவடைந்து படிப்படியாக அமைதி திரும்புகிறது என்று எதிர்பார்க்கையில், மீண்டும் உள்நாட்டுப்போர் ஆரம்பமாகி நடைபெறுவது மிகவும் அதிருப்தியைத் தருகிறது. அலெப்போ நகரில் நீரை விநியோகிக்கும் நிலையமொன்று சேதமடைந்த நிலையில், இன்னொரு நீர் நிலையத்தை எதிரணி மூடியுள்ளது. இதனால் அலெப்போவிலுள்ள 20 லட்சத்து 50 ஆயிரம் மக்களும் தண்ணீருக்காக அல்லற்படுகிறார்கள். பதுங்கு குழிகளைத் தகர்க்கும் குண்டுகளையும் ஏனைய மேம்பட்ட வெடிபொருள்களையும் பொதுமக்களுக்கெதிராகப் பயன்படுத்துவது போர்க்குற்றம் என ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ – மூன் மேலும் தனது அறிக்கையில் குறிப்பிட்டார்.
குறித்த கூட்டத்தில் கலந்துகொண்ட ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவரான சமந்தா பவர், சிரியாவில் ரஷ்யா காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொள்கிறது எனச் சாடினார். (ம)

# போதைக்கு எதி

# உலகம் தலைவ


## பிலிப்பைன்ஸ் அயலுறவுத்துறை அ



பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி றொட்றிக்கோ டுடேர்தேயின் நகர்வுகள், முடிவுகள் அனைத்தும் போதைப் பொருளுக்கு எதிரான திட்டங்கள் எனத் தெரிவித்த பிலிப்பைன்ஸ் அயலுறவுத்துறை அமைச்சர் பேர்பெக்டோ யாசே, அவற்றில் உலகத்தின் தலையீட்டைத் தாமும், டுடேர்தேயும் விரும்பவில்லை எனவும் தெரிவித்தார்.
பிலிப்பைன்ஸின் ஜனாதிபதியாக டுடேர்தே கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பதவியேற்றார். பதவியேற்ற ஒரு மணிநேரத்துக்குள் போதைப் பொருள் பாவனையாளர்கள், கடத்தல்காரர்கள், சூத்திரதாரிகள் என அத்தனைபேரையும் கொல்லுங்கள். அவற்றுக்கு நான் பொறுப் பேற்கிறேன் என கட்டளையைப் பிறப்பித்தார். அன்று தொடக்கம் இன்று வரை பிலிப்பைன்ஸில் போதையுடன் தொடர்புடைய கிட்டத்தட்ட 4 ஆயிரம் பேர் கொன்று குவிக்கப்பட்டார்கள். பலர் தாமும் கொல்லப்படுவோம் என்ற அச்சத்தில் பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று சரணடைந்தார்கள். பிலிப்பைன்ஸ் மக்களும், அரச அதிகாரிகளும் டுடேர்தேக்கும் அவரது செயற்பாடுகளுக்கும் ஆதரவாக உள்ளார்கள். ஆனால், ஐக்கிய நாடுகள் சபையும், பல நாடுகளும் டுடேர்தேயின் முடிவுகளையும், நகர்வுகளையும் கண்டித்தன. போதைப்பொருள் பாவனையாளர்கள், கடத்தல்காரர்கள், சூத்திர

# அதிர்ந்தது ஜப்பான்

ஜப்பானின் தெற்கு ஒகினாவாதீவு மற்றும் அதை ஒட்டியுள்ள தீவுகள் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் காலை நிலநடுக்கம் ஏற்பட்டது.
ஒகினாவா தீவிலிருந்து கடலுக்கு அடியில் சுமார் 40 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.7 ஆக பதிவாகியது. சில நிமிட இடைவெளியில் மற்றொரு தீவான ஹொக்கைடோவிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 5.5 அலகுகளாக பதிவானது. இந்த இரு நிலநடுக்கங்களிலும் எந்தவித பொருள் சேதமோ அல்லது உயிர்ச் சேதமோ ஏற்படவில்லை. சுனாமி எச்சரிக்கையும் விடப்படவில்லை. (ம)



# ஸ்கேட்சாட்–1 செயற்கைக் கோளை சுற்றுவட்டத்தில் நிறுத்தியது இந்தியா


இந்தியாவின் செயற்கைக் கோளான ஸ்கேட்சாட்–1 நேற்றுமுன்தினம் வெற்றிகரமாகச் சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டது.
பருவநிலை மாற்றங்கள், புயல் எச்சரிக்கை உள்ளிட்டவற்றை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் வகையில், குறித்த செயற்கைக் கோளை இந்தியா தயாரித்தது. குறித்த செயற்கைக்கோள் நேற்று முன்தினம் சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இதற்கான 48 மணி நேரம், 30 நிமிட கவுண்டவுன் கடந்த சனிக்கிழமை காலை 8.42 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் காலை 9.12 மணிக்கு விண்ணில் வெற்றிகரமாக ஏவப்பட்டது.
பூமியிலிருந்து 730 கிலோ மீற்றர் தூரத்தில் 98.1 டிகிரி கோணத்தில் ஸ்கேட்சாட்–1 செயற்கைக்கோள் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இதன் ஆயுள்காலம் 5 வருடங்களாகும். (ம)



# உலகின் பெரிய பாம்பு பிரேஸிலில்

பிரேஸில் நாட்டில் கிட்டத்தட்ட 33 அடி நீளம், 400 கிலோ எடை கொண்ட மிகப் பெரிய பாம்பு பிடிபட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
வடக்கு பிரேஸிலின் பாரா பகுதியில் ஜிங்கு ஆற்றின் மீது கிளோ மோன்டே அணை கட்டுவதற்கான கட்டுமான பணிகள் நடந்து வருகின்றன. உலகின் மிகப்பெரிய நான்காவது அணை இதுவாகும். முதல் மூன்று அணைகள் சீனாவில் அமைந்துள்ளன. அணை கட்டுமானப் பணி நடைபெறும் இடத்தில் உள்ள பாறைகள் வெடிவைத்து அகற்றப்பட்டு வருகின்றன. ஏராளமான ஊழியர்கள் அணை கட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அங்கிருந்த குகை ஒன்றை ஊழியர்கள் வெடி வைத்துத் தகர்த்தனர். அப்போது அதனுள் மிகப்பெரிய பாம்பு இருப்பதைக் கண்டு அவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். பின்னர் பாரம்தூக்கியொன்றின் உதவியுடன் குறித்த பாம்பு பிடிக்கப்பட்டது.
குறித்த பாம்பு கிட்டத்தட்ட 33 அடி நீளமும், 400 கிலோ எடையும் கொண்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.
அவ்வாறாயின் உலகில் இதுவரை பிடிபட்ட பாம்புகளில் மிகவும் பெரியது என்ற பெயரை இந்தப் பாம்மே பெறும். அமெரிக்காவின் கன்சாஸ் நகரில் பிடிபட்ட 25 அடி நீளம் கொண்ட பாம்பே உலகின் பெரிய பாம்பு என கின்னஸ் புத்தகத்தில் பதிவானது. (ம)

# அமெரிக்க ஜனாதிபதியாக வர டொ



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் டொனால்ட் டிரம்ப் வெற்றி பெறுவார் என அமெரிக்கப் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் கருத்து தெரிவித்தார்.
அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் ஆலன் லிச்மேன் என்பவர் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். அமெரிக்க நாட்டில் நடைபெறும் ஒவ்வொரு தேர்தலிலும் இவரது கணிப்பு பரபரப்பாகப் பேசப்படும். மிகவும் துல்லியத்தன்மையுடையதாக இருப்பதாலேயே இவரது கணிப்புக்கள் எடுபடுகின்றன. முன்னைய 8 தேர்தல்களில் எவர் வெள்ளை மாளிகைக்குச் செல்வார்கள் என்பதை ஆலன் மிகச்சரியாக கணித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரான போரில் பிடக்கூடாது

## மைச்சர் தெரிவிப்பு



தாரிகள் என அனைவரும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான். ஆனால், அவர்களுக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று டுடேர்தேக்கு அழுத்தங்கள் வந்து குவிந்தன. இந்த நிலையிலேயே டுடேர்தே

யின் நகர்வுகள், முடிவு களுக்கு உலகம் தலையிடுவதை தாம் விரும்பவில்லை என பிலிப் பைன்ஸ் அயலுறவுத்துறை அமைச் சர் பேர்பெக்டோ யாசே தெரிவித்தார். அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

பிலிப்பைன்ஸின் புதிய ஜனாதிபதியான டுடேர்தே, மக்கள் மத்தியில் முன்னரெப்போதும் இல்லாத அளவுக்கு ஆதரவைக் கொண்டுள்ளார். குற்றங்களைக் கட்டுப்படுத்தும் ஜனாதிபதியின் முயற்சியில், உலகம் தலையிடக்கூடாது. ஊழலிலிருந்தும் நாட்டைத் தேக்கமடையச் செய்யும் ஏனைய விடயங்களிலிருந்தும் பிலிப்பைன்ஸை விடுவிப்பதற்கு, டுடேர்தே, திடசங்கற்பம் பூண்டுள்ளார்.

தேவையற்ற தலையீடுகளின்றி, எங்களுடைய தேசிய இலக்குகளை அடைவதற்காக எங்களுடைய உள்ளூர் சவால்களை எதிர்கொள் வதற்கு எம்மை அனுமதிக்க வேண் டும் என யாசே மேலும் தெரிவித்தார். (ம)



# இந்திய இராணுவ வன்முறைகளை மூடி மறைக்க முயல்கிறார் மோடி

## பாகிஸ்தான் குற்றச்சாட்டு

யூரி தாக்குதல் விவகாரத்தில் தங்கள் நாட்டின் மீது குற்றஞ்சுமத்தி காஷ்மீர் பிரச்சினை மீதானதும் இந்திய இராணுவத்தின் வன்முறைகள் மீதானதுமான பன்னாட்டுக் கவனத்தை மோடி திசை திருப்ப முயல்கிறார் என பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியது.

காஷ்மீர் எல்லையில் உள்ள யூரி இராணுவ முகாம் மீது ஆயுத அமைப்பினர் அண்மையில் நடத்திய தாக்குதலில் 21 இந்திய இராணுவத்தைச் சேர்ந்த 21 சிப்பாய்கள் சாவடைந்தனர். இதனையடுத்து பாகிஸ்தானுக்கு எதிராக முழக்கமிட்டு வருகிறார் இந்தியப் பிரதமர் மோடி.

கேரளாவில் அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் ஆசிய நாடுகள் தற்போது மிகையாக வளர்ச்சியடைந்து வருகின்றன. ஆனால், ஒரே ஒரு நாடு மட்டும் ஆசிய கண்டத்தின் வளர்ச்சியை தடுக்கும் வகையில் செயற்படுகிறது. பல்வேறு நாடுகள் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் ஒருமித்த குரலில் ஒரு நாட்டை மட்டுமே குற்றஞ் சாட்டுகின்றன. இந்தியாவும் – பாகிஸ்தானும் ஒரே நேரத்தில் சுதந்திரம் பெற்றன. தற்போது இந்தியா வெளிநாடுகளுக்கு மென்பொருளை ஏற்றுமதி செய்து வருகிறது. ஆனால், பாகிஸ்தான் தீவிரவாதத்தை ஏற்றுமதி செய்து வருகிறது. இது ஏன் என்று பாகிஸ்தான் மக்கள் அந்த நாட்டு தலைவர்களிடம் கேள்வி எழுப்ப வேண்டும் என்று தெரிவித்திருந்தார். இதற்கு பதிலடியாக பாகிஸ்தான் அயலுறவுத்துறை அமைச்சு வெளியிட்ட அறிக்கையிலேயே, காஷ்மீர் பிரச்சினை மீதானதும் இந்திய இராணுவத்தின் வன்முறைகள் மீதானதுமான பன்னாட்டுக் கவனத்தை மோடி திசை திருப்ப முயல்கிறார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள், வெறுப்பை தூண்டும் அறிக்கைகள் மூலம் திட்டமிட்ட பரப்புரையை பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியத் தலைமை பரப்பி வருகிறது. காஷ்மீரில் அப்பாவி பொதுமக்கள், பெண்கள், குழந்தைகள் மீது இந்திய இராணுவம் கட்டவிழ்த்து வரும் வன்முறைகள் மீதான சர்வதேச கவனத்தை திசைதிருப்பும் முயற்சியாகவே இந்தியா பல குற்றச்சாட்டுக்களை பாகிஸ்தான் மீது சுமத்து கிறது என மேலும் அந்த அறிக்கையில் குறிப்பி டப்பட்டுள்ளது. (ம)



பிரபஞ்சத்தில் புத்திக்கூர்மை உள்ள வேற்றுக் கிரகவாசிகளின் நடமாட்டத்தைக் கண்டறியும் சக்திகொண்ட உலகின் மிகப் பெரிய தொலைநோக்கியை அமைத்துவந்த சீனா, குறித்த தொலைநோக்கியைப் பயன்படுத்தி, ஆய்வுகளையும் செயற்பாடுகளையும் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தது. 30 கால்பந்தாட்ட மைதானங்கள் அளவிலான குறித்த தொலைநோக்கியை அமைக்க இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 2 ஆயிரத்து 780 கோடிகளை சீனா செலவிட்டது. (ம)

# 250 கிலோ எடையுள்ள மனிதர் தினமும் 10 கிலோ உணவாம்

250 கிலோ எடையுடன் நபரொருவர் மலேசியாவில் வாழ்ந்து வருகிறார் என்றும் – அவர் தினமும் 10 கிலோ நூடில்ஸையும், 12 இற்கும் மேற்பட்ட ஐஸ்கிறீமையும் உணவாகக் கொண்டுள்ளார் என்றும் மலேசிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

மலேசியாவின் சிபு பகுதியிலேயே குறித்த நபர் வாழ்ந்து வருகிறார். சியா ஜி ஹொங் எனும் பெயருடைய அவர், மாரடைப்புக் காரணமாக அருகிலிருந்த மருத்துவமனைக்கு தொடர்பை மேற்கொண்டுள்ளார். அங்கு வந்த அவசர உதவிக்குழுவினர் அவரது உடல் பருமனைக் கண்டு திகைத்துப் போயுள்ளனர். மருத்துவ உதவிக்குழுவால் வீட்டிலிருந்து வெளியே கொண்டுவர முடியாதுபோக, தீயணைப்புப்படை உதவிக்கு வரவழைக்கப்பட்டது. பின்னர் அவரது உடற்பருமனால் நோயாளர் காவு வண்டியில் கொண்டுசெல்ல முடியாத நிலை ஏற்பட, லொறி ஒன்றின் உதவியுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் மற்றும் விசாரணைகளின் அடிப்படையிலேயே அவர் 250 கிலோ எடையுடையவர் என்பதும், தினமும் 10 கிலோ நூடில்ஸ், 12 ஐஸ்கிறீம் என்பவற்றை உணவாக எடுத்துக் கொள்வதும் தெரியவந்தது. (ம)



# னால்ட் டிரம்புக்கு வாய்ப்பு

இந்த நிலையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் தலைமை வேட்பாளராக உள்ள டொனால்ட் டிரம்ப் வெற்றிபெறுவார் என்று அவர் தற்போது கணித்துள்ளார். வெள்ளை மாளிகைக்கு செல்வதற்கு 13 முக்கிய தகுதிகள் தேவை. இவை அனைத்தையும் டொனால்ட் டிரம்பிடம் நான் பார்க்கிறேன். அமெரிக்க ஜனாதிபதிப் பதவியை வகிப்பதற்கு ஹிலாரி கிளிண்டனுக்கு வலிமை போதாது. ஒபாமா இரண்டாவது முறையாக ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதற்கு பிறகு, அவரின் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன. இந்த அதிருப்தி அலைகள் அனைத்தும் டொனால்ட் டிரம்புக்கு ஆதரவு வாக்குகளாக மாறும் என ஆலன் மேலும் தெரிவித்தார். அமெரிக்காவின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர்கள், தூதுவர்கள் என 75 முக்கியப் பிரமுகர்கள் ஹிலாரிக்கு தமது ஆதரவைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருகிவரும் கிராமியக்கலையான
# கரகாட்டம்

அராலியூர் நிலா

பண்டைத் தமிழர்களின் கிராமிய நடனங்களில் கரகாட்டமும் ஒன்று. தலையில் கரகம் வைத்து ஆடும் ஆட்டம் இதுவாகும். பழந்தமிழ் இலக்கியங்களில் கரகாட்டம் குடக்கூத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பல விதங்களில் அலங்கரிக்கப்பட்ட கரகத்தைத் தலையில் வைத்தபடி, சமநிலை பேணிக் கரகாட்டம் ஆடப்படும்.

கரகம் என்பது ஒரு பானை வடிவமான கமண்டலத்தைக் குறிக்கும். இது பூக்குடம், கும்பம், செம்பு, நீர்க்குடம் என்றும் அழைக்கப்படும். மண், செம்பு, பித்தளை போன்றனவற்றால் இது அமைக்கப்பட்டிருக்கும். இவற்றின் வாய்ப்புறம் குவிந்தும் அடிப்புறம் பெருத்தும் காணப்படும். அரிசி, நீர், மணல் போன்றவைகளால் நிரப்பப்பட்டு,வாய்ப்புறத்தை மூடி அலங்கரிக்கப்பட்ட குடத்தைத் தலையில் வைத்துக் கைகளால் பிடிக்காமல் ஆடும் ஆட்டம் இதுவாகும்.

### கரகாட்ட வகைகள்

சக்திக் கரகம், ஆட்டக் கரகம் என்று இது இரண்டு வகைப்படும். பக்தி கலந்து கோயில்களில் ஆடப்படுவது சக்திக் கிரகம் எனப்படும். கோயில் திருவிழாக்களின் போது, பூசாரி கரகத்தை அலங்கரித்துத் தலையில் சுமந்து வருதல் சக்திக் கரகம் எனப்படும். அவர் கரகத்தைச் சுமந்தவாறு நையாண்டி மேள இசைக்கேற்ப ஆடுவார். அதேபோன்று, மாரியம்மனுக்கு நேர்த்தி வைத்த ஆண்- பெண் இருபாலாரும் இந்தத் திருவிழாக் காலங்களில் கரகமெடுப்பர். ஆட்டக் கரகம் என்பது, பொதுமக்கள் முன் அல்லது பொது நிகழ்வுகளில் ஆடப்படுவது. நன்கு அலங்கரிக்கப்பட்ட ஒரு செம்புக் கரகத்தைத் தலையில் சுமந்து, கைகளால் குடத்தைப் பிடிக்காமல் நையாண்டி மேள இசைக்



கேற்ப உடலை வளைத்தும், குனிந்தும், நிமிர்ந்தும், ஓடியும், நடந்தும் அழகுற ஆடுவர். இதன்போது, தலையிலுள்ள கரகம் கீழே சாய்ந்து விழாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

### கரகம் அமைக்கும் முறை

கரகாட்டத்துக்கு 3 கிலோ எடையுள்ள செம்பினுள் 3 அல்லது 4 கிலோ மண்ணோ, அரிசியோ இட்டு ஒரு ரூபா நாணயமும் வைத்து கரகச் செம்பு தயாரிக்கப்படும். செம்பின் வாய்ப் பகுதியைத் தேங்காயால் மூடுவதற்கென்றே அமைத்திருப்பார்கள். பேரிங்கு எனப்படும் குடையை அதன்மேல் பொருத்தி வைப்பர். குடையின் மேலே கிளி, அன்னம், புறா ஆகியவற்றில், ஏதாவது ஒரு தக்கைப் பறவை உருவம் இருக்கும். ஆடுவோர் சுழலும் போது, பறவை பறப்பது போன்று அழகாக இருக்கும். கரகத்தின் மேல் பொருத்தப்பட்ட மரக்கட்டையைச் சுற்றிப் பலவண்ண வண்ணக் காகிதப் பூக்களும், மணிகளும் கொண்டு அலங்காரம் செய்யப் பட்டிருக்கும். அத்துடன், கரகச் செம்பின் மேல் கண்ணாடிகளாலும் மரப் பூக்களா லும் அலங் கரிக்கப்பட்ட கரகக் கூடுகள் பொருத் தப்பட்டுக் கரகச் செம்பு அழகுடைய பொருளாக மாற்றப்படும்.

### கலைஞர் ஒப்பனை

கரகாட்டம் ஆடும் கலைஞர்கள் முகத்தை நன்கு பளபளப்பான முறையில் ஒப்பனை செய்து கொள்வர். பெண்கள் உடலோடு ஒட்டிய ஆடைகளை அணிவர். ஆண்கள் தாறு பாய்ச்சி வேட்டி அணிவர். இந்த ஆடைகளைப் பளபளப்பான நிறத்தில் அணிந்து கொள்கின்றனர். கால்களில், பரதநாட்டியக் கலைஞர்களைப்போன்று சலங்கைகள் அணிந்திருப்பர்.

### இசைக் கருவிகள்

கரகாட்டத்தில்நையாண்டி மேளம் பக்க இசையாகப் பயன்படுத்தப்படுகிறது. நாதஸ்வரம், தவில்கள் ஆகியன முதன்மை இசைக் கருவிகளாகவும்- பம்பை, உறுமி, கிடுகிட்டி, கோந்தளம் முதலான இசைக்கருவிகள் பக்க இசைக் கருவிகளாகவும் பயன்படுத்தப் படுகின்றன.

### மாரியம்மன் வழிபாட்டில்

கரகாட்டக்கலை, மாரியம்மன் வழிபாட்டுக் கலையாக இருந்து வருகின்றது. மாரியம்மனுக்கு நேர்த்தி வைத்துக் கரகமெடுத்தல் எனும் தொண்டு நிகழ்ச்சி தொன்று தொட்டு நிலவி வருகிறது. தூய்மையான மண் கலத்தில் மஞ்சள் நீர், பால், அரிசி போன்ற பொருள்களை நிரப்பி- வேப்பிலை, மாவிலை முதலிய தழைகளைச் செருகி, அதன் வாய்ப்பகுதியில் ஒரு தேங்காயைத் தலைகீழாகக் கவிழ்த்து வைப்பர். பின் இக்குடத்தைத் தலையில் சுமந்து சென்று அம்மனை வழிபடுவர்.

கரகக் குடத்தில் நிரப்பப்படும் பொருள்கள் அவரவர் நேர்த்திக்கடனுக்கேற்ப அமைந்திருக்கும். புனிதப் பொருள்களை நிரப்புதல் என்ற பெயரால், அம்மனே குடத்தில் வந்து நிறைந்திருப்பதாக பாவனை செய்து, அதனைத் தலையில் சுமந்து சென்று நேர்த்தியை நிறைவு செய்வர். பூங்கரகம் எடுப்பதாக வேண்டிக் கொண்டவர்கள், புதிய மண் குடத்தின் மேல் சுண்ணாம்பு நீராலும் செம்மண்ணாலும் அழகான கோலங்கள் வரைந்து, அதில் மஞ்சள் நீர் ஊற்றிப் பானையைச் சுற்றிப் பல நிறப் பூக்களால் அலங்கரித்து அந்தக் குடத்தைத் தலையில் சுமந்து சென்று அம்மனை வழிபடுவர்.

### தற்காலத்தில் கரகாட்டம்

பண்டைக்காலத்தில் கோயில்களிலும் பொது நிகழ்வுகளிலும் சிறப்பாக ஆடப்பட்டு வந்த இந்தக் கலை, தற்போது கூறுமளவுக்கு ஆடப்படுவதில்லை. சிறப்பார்ந்த இந்தக் கலையை அழிந்து போகவிடாது உயிரூட்ட வேண்டிய கடமை அனைவருக்கும் உண்டு.

**கரகம் என்பது ஒரு பானை வடிவமான கமண்டலத்தைக் குறிக்கும். இது பூக்குடம், கும்பம், செம்பு, நீர்க்குடம் என்றும் அழைக்கப்படும். மண், செம்பு, பித்தளை போன்றவற்றால் இது அமைக்கப்பட்டிருக்கும். இவற்றின் வாய்ப்புறம் குவிந்தும் அடிப்புறம் பெருத்தும் காணப்படும். அரிசி, நீர், மணல் போன்றவைகளால் நிரப்பப்பட்டு, வாய்ப்புறத்தை மூடிஅலங்கரிக்கப்பட்ட குடத்தைத் தலையில் வைத்துக் கைகளால் பிடிக்காமல் ஆடும் ஆட்டம் இதுவாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்தனூர்
சதீஸ்

# முன்னாள் பெண் போராளியின் 'ஆறிப்போன காயங்களின் வலி'



மன்னார் மாவட்டத்தின் வேளாண்மை நிலமான அடம்பன் மண்ணில் வளர்ந்து விடியலைத்தேடி புறப்பட்ட வேலு - சந்திரகலா விடுதலைப் பணியில் வெற்றிச்செல்வியாக 18 வருடங்கள் பயணித்து ஓய்ந்துள்ள நிலையில் மனம் திறந்துள்ளார். 'ஆறிப்போன காயங்களின் வலி' என்ற இந்த நூலானது புனர்வாழ்வு முகாம்களுக்குள் திணிக்கப்பட்ட பெண் போராளிகளின் ஏக்கங்கள், தாக்கங்கள்,தவிப்புக்கள், எதிர்பார்ப்புக்கள் எனக் கனதிகொண்ட கருத்தாளம்மிக்க ஒரு வரலாற்றுப் பதிவாக வேரூன்றி நிமிர்ந்திருக்கின்றது எனலாம்.

உலக அரங்கில் போர் நிறைவுக்குப்பின் அவை ஏற்படுத்திய வடுக்களை வெளிப்படுத்தும் படைப்புக்கள் அதிகமாக வெளிவந்துள்ளன. ஆந்த வகையில் வியட்நாம் போருக்குப் பின்னர் வெளிவந்த இலக்கியப்படைப்புக்கள் முக்கியமானதாகக் கருதப்படுகின்றன. போருக்கு பின்னரான பதிவுகள் மனித மனங்களில் மனச்சாட்சியைக் கிளறிப் போரின் பால் சிதிலம் அடைந்திருக்கக்கூடிய சமூகங்களைக் கட்டியெழுப்பும் வலிமை உடையன. அவ்வாறு தமிழர்களின் ஆயுதப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், ஈழத்தமிழரின் இலக்கியச் செந்நெறி தமிழ் தேசியத்தை அழுத்தி சார்ந்து நகரத் தொடங்கியிருந்ததது. எவ்வாறாயினும் தற்போது எமது நாட்டில் படைப்பூக்கம் கொண்ட நடுநிலை எழுத்தாளர்கள் கடத்தப்படலாம் என்ற காலம் சற்றுத் தணிந்து சுய தணிக்கைகள் அற்ற படைப்புக்களை எழுதக்கூடிய சூழல் தென்படுகிறது என்று கூறலாம். புல தசாப்தங்கள் இடம்பெற்ற போரில், ஏற்பட்டிருக்கக் கூடிய தவறுகளை விமர் சிக்கும் துணிவுகள் தலைதூக்கிப் போரின் நேரடி பங்காளர்களான முன்னாள் போறாளிகள் பலரும் தமது எண்ணக்கருத்துக்களை அச்சேற்றிக் கொண்டிருப்பது வரவேற்கப்பட வேண்டியது. அவ்வாறே வெற்றிச் செல்வியின் 'ஆறிப்போன காயங்களின் வலி' நூலும் போராளிப் பெண்களின் பலபிரச்சினைகளையும் இறுதிப் போர் இடம்பெற்ற முள்ளிவாய்காலையும் , முள்வேலி முகாம்களையும் பற்றிப் பேசியிருக்கிறது.

எழுத்துக்கள் என்பது வெறும் புத்தகப்பூச்சியாக மட்டுமல்லாது, அது மக்களின் வாழ்வியலையும் போராட்டத்தையும், அரசியலையும், கண்ணீரையும் உரத்துப் பேசவல்லது. கடந்து கொண்டிருக்கும் காலங்களின் எந்தவொரு சிறுதுண்டு ஆவணமும் அவசியம் சேமிக்க வேண்டியவை. அதனோடு துன்பங்களைக் கண்டு துவண்டு போகாது தொடர்ந்து வந்த ஏமாற்றங்கள் விமர்சனங்களையெல்லாம் எதிர் கொண்டு அவற்றைச் சந்தாப்பங்களாக்கி, ஈழத்து பெண்ணிய வரலாற்றில் முன்னாள் பெண் போராளிகளினது தற்கொடைகளையும் தன்னடையாளங்களையும் ஆவணப்படுத்தியிருப்பது நிச்சயம் மெச்சப்பட வேண்டியது .

வெற்றிச் செல்வியின் அனுபவப்பகிர்வில் இலங்கை அரசு வழங்கிய புனர்வாழ்வு பீதியுடன் கழிந்த பொழுதுகளையும், உணவுக்கும் - நீருக்கும் அல்லற்பட்ட அவலமான நாள்களையும், தூக்கம் தெளிந்த இரவுகளில் தோழிகளுடன் பகிர்ந்து கொண்ட விழிகசியும் வேதனைகளையும் , பழைய உறவுகளின் பசுமையான நினைவுகளையும் கூட துல்லியமாகத் தொட்டுச் சென்றிருக்கின்றார் காலநியதியின் காரணமாகத் தடுப்பு முகாம்களுக்குள்ளும், சிறைகளுக்குள்ளும், புனர்வாழ்வு மையங்களிலிருந்தும் புகுத்தப்பட்ட பெண் போராளிகள் பற்றி நமது சொந்தச் சமூகமே சந்தேகம் கொண்டு நோக்குவது வெந்த புண்ணில் வேலைப்பாய்சுவது போன்றது.

இந்த நிலையில் பெண் போராளிகள் பற்றிய பல உண்மைகளை உணர்த்தும் முன் மட்டமாய் இந்த நூல் உருப்பெற்றிருப்பது சமூகத்தின் சந்தேகங்களுக்கும் நவநாகரிக அர்த்தங்களுக்கும் ஒரு முற்றுப்புள்ளியை இட்டு வைக்கும் என நம்பலாம்.

ஓர் இலட்சியத்துக்கான சமர்ப்பணம் என்பது மிக அதிகமான வேதனைகளுடன் கூடிய கல்லும், முள்ளும் நிறைந்த கரடுமுரடான பாதையினூடே மட்டும் தான் நிறைவேற்றப்பட முடியும். இந்த நூலைச் சிறைக்கூடங்களில் தம்மை உருக்கிக் கொண்டிருக்கம் தமிழ் அரசியல் கைதிகளுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளார் நூல் ஆசி ரியை.

ஒவ்வொரு முன்னாள் போராளியினதும் நெஞ்சறைக்குள் இருந்து வலியை ஏற்படுத்துகின்ற விரட்ட முடியாத பல சங்கடங்களும், சம்பவங்களும் தேங்கிக் கிடப்பதை வெற்றிச் செல்வியின் 'ஆறிப்போன காயங்களின் வலி' எனும் ஆவணம் பறைசாற்றுகின்றது. எனவே காலச்சூழலை கையகப்படுத்தி அவைகள் ஆவணப்படுத்த வேண்டும். அதற்கு வளமும் , பலமும் மிக்க ஆதரவுக்கரம் நீட்ட முன்வரவேண்டும் .






ஒரு இலட்சியத்துக்கான சமர்ப்பணம் என்பது – மிக அதிகமான வேதனைகளுடன் கூடிய கல்லும், முள்ளும் நிறைந்த கரடுமுரடான பாதையினூடே மட்டும் தான் நிறைவேற்றப்பட முடியும்.

## வவுனியா தாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலய மணிவிழா நிகழ்வுகள்









வவுனியா தாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலயத்தின் மணிவிழா நிகழ்வுகள் கடந்த 24 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி எம். மோகன் தலைமையில் இடம்பெற்றது. இதில் வடமாகாண கல்வி அமைச்சர் திரு. த. குருகுலராஜா, வடமாகாண சபை உறுப்பினர் ஜி. ரி. லிங்கநாதன், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய அதிபர் அருட்சகோதரி செபமாலை ஜெபநாயகி, சமயத்தலைவர்கள் மற்றும் அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், எனப் பலரும் கலந்து கொண்டனர். மணிவிழா நிகழ்வை முன்னிட்டு, 60 ஆவது ஆண்டைக் குறிக்கும் முகமாக கேக் வெட்டப்பட்டுப் பரிமாறப்பட்டது பாடசாலை நூலும், பாடசாலையின் அதிபரால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# எமது கலாசாரமே பெண்களை ஓரம் கட்டுவது நீதியா?



உடுவிலூர் கலா

சமூகவாழ்க்கை என்பதுஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது. அதேபோல் கற்பும் ஒழுக்கமும் இருபாலாருக்கும் பொதுவானது. தாய்வழி மரபு தந்தைவழி மரபு முறையாக தோற்றம் பெற்றதன் விளைவு தமிழ்க் கலாசாரமானது, அதிகளவான அழுத்தத்தை பெண்ணுக்கே கொடுத்து வருகிறது. ஜனனம் முதல் சாவு வரை பெண்ணே கலாசாரத்தின் கர்த்தா என்றும் கலாசாரத்தின் பாதுகாப்பு பெண்ணின் கரங்களிலேயே ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் அர்த்தப்படுகிறது.

எமது கலாசாரம் மட்டுமல்ல வேற்றுக் கலாசாரமும் பெண்களை அடிமைப்படுத்தத் தவறவில்லை. ஆனால், எம் கலாசாரம் அதிகளவு அழுத்தங்களைக் கொடுக்கிறது என்பது உண்மையான ஒன்று. இந்த அழுத்தமானது பெண்களை ஒழுக்கசீலர்களாக மையப்படுத்தினாலும்கூட ஒழுக்க விதிகளை மீறவும் செய்கின்றது.

திருமணத்தின் போது தாலி, மெட்டி, மஞ்சள், குங்குமம், பூ என்பன மங்கலமாக அணிவிக்கப்பட்டு திருமகளாக, மணமகளாக சுமங்கலியாகப் பார்க்கும் சமூகம் கணவனின் பிரிவின் போது இவற்றைப் பெண்ணிடமிருந்து பறிப்பதோடு விதவை என்றும் முன்னிற்கத் தகுதியற்றவள் என்று இடித்துரைத்து வதை செய்கிறது. பூப்புனித நீராட்டு, வளைகாப்பு, திருமணம், குழந்தையைத் தொட்டிலிடுதல் என பெண்ணை அலங்கரித்துப் பார்க்கும் சமூகம் கணவனை இழந்த பெண்ணை இந்நிகழ்ச்சிகளில் முன்னிற்க அனுமதிப்பதில்லை. இந்தக் கருத்தியல் கொள்கைகளுக்கு இசைவாக்கம் அடைந்து விட்ட நிலையில் பெண்களே ஒதுங்கி வாழ்வதும் மறைந்து நின்று கண்ணீர் வடிப்பதும் இன்றும் மெருகேறும் காட்சிகள்.

பெண் கன்னியாக இருப்பது மறுக்கப்பட்ட காலத்தில் வாழை மரத்தை மணவாளனாக எண்ணித் தாலிகட்டியபின் மரத்தை வெட்டி விதவைக் கோலம் கொள்ள வற்புறுத்தப்பட்டது அவளை விதவையாக அலங்கரித்தார்கள். கன்னியாகவே வாழ்ந்திருக்கலாம் அல்லது வாழைக்குத்தாலிகட்டி சுமங்கலியாக வாழப் பணித்திருக்கலாம். சமூகப்பிடி அவ்வளவு வலிமையானது, அதுமட்டுமல்ல திருமணமான பெண் செந்நிறத் திலகமும் கன்னிப் பெண் கறுப்புத்திலகமும் அணிய நிர்ப்பந்திக்கப்பட்டாள். இவை ஏன்? பெண்களை அடையாளப்படுத்தத்தானே. எவரிடமிருந்து ஆண்களிடமிருந்து அடையாளப்படுத்தவே இந்த நிலை.

மாதவிடாய்சுற்றில் 28 நாள்களுக்கொருமுறை கருப்பையில் உற்பத்தியாகும் முட்டை குருதியாக வெளியேறுகிறது. இந்த முட்டைக்கருவே குழந்தையை உருவாக்குவது. இதனை மூடநம்பிக்கையாகக் கொண்டு தீட்டு என்றும் துடக்கு என்றும் ஒரு தீண்டாமையையே உருவாக்குகிறார்கள். மாதவிடாய் காலங்களில் இன்றும் பெண்கள் ஓரங்கட்டப்பட்டு வாழ்வதை காணமுடியும். உடலில் உள்ள குருதி வெளியேறுவதால் இந்த நாள்களில் சத்துணவு உட்கொண்டு இளைப்பாறி வாழவேண்டும் பெண்கள்.

வரதட்சணை கொடுத்து கட்டாய வியாபாரம் நடத்தும் முறையொன்று அன்றுதொட்டு இன்றுவரை பெண்ணின் திருமணத்தில் நிகழும் ஒரு இழிசெயல், வரதட்சணை ஒன்றினால் முதிர்கன்னி எனச் சிறப்புப் பட்டம் வழங்கி கௌரவிக்கும் சமூகம் திருமணமாகிப் பிரிந்துசெல்லும் பெண்களை வாழாவெட்டி என விருது வழங்குவதையும் காண்கின்றோம். வரதட்சணைக் கொடுமையால் உளபாதிப்புக்குள்ளான, தற்கொலையை நாடிய, திருமணமே வேண்டாம் என வாழும் பெண்களை இன்றும் எம் சமூகம் கொண்டுள்ளது.

இன்று பெண்கள் கடத்தப்படுகிறார்கள். பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்படுகிறார்கள். கூட்டுவன்புணர்வு செய்கிறார்கள். பாடசாலைகளில் ஆசிரியர்களால் வார்த்தைப் பிரயோகங்களும் அடிகளுமாக வன்முறை செய்யப்படுகிறார்கள். பெண்பிள்ளைகளைப் பற்றி அசிங்கமான ஆபாசமான துண்டுப் பிரசுரங்களை வெளியிடுகிறார் கள். கைப்பேசிகளில் இணையங்களில் பெண்களை ஆபாசமாகக் காட்சிப்படுத்துகிறார்கள். இதுவரை எத்தனையோ படுகொலைகள் வன்முறைகள் வன்புணர்வுகள் அரங்கேறிவிட்டன. அதற்கான அதியுச்ச தண்டனை வழங்கியதாகச் சரித்திரமே இல்லை.


ஆண்களின் கீழ்த்தரமான உணர்வுகளுக்கு பெண்கள் சுவையுணவாகப் பயன்படுகிறார்கள். பெண்களுக்கான நீதி ஒருபோதும் கிடைத்ததில்லை. ஆனால் ஆண்களின் கட்டாயத் தேவையாகப் பெண் உள்ளாள் என்பதை எவராலும் மறுக்கமுடியாது. பெண்கலைஞர்களின் பெரும் பங்களிப்பில் தோற்றம் பெறும் திரைப்படங் களிலும்சரி மெகாத் தொடர்களிலும் பெண்களுக்கான வன்முறைகளே சித்திரிக்கப்படுகின்றன. இவற்றை பெண்களே விரும்பி பார்த்து ரசிக்கின் றனர் என்கிற கசப்பான உண்மையை இவ்விடத்தில் வேதனையோடு பதிவு செய்கிறேன்.


ஆக கற்பென்றும் ஒழுக்கமென்றும் பெரும்சுமைகளைப் பெண்கள் மீது கலாசாரம் சுமத்துகிறது. ஆண்களை ஏன் விட்டு வைத்தது? பெண்ணை மட்டும் கலாசாரத்தின் பிம்பமாக நோக்குவது ஏன்? நாம் மதிப்பளிக்கும் வரவேற்கும் எம் கலாசாரங்கள் எவ்வளவு தூரம் பெண்களை அடிமைப்படுத்துகிறது. என்பதை சிந்தித்துணரவேண்டும். கலாசாரச் சூழல் திடீரென உருவான ஒன்றல்ல. பரம்பரை பரம்பரையாகப் பேணப்பட்டு அடுத்த சந்ததிக்குப் பக்குவமாக கடத்தப்பட்ட ஒன்று. தொடர்ந்தும் கடத்தப்படும் என்பதில் சந்தேகமில்லை. கலாசாரப் போர்வைக்குள் சரி, பிழை நோக்காது இதமாக குளிர்காய்ந்ததன் காரணத்தால் பெண் சமத்துவம் எட்டாக்கனியாக உள்ளது. சமூக வரையறைகளைப் புனிதமாகவும் கட்டுப்பாடாகவும் ஏற்றுக் கொண்டதன் பெரிய விளைவு இது என்று சொல்ல வேண்டும்.

நாகரிகத்தின் வளர்ச்சியால் ஒழுக்கவிழுமியங்களின் எச்சங்கள் எனப் போற்றும் எம் கலாசாரம் பெண்ணினத்தை அடிமைப்படுத்துவது மட்டுமல்ல மனிதத்தையே ஒரு புதிராக்கியுள்ளது. கலாசாரத்தின் அடிக்கட்டுமான இறுக்கங்களை பெண்ணினத்திடமே பலவந்தமாகத் திணிப்பதால், பெண்ணியம் கண்ணீர் வடிக்கிறது. பெண் தனது உடல், பொருள், ஆவி மூன்றையும் கணவனுக்கு அர்ப்பணித்து வாழும் ஒரு அர்ப்பணிப்புவாதி. கலாசாரத்தின் வக்கிரபிடியில் பெண் ஒரு தியாகியாக, சேவகியாக பன்முக சிந்தனையை உள்ளடக்கியே வாழ்கிறாள். வெளித்தோற்றத்தில் ஒழுக்க விழுமியங்களை கலாசாரம் பாதுகாத்தாலும் பெண்களை ஓரங்கட்டுகிறது. அக உளைச்சலுடன் மன விரக்தியையும் ஏற்படுத்துகிறது. ஏன் அடிமை நிலையை இறுக்கமடையச் செய்கிறது என்றே சொல்ல வேண்டும். தவறுகள் சுட்டிக்காட்டப்பட வேண்டும். ஒதுக்கப்பட்ட நிலையிலிருந்து மீள கலாசாரத்தின் துர்ப்பிடியிலிருந்து தளர்வடைய வேண்டும் பெண்கள். தியாகிகளாக மனதுக்குள் புழுங்கும் நிலையில் இருந்து மீண்டெழுந்து பெண் விடுதலையை நோக்கி விரைந்த பயணிக்க வேண்டும்.

திருமணத்தின் போது தாலி, மெட்டி, மஞ்சள், குங்குமம், பூ என்பன மங்கலமாக அணிவிக்கப்பட்டு திருமகளாக, மணமகளாக சுமங்கலியாகப் பார்க்கும் சமூகம் கணவனின் பிரிவின் போது இவற்றைப் பெண்ணிடமிருந்து பறிப்பதோடு விதவை என்றும் முன்னிற்கத் தகுதியற்றவள் என்று இடித்துரைத்து வதை செய்கிறது. பூப்புனித நீராட்டு, வளைகாப்பு, திருமணம், குழந்தையைத் தொட்டிலிடுதல் என பெண்ணை அலங்கரித்துப் பார்க்கும் சமூகம் கணவனை இழந்த பெண்ணை இந்நிகழ்ச்சிகளில் முன்னிற்க அனுமதிப்பதில்லை. இந்தக் கருத்தியல் கொள்கைகளுக்கு இசைவாக்கம் அடைந்து விட்ட நிலையில் பெண்களே ஒதுங்கி வாழ்வதும் மறைந்து நின்று கண்ணீர் வடிப்பதும் இன்றும் மெருகேறும் காட்சிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பசித்த அடியார்க்கு அமுது அளித்த ஈசன்

**வி.செல்வரத்தினம் ஜே.பி**


சிவபெருமான் சுந்தரருடன் தோழமை நெறியில் பழகி வந்தவர். அவர் சுந்தரருடன் பல விதமான திருவிளையாடல்களைப் புரிந்துள்ளார். ஒருமுறை சிவத்தல யாத்திரை செய்யவிரும்பி தன் அடியார்களுடன் பல சிவத் தலங்களுக்குச் சென்று வணங்கிப் பின் திருக்குடுகாவூருக்குப் போய் கொண்டிருந்தார். அப்போது சுந்தரருக்கும் அடியார்களுக்கும் தாகமும், பசியும் அதிகமாயின. அத்துடன் கடும் வெயில் வேறு. இதனை அறிந்த சிவபெருமான் சுந்தரர் வரும் வழியில் ஒரு பிராமண வேடம் தாங்கித் தண்ணீரும் பொதி சோறும் கொண்டு வந்து வைத்துக் கொண்டு வெயில் வெப்பத்தைத் தணிக்கும் பொருட்டு ஒரு பந்தலையும் அமைத்து சுந்தரரின் வரவை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார். அதே நேரம் சுந்தரரும், அடியார்களும் பந்தலைப் பார்த்தவுடன் மகிழ்ச்சி அடைந்தார்கள். மற்றும் அங்கு முதிய ஒரு பிராமணரும் நிற்பதையும் பார்த்தார்கள்.

இவர்கள் கிட்டப் போக முதிய பிராமணரான நமச்சிவாயம் அடியார்களே வாருங்கள்; பசியாற அமுது செய்யுங்கள் என்றார். அதற்குச் சுந்தரர் பெரியவரே! நாங்கள் மிகவும் பசித்திருப்பதை அறிந்து தாங்கள் சிவபெருமானைப்போல் வந்து எங்களுக்கு உதவுகிறீர்கள் என்றார்.

பின் சுந்தரரும் அடியார்களும் பந்தலின் கீழே அமர்ந்தார்கள். முதியவர் அனைவருக்கும் உணவு பரிமாறினார். பின்னர் தண்ணீரும் பருகினார்கள். முதியவர் பந்தல் தூணில் சாய்ந்து கொண்டு இருந்தார். சுந்தரரும் அடியார்களும் சற்றுப் படுத்து உறங்கினார்கள். பின் விழித்தெழுந்த சுந்தரரும் அடியார்களும் வியந்தார்கள். ஏனெனில், அன்புடன் உபசரித்த பெரியவரைக் காணவில்லை. அத்துடன் அங்கே இருந்த பந்தலையும் காணவில்லை. உடனே வந்தவர் எவரென்று சுந்தரர் உணர்ந்து கொண்டார்.

'தாயினும் சாலப்பரிந்து வந்து தமது பசியையும் தாகத்தையும் தீர்த்தவர் சிவனே தான். அவரது கருணையோ கருணை' எனக்கூறி 'இத்தனை யாமாற்றை அறிந்திலேன்' என்னும் திருப்பதிகத்தைப் பாடி திருக்குடுகாவூரை அடைந்து சுவாமி தரிசனம் செய்தார்.

மற்றொரு முறை தொண்டை நாட்டுத் திருத்தலங்களில் ஒன்றான திருக்கச்சூரில் இறைவனைத் தரிசித்த பின்பு சுந்தரர் பசியோடிருந்தார். அங்கு ஒரு முதியவர் தென்பட்டார். அவர் 'ஐயா ! தாங்கள் மிகவும் பசியால் களைத்திருப்பதுபோல் எனக்குத் தெரிகிறது; சற்றுப் பொறுங்கள். தங்களுக்காக திருக்கச்சூர் வாசிகளிடம் இருந்து உணவு பெற்று வருகின்றேன்' என்றார். அதற்கு சுந்தரர் "உண்மையில் எங்களுக்குச் சரியான பசி. நாங்கள் இங்கேயே காத்துக் கொண்டிருக்கிறோம்" என்றார்.



பெரியவர் கையில் திருவோட்டுடன் சென்று திருக்கச்சூர் வீடுகளில் உணவு பெற்று வந்தார். பின் சுந்தரருக்கும் மற்றும் அடியார்களுக்கும் பசியாற உணவு அளித்து உண்ணச் சொன்னார் பெரியவர். பசியாறிய பின்னர் சுந்தரர் பெரியவரைப் பார்த்து "நல்ல நேரத்தில் உணவுபெற்று வந்து அளித்தீர்கள். மிக்கநன்றி மிக சந்தோசம். தாங்கள் யார் எனக் கேட்டார்." உடனே முதியவர் மறைந்து விட்டார். மீண்டும் வந்து எமக்கு அமுது படைத்தது எவரென்பதை உணர்ந்து கொண்டனர். சுந்தரரும் அடியார்களும் ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய கருணைக் கடலான இறைவன் மீண்டும் எமக்கு உண வளித்து உதவியிருக்கிறார். அவரைப் புரிந்து அவரின் அருளைப் பெறுவோமாக.

குண்டையூர் என்பது திருவாரூருக்கு அருகில் உள்ள சிற்றூர். ஒரு முறை அந்த ஊர் வேளாண் செம்மல் குண்டையூர்க்கிழார் திருவாரூரில் சுந்தரர் தங்கியிருந்தபோது அவரின் மேல் அன்பு கொண்டு ஏராளமான நெல்லும் பருப்பும் அளித்து வந்தார். ஒருவருடம் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டதும் காணிக்கையாகக் கொடுப்பது தடைப்பட்டது. இதனை நினைத்து மிக வருந்தினார் குண்டையூர்க்கிழார்.

**ஒருவருடம் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டதும் காணிக்கையாகக் கொடுப்பது தடைப்பட்டது. இதனை நினைத்து மிக வருந்தினார் குண்டையூர்க்கிழார். அதனால் சிவபெருமான் குண்டையூர் முழுவதும் நெல்லை நிரப்பி அவரின் வருத்தத்தைப் போக்கினார்.**

அதனால் சிவபெருமான் குண்டையூர் முழுவதும் நெல்லை நிரப்பி அவரின் வருத்தத்தைப் போக்கினார். உடனே குண்டை யூர்கிழார் சுந்தரரிடம் சென்று வன்தொண்டரே! தங்கள் பொருட்டு ஈசன் அளித்த நெற்குவியலைத் தாங்கள் திருவாரூருக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார். அதற்கு சுந்தரர் "ஈசனே குண்டையூர்க்கிழார் கொடுத்துள்ள நெல்லை திருவாரூருக்கு எடுத்துச் செல்லத்தக்க ஆளை நீரே ஏற்றருள வேண்டும்" எனக் கண்டிப்பாக கேட்டார். அவர் ஈசனின் தோழன் அல்லவா.

சிவபூதங்கள் நெற்குவியலைத் திருவாரூரில் பரவைநாச்சியார் இருந்த தெருமுழுவதும் குவித்து விட்டனர். அதனைக் கண்ட பரவையார் இது சிவபெருமானின் அருள்தான் என்பதை அறிந்து கொண்டார்.

"சிவ அருளால் கிடைத்தவை இந்த நெல், ஆதலால் அவரவர் வீட்டுவாசலில் இருக்கும் நெற்குவியலை அவரவர்களே எடுத்துக் கொள்ளுங்கள்" எனப் பரவையார் கூறினார். நல்லதே சொன்னாய் பரவை, ஈசன் கொடுத்தது ஈசனின் குழந்தைகளான மக்களுக்கே போய்ச்சேர வேண்டும்.

சிவபெருமானுக்குச் சேவை செய்ய விரும்புபவர்கள் அவரது பிள்ளைகளாகிய இந்த உலக உயிர்கள் அனைத்திற்கும் முதலில் சேவை செய்ய வேண்டும்–என்றார் சுவாமி விவேகானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூதூர் கிழக்கில் நவராத்திரி விரதம்

அ.அச்சுதன்

அர்த்தமுள்ள இந்து மதத்தில் அனேக விரதங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் சிவ விரதம், சக்தி விரதம், விநாயக விரதம், சுப்பிரமணியர் விரதம், வீரபத்திரர், வைரவர் விரதங்களுடன் நவக்கிரக விரதங்களும் மேலும் பல விரதங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஏதோ ஒரு வகையில் மனிதன் பொறுமை பேணுவதற்கும் மனம், அமைதி பெறுவதற்கும் ஆன்மா ஈடேற்றம் பெறுவதற்கும் ஆரோக்கியமாக வாழ்வதற்கும் இந்த விரதங்கள் அனுகூலம் அளிக்கின்றன எனலாம்.

எல்லா மதங்களிலும் விரத அனுஷ்டானம் இடம்பெறுவதையும் அது பல்வேறு வகையாகக் கைக்கொள்ளப்படுவதையும் காணலாம். கன்னி மாதம் எனப் பெயர் கொண்ட புரட்டாதி மாதத்தில், இந்து மக்களைப் பொறுத்தமட்டில் அவர்களால் கடைப்பிடிக்கப்படும் புரட்டாதிச் சனி விரதமும், நவராத்திரி விரதமும் மிகவும் விசேடமானவை. அன்றாட வாழ்வில் சர்வமும் சக்தி மயம் என்பதற்கிணங்க எல்லாம்வல்ல ஆதிபராசக்தியை வேண்டிக் கலைமகள் -அலைமகள், மலைமகள் ஆக காட்சி தரும் மகா சக்தியிடம் கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூப்பெரும் பேற்றையும் பெற்று, மனிதன் மனிதனாக வாழ்வதற்காக அனுஷ்டிக்கப்படும் விரதமே நவராத்திரி விரதமாகும். இது ஒன்பது தினங்களைக் கொண்டது. இந்த விரதம் பற்றி பார்ப்போம். புரட்டாதி மாதத்தில் வரும் பூர்வபட்சம் வளர்பிறை பிரதமை திதியில் (அமாவாசை தொடர் பற்றிருந்தால்) ஆரம்பித்து நவமி வரையான 9 இரவுகள் துர்க்கா லட்சுமி சரஸ்வதி தேவியரை முறைப்படி கும்பத்தில் கொலு வைத்து விசேட பூசை ஆராதனை தீபாராதனைகள் செய்து வழிபட்டு பத்தாம் நாள் விஜய தசமியில் மானம்பூ என்று சொல்லப்படும் ஸமிவிருட்ச பூசை (கன்னி வாழை) வெட்டிக் கும்பம் சொரிதலுடன் இந்த விரத விழா முடிவடையும். பிரதமை முதல் அட்டமி வரை ஒரு வேளை உணவு உண்ணல், நவமியில் உபவாசம் இருத்தல் ஆகியவற்றுடனான இந்த விரத அனுஷ்டானமானது நிகழும் துர்முகி வருடம் புரட்டாதித் திங்கள் 15ஆம் நாள் (01.10.2016) சனிக்கிழமை 3ஆம் புரட்டாதிச் சனி விரத நாளன்று ஆரம்ப மாகின்றது. முதல் 3 நாள்களும் துர்க்கா பூசையும். அடுத்த 3 நாள்களும் லட்சுமி பூசையும், இறுதி மூன்று நாள்களும் சரஸ்வதி பூசையுமாக இடம்பெறும். புரட்டாதியில் வரும் நவமி திதியை 'மகா நவமி' -என்றும் தசமி திதியை விஜய தசமி-என்றும் கூறப்பட்டுள்ளது. மகா நவமி 9 ஆம் திகதி மாலை 6.20 முதல் மறுநாள் மாலை 6.30 வரையாகும். விஜயதசமியில் விரதகாரர்கள் பாரணை பண்ணுவார்கள். அன்று மாலை அதாவது 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கன்னிவாழை வெட்டி, கும்பம் தூக்கி ஊர்வலம் செய்வார்கள். இதுவே பரவலான நடைமுறை வழக்கு. இந்தக் கும்ப விழா ஊர்வலம் 02 தொடக்கம் 03 நாள்கள் வரையும் இடம்பெறக்கூடும்

திருகோணமலை மாவட்டம் மூதூர் கிழக்கில் கும்ப விழா எப்படி என்று பார்ப்போமானால், அங்குள்ள சேனையூர், கட்டைப்பறிச்சான், அம்மநகர், மருத நகர், சந்தோசபுரம், கடற்கரைச் சேனை, சாலையூர், [illegible] முறையிலான மாந்திரிக [illegible] நவராத்திரிக் கும்பவிழா இடம்பெறுவது நடைமுறையாகும். இவை இந்தப் பகுதிகளில் மட்டுமே இடம்பெறும் சிறப்பான நிகழ்வுகளாகும். இதனை வேறு எங்கும் காணமுடியாத செயற்பாடு எனலாம்.

திருகோணமலை நகரப் பகுதியிலும் தம்பலகாமத்திலும் கூட நவராத்திரி கும்பவிழா நிகழ்வுகள் இடம்பெற்றாலும், மூதூர் கிழக்குப் பகுதிகளில் நடைபெறும் மந்திர ஜந்திர-தந்திர-உட்சாடன மாறன தம்பன மோகன எதிரேத்து வித்தைகளையும் சுவாமி ஆடல் உருவேற்றல் சன்னதம் ஆட்டல் உரு வெறி ஆடும் சன்னதகாரரை மந்திரம் கற்ற எதிர்தரப்பினர் தமது மந்திர பலத்தால் படுகளம் போட்டு விழுத்துவதும், சுவாமி ஆடி விழுந்தவர்களை எழும்ப விடாமால் பேச்சு மூச்சு அற்று மயக்க நிலையில் கிடக்க கட்டு மந்திரம் சொல்லி ஐம்புலனையும் அடக்கி ஆடாமல் அசையாமல் கட்டுவதையும் ஊர் வலத்தில் ஆடிவரும் கும்பகாரரை மந்திர சக்தியால் கோடு கீறி ஆணையிட்டு மறிப்பதையும், தடைப்பட்டு நிற்கும் சன்னதகாரரை அகவல் காவியம் மந்திர உட்சாடனம் அகோரம் ஏற்றி ஆடவைத்து தடையை தாண்ட வைக்கும் பூசாரிமாரரையும், பறைமேளம், தண்டை, உடுக்கு, சிலம்பு, கைத்தாளம் போட்டுப் பாடுபவர்களையும் மூதூர் கிழக்குப் பகுதியிலேயே அதிவிசேடமாகக் காணலாம். இந்தக் கும்ப விழா கோலாகல நிகழ்வுகள் பற்றி சேனையூர் கவிக் குயில்ன் சிறப்பித்து பாடிய கும்மிப் பாடலை பாருங்கள்.

மங்கையரே கூடி வருங்கடி ஒன்றாய் சேருங்கடி
மருதடி சேனையூர் கும்பத்தை பாருங்கடி
எங்கும் மங்கள விழாக்கோலம் இங்கு
இல்லாங்கள் தோரும் பூரண நிறைகுடங்கள்
ஆடிவாராள் கும்பம் ஆடிவாராள் காளி
ஆனந்தமாய் துள்ளி ஆடிவாராள் நீங்கள்
கூடி குலாவியே கும்மியை கொட்டடி
ஆடிப்பாடியே வாருங்கடி.

இப்படி பல்வேறுபட்ட பாடல்கள் நவராத்திரி கும்பவிழா கோலாகல பெருவிழாவில் பாடப்பட்டு வருவதை ஒவ்வொரு கும்பவிழா நிகழ்வுகளிலும் சிறப்பாகக் காண லாம்.

வாலை புவனை திரபுரை என முச்சக்திகளையும் பத்தி முறையில் சேனையூரிலும் மருதநகரிலும் தனித் தனியாக தாபனம் பன்னி வழிபட்டு வருவது காலம் காலமாக இடம்பெற்று வருகின்றது.

மாரி-வராகி-காளி-பேச்சி-வீரபத்திரர், வைரவர், அநுமான், நரசிம்மன், மதுரைவீரன், வீரபாகு என தேவாதிகள் தலைசுற்றி ஆடுவது கண்கொள்ளாக் காட்சிகளாகும். இந்த நிகழ்வுகளில் ஒரு சிலருக்கு கலை ஆடுபவர்கள் அருள் வாக்கு கூறுவதும் உண்டு.

கும்ப விழா நிகழ்வுகளில் தேங்காய்பலி, இளநீர்ப்பலி, திருநீற்றுக் காய்ப்பலி, சாட்டைப்பலி, என்பனவும் இடம் பெறுவதைக் காணலாம். இந்த அற்புதக் காட்சியை மூதூர் கிழக்கில் காணலாம்.

> எல்லா மதங்களிலும் விரத அனுஷ்டானம் இடம்பெறுவதையும் அது பல்வேறு வகையாகக் கைக்கொள்ளப்படுவதையும் காணலாம். கன்னி மாதம் எனப் பெயர் கொண்ட புரட்டாதி மாதத்தில் சைவ மக்களைப் பொறுத்தமட்டில் அவர்களால் கடைப்பிடிக்கப்படும் புரட்டாதிச் சனி விரதமும் நவராத்திரி விரதமும் மிகவும் விசேடமானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணிப்பு நிறைந்த அதிபர் ஐயம்பிள்ளை இராசரத்தினம்

**தமிழருவி த.சிவகுமாரன்**

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி அதிபர் ஐயம்பிள்ளை இராசரத்தினம் 39 ஆண்டுகால கல்விச்சேவையில் இருந்து நாளைய தினம் ஓய்வு பெறுவதையொட்டி கல்லூரியின் ஆசிரியர்களும் மாணவர்களும் கல்விசாரா உத்தியோகத்தர்களும் இணைந்து பிரியாவிடை வைபவத்தை சிறப்பாக நடத்துகிறார்கள்.

இவர், இலங்கையின் பல மாவட்டங்களில் பல்வேறு பதவி நிலைகளில் வேறுபட்ட சூழ்நிலைகளிலும் தன்னுடைய நிர்வாக நடவடிக்கைகளை சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு சிறப்பாக நடத்தி வந்தவர். வவுனியா, சின்னடம்பன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் உதவி ஆசிரியராக 1978இல் கல்விப்பணியாற்றத் தொடங்கிய இவர், அதே பாடசாலையில் அதிபராக 1982 முதல் கடமையாற்றினார். பின் வவுனியா, புதுக்குளம் மகா வித்தியாலயத்தில் கொத்தணி அதிபராகப் பொறுப்பேற்று சிறப்புற பணியாற்றி, வவுனியாக் கல்வித் திணைக்களத்தில் பாடசாலை முகாமைத்துவ ஆலோசகராக 1995 முதல் கடமையாற்றி பின் வவுனியா, நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தில் அதிபராக பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றினார். வவுனியா கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகச் சேவையாற்றி அதன் பின் இக்கட்டான சூழ்நிலை நிலவிய காலகட்டத்தில் தேசிய பாடசாலையான வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபராகப் பொறுப்பேற்றார்.

இவர் பதவியேற்று கல்லூரியை வழி நடத்திய காலகட்டம் முக்கியமானது. அலைகள் நிறைந்த பெருங்கடலில் கப்பலை மிகச் சிறப்பாக நிதானமாக கொண்டுசெல்லும் மீகாமனுக்கு ஒப்ப கல்லூரியை திறமையாக வழிநடத்தி மாணவர்கள் தமது கல்வி இலக்கை அடைய வசதிகள் செய்தார். அன்பும் கண்டிப்பும் நிறைந்த ஆளுமையோடு பெருந்தொகையான மாணவர்கள் அதுவும் ஆண் பிள்ளைகள் நிறைந்த கல்லூரியை அசாதாரண சமூகச் சூழல் நிலவிய காலத்தில் பொறுப்பேற்று சிறப்பாக வழிப்படுத்தினார். க.பொ.த. சாதாரண தரம், உயர்தரம், ஐந்தாமாண்டு புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் மாவட்டத்தில் முதல் இடங்களை இக்கல்லூரி மாணவர்கள் பெற்றுள்ளதை அக்கால பரீட்சைப் பெறுபேறுகள் காட்டும்.

கல்லூரியில் மாணவர்களை ஒழுக்க விழுமியங்களுடன் சகல வழிகளிலும் நெறிப்படுத்திய இவர் திறன் பாராட்டத்தக்கது. ஆசிரியர்களுடன் அன்புடனும் நட்புடனும் பழகியபோதும் அவர்கள் தமது கடமையைச் சிறப்பாக ஆற்றவேண்டும் என்பதில் மிகக் கண்டிப்பாக இருந்தார். கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் சிறந்த பங்களிப்பைச் செய்ய தூண்டுகோலாக விளங்கினார்.

தமிழ்மொழித்தினம், ஆங்கிலமொழித் தினம் போன்றவற்றில் அகில இலங்கை ரீதியிலும் மாகாணமட்டத்திலும் கல்லூரி முதலிடங்களை இவர் காலத்தில் அதிகளவில் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. கல்லூரியின் நன்மையைக் கருதியும் ஆசிரியர்கள், மாணவர்கள் நன்மையைக் கருதியும் அரிய பெரிய மகாயாகம் ஒன்று இவர் காலத்தில் கல்லூரியில் இடம்பெற்றமையும் ஈண்டு நோக்கற்பாலது.

தன் உள்ளத்தில் எழும் எண்ணங்களை சம்பந்தப்பட்டவர்களுடன் நேருக்குநேர் உரையாடி கல்விப்பிரச்சினைகளை தீர்த்துவைப்பதுடன் பலவிடயங்களையும் ஒரே நேரத்தில் அவதானித்து ஆவன செய்யும் செயல்வீரராக விளங்கினார். கல்லூரிக்காக தனது உடல், உள்ளம் இரண்டையும் முழுமையாக அர்ப்பணித்த அதிபர் இவர் என்றால் மிகையில்லை. ஏறத்தாழ நாலாயிரம் மாணவர்களும் நூற்றியெழுபது ஆசிரியர்களும் பதினைந்திற்கும் மேற்பட்ட கல்விசாரா உத்தியோகத்தர்களையும் கொண்ட பிரமாண்டமான கல்லூரியை பொறுப்பேற்று



சிறப்பாக வழிநடத்துவது என்பது சாதாரண விடயமல்ல. அதனை தனது பதவிக்காலத்தில் அதிபர் இராசரத்தினம் நிறைவேற்றி பெற்றோர்களினதும் நலன் விரும்பிகளினதும் மேலதிகாரிகளினதும் பெருமதிப்பை ஒரு குறுகியகாலத்தில் பெற்றிருந்தார். இவரது சேவையைப் பாராட்டி அகில இலங்கை இந்துக் குருமார் ஒன்றியம் "வித்தியா கலாபமணி" என்ற விருதை அன்று வழங்கி கௌரவித்திருந்தது.

இதன்பின் வவுனியா, வெங்கலச் செட்டிகுளம் கோட்டக்கல்விப் பணிப்பாளராகவும் பின் வவுனியா நகர கோட் டக்கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றிய பின் தேசிய பாடசாலையான கொழும்பு விவேகாணந்தாக் கல்லூரியில் அதிபராகவும் அதன்பின் தன் கல்விச் சேவையின் நிறைவாக தேசிய பாடசாலையான பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் அதிபராகவும் சிறப்பான பணியாற்றி ஓய்வு பெறுகிறார். இக்கல்லூரிகளின் வளர்ச்சியிலும் பெரிய பங்காற்றினார். உண்மை, நேர்மை, அர்ப்பணிப்பு, துணிவு, பக்கச்சார்பின்மை என்பவற்றை தன்னுடைய அணிகலன்களாகக் கொண்டு சிறப்பாக வழிநடத்தினார். இவர் பிரபல்யமான மூன்று தேசிய பாடசாலைகளில் அதிபராக இருந்த பெருமைக்குரியவர். சில பாடசாலைகளை பிரபலம் மிக்க பாடசாலைகள் ஆக்கினார்.

இலங்கை அதிபர் சேவையிலும் இலங்கை கல்வி நிர்வாகச் சேவை யிலும் இணைந்து தன் சிறந்த பணியை ஆற்றிய இவருக்கு ஈழத்து பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகம், சிலப்பதிகார முத்தமிழ் காப்பிய பெரு விழாவில் 'தமிழ் புரவலர்' என்னும் விருதை வழங்கிக் கௌரவித்திருந்தது. இலங்கைகல்விஅமைச்சு, சமயக்கல்வி ஆலோசகர் சபை உறுப்பினராக இவரை நிய மித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

வவுனியா மாவட்டத்தில் சின்னடம்பன் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பட்டதாரி. பட்டப்பின் கல்வி டிப்ளோமா, பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா ஆகியவற்றைப் பெற்ற முதல்தர அதிபரான இவர், தமிழ்மொழியிலும் தமிழர் தம் பண்பாட்டுப் பாரம்பரியத்திலும் தளராத பற்றுக்கொண்டு அதைத் தான் அதிபராக பதவி வகித்த கல்லூரிகளிலும் நெறிப்படுத்தி வந்தார். இத்தகைய பன்முகப் பரிமாணங்கள் பல கொண்ட அதிபர் ஐயம்பிள்ளை இராசரத்தினம் நாளைய தினம் ஓய்வுபெற்றுச் செல்வதையிட்டு அவரை இலங்கையின் தமிழ்க் கல்விச்சமூகம் சார்பாக வாழ்த்துவதோடு, அவரது ஓய்வுகாலம் சிறப்பாக அமையட்டும்.








## வவுனியா சைவப்பிரகாச மகளிர் ல்லூரியின் 'பிரகாசம் சஞ்சிகை' வெளியீடும், ரிசளிப்பு நிகழ்வும்

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும் பிரகாசம் சஞ்சிகை வெளியீடும் நேற்றுக் காலை 9.30மணிக்கு வவுனியா கலாசார மண்டபத்தில் பாடசாலை அதிபா திருமதி பா. கமலேஸ்வரி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் தம்பிராசா குருகுலராசா கலந்து கொண்டார். கௌரவ விருந்தினராக வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் மு. இராதாகிருஷ்ணனும், விசேட விருந்தினர் களாக வவுனியா தெற்கு கோட்டக்கல்வி பணிப்பாளர் எம்.பி. நடராஜ், வடமாகாணசபை உறுப்பினர் செந்தில் நாதன் மயூரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டதுடன் பாடசாலை மட்டத்தில் அதி கூடிய சாதனை படைத்த மாணவர்களுக்குப் பரிசில்களும் வடமாகாண கல்வி அமைச்சரின் துணைவியாரால் வழங்கப்பட்டது. பிரகாசம் சஞ்சிகையை வடமாகாண கல்வி அமைச்சரிடம் பாடசாலை அதிபர் வழங்கி சஞ்சிகை வெளியீட்டை ஆரம்பித்துவைத்தார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னாரில் சிறப்பாக இடம் பெற்ற வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழா

வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழா கடந்த வெள்ளி, சனி ஆகிய இரு தினங்கள் மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்தப் பெருவிழா கடந்த 10 வருடங்களின் பின்னர் மீண்டும் இம்முறை மன்னாரில் நடந்துள்ளது. முதல் நாள் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பமானது.

முதலில் மன்னார் பிரதேச செயலகத்திற்கு முன் அமைக்கப்பட்ட ஔவையார் உருவச் சிலையை முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் வைபவ ரீதியாகத் திரை நீக்கம் செய்து திறந்து வைக்க மாவட்டச் செயலர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய மாலை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட செயலக பிரதான வீதியில் இருந்து விருந்தினர்கள் மாலை அணிவித்து மங்கலகரமான வரவேற்புடன் மன்னார் நகர மண்டபத்தின் அலெக்ஸ்சாண்டர் அலெக்ஸ் அரங்கத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டார். கௌரவ விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வடமாகாண அமைச்சர்களான பா.டெனிஸ்வரன், த.குருகுலராஜா, வடமாகாண சபை உறுப்பினர் வைத்தியர் ஜீ.குணசீலன், மற்றும் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன்,வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரெட்ணம், மாவட்டச் செயலக அதிகாரிகள், பிரதேசச் செயலாளர்கள், திணைக்களங்களின் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது தமிழ்த்தாய் வாழ்த்து, வரவேற்பு நடனம்,கண்டி நடனம்,சிவ தாண்டவம்,மயில் நடனம் ஆகியவை சிறப்பு நிகழ்வுகளாக இடம் பெற்றதோடு,முதலமைச்சர் விருதும் வழங்கப்பட்டது.

இலக்கியம், இசைத்துறை, இசை நடனம், சிந்து நடைக்கூத்து, நாட்டுக் கூத்து, நாடகம், பரதநாட்டியம், ஓவியம், கிராமியக்கலை போன்ற துறைகளைச் சேர்ந்த 20 பேர் தெரிவு செய்யப்பட்டு முதலமைச்சர் விருது மற்றும் பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.குறித்த விருதுகளை வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் விருந்தினர்கள் இணைந்து வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. இரண்டாம் நாள் நிகழ்வு மறுநாள் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மன்னார் நகர சபை மண்டபத்தில் சவேரியான் லெம்பேட் அரங்கில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தலைமையில் இடம் பெற்றது.

அதில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கலந்து கொண்டார். இதன் போது மண்டபத்தில் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்றன.குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வடமாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா உட்பட பலர் கலந்து கொண்டனர். இதன் போது இலக்கிய விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (21-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேந்தனார் பல்லாண்டு பாட நகர்ந்தது தேர்

அராலியூர் வி. செல்வரத்தினம் (ஜே.பி)

சிதம்பரத்துக்கு அருகில் சேந்தன் என்ற விறகு வெட்டி இருந்தார். அவர் விறகை வெட்டிப் பின் அதனை விற்றுச் சீவியம் நடத்தி வந்தார். அவர் தாழ்ந்த குலத்தில் பிறந்தவர். ஆனால் சிறந்த சிவபக்தர். தினமும் சேந்தன் விறகு விற்ற பணத்தைக் கொண்டு, பகலில் ஒரு சிவனடியாருக்கு உணவளிப்பார். அதன்பின்தான் உணவருந்துவார். இது அவரது நடைமுறைப் பழக்கம். ஒருநாள் அதிகமாக மழை பெய்தது. இதனால் மனம் வருந்திய அவர் நடராஜப் பெருமானிடம் முறையிட்டார். இன்று என்னால் ஈர விறகு கொண்டுவர முடிந்தது. அதனை ஒருவரும் வாங்க மாட்டார்கள். இதன் நிமித்தம் அரிசி வாங்கக் காசு இல்லை. எனவே, கேழ்வரகில் களி செய்திருக்கிறேன். உணவு பெறுவதற்காகப் பல இடங்கள் சென்றும் ஒரு சிவனடியார்கூட தென்படவில்லையே? இன்று நான் என்ன செய்வேன்? என முறையிட்டார். சேந்தனின் தூய சிவபக்தியை நடராஜர் உலகுக்கு உணர்த்த விரும்பினார். அதனால் அவர் சிவனடியார் உருவத்தில் சேந்தனின் வீடு நோக்கிச் சென்றார். சேந்தன் சிவனடியாரைக் கண்டவுடன் சுவாமி! தாங்கள் எனது வீட்டுக்கு வந்து உணவருந்த வேண்டும் எனப் பணி வாகக் கேட்டார். அதற்குச் சிவனடியாராக வந்து இருக்கும் நடராஜர் சரி அப்படியே செய்கிறேன்–என்றார்.

உடனே சேந்தனார், சிவனடியாருக்கு உணவாக களியைக் கொடுத்தார். சிவனடியார் வடிவத்தில் வந்த நடராஜர் களி அருந்திய பின் அப்பனே! நீ அளித்த களியை மிகுந்த விருப்பத்தோடு சாப்பிட்டேன்! இந்த அடைமழையில் இனி யார் எனக்கு அடுத்த வேளைக்கு உணவு தரப்போகிறார்கள்? எனவே உன்னிடம் மிகுதியாக இருக்கும் களியையும் எனக்குக் கொடு, அதை நான் அடுத்த வேளை உண்பதற்கு வைத்துக் கொள்கிறேன் என்று கேட்டார். அதற்குச் சேந்தன் மிக சந்தோசத்துடன், ஒரு பழைய துணியில் முடிந்து சிவனடியாருக்குக் களி முடிச்சைக் கொடுத்தார்.

அந்தக் காலத்தில் தஞ்சைச் சோழ மன்னரின் புதல்வர் கண்டராதித்தர் சிறந்த சிவபக்தர். அவர் சிதம்பரம் கோயிலின் கூரைக்கு பொன் வேய்ந்து கொண்டிருந்தார்.

கண்டராதித்தர் நாள்தோறும் சிவபூசை செய்துகொண்டு வந்தவர். அவர் செய்த பூசையை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக, தில்லை நடராஜர் தன்னுடைய பாதச் சிலம்பை பூசையின் முடிவில் ஒலிப்பது வழக்கமாக இருந்த வந்தது. ஆனால், அன்றைய தினம் நடராஜரின் பாதச்சிலம்பொலி கேட்கவில்லை. நடராஜப் பெருமானே இன்று ஏன் தங்கள் பாதச்சிலம்பொலி எனக்குக் கேட்கவில்லை? இன்று எனது பூசையைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையா? நான் ஏதும் தவறு செய்து விட்டேனோ? என்று நினைத்துக் கவலையுடன் வீடு சென்றார். அன்று கண்டராதித்தர் கனவில் நடராஜர் தோன்றி அப்பனே கவலைப்படாதே! நீ செய்த பூசையில் ஒரு குறையுமில்லை. நான் சேந்தன் வீட்டில் போய் அவன் அளித்த களியை சாப்பிட்டேன். அதனால்தான் இன்று உனக்கு என் சிலம்பொலி கேட்கவில்லை.

தில்லை அந்தணர்கள் வழக்கம்போல் சிதம்பரம் கோயிலின் கருவறைக் கதவைத் திறந்தார்கள். அப்போது அங்கு நடராஜப் பெருமானைச் சுற்றி களியின் துகள்கள் எங்கும் பரவிச்சிதறிக் கிடந்தன. கருவறைக்குள் எப்படிக் களி வந்தது. இதை விட இறைவனின் ஆடையிலும் களி சிதறியிருக்கிறதே. எவரோ கோயில் கருவறைக்குள் நுழைந்து அசுத்தம் செய்திருக்கின்றனர். இது எவரோ இறை நம்பிக்கை இல்லாதவர்கள் செய்த வேலைதான். வாருங்கள், நாங்கள் எல்லோரும் போய் அரசன் கண்டராதித்தரிடம் இதைப் பற்றித் தெரிவிப்போம். அந்தணர்கள் சென்று அரசரிடம், மேலே சொல்லப்பட்ட நிகழ்வை தெரிவித்தார்கள்.

அப்போது கண்டராதித்தருக்கு இறைவன் கனவில் வந்து தன்னிடம் கூறிய உண்மை விளங்கியது.

உடனே அரசன், எவர் அந்தச் சேந்தன்? அவன் இருக்கும் இடம், அவனைப் பற்றிய முழுவிடயம் ஆகியவற்றை அறிந்துவரும்படி ஆணையிட்டார். உடனே சென்று எங்கும் தேடியும் சேந்தனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மன்னா எங்கு தேடியும் சேந்தன் பற்றிய விவரம் ஏதும் கிடைக்கவில்லை எனக் கூறினார்கள்.

சில நாள்கள் செல்ல தில்லை நடராஜப் பெருமானின் தேர்த்திருவிழா நடைபெற்றது. அதற்குச் சேந்தனாரும் வந்திருந்தார். நடராஜப் பெருமானைத் தேரில் அமர்த்திய பின்னர், அரசன் உட்பட எல்லோரும் தேரின் வடத்தைப் பிடித்து இழுத்தார்கள். அன்று கடும் மழை பெய்யத் தொடங்கியது. மழை யின் காரணத்தால் தேர்ச்சில்லு சேற்றில் புதைந்தது. தேரை இழுக்கச் சிறிதுகூட அசையவில்லை. தேர் அசையாததைக் கண்டு அரசன் மிகவும் மனம் வருந்தினார். என்ன செய்வது என்று தெரியாமல் கவலை அடைந்து இருந்தார்கள். அப்போது நடராஜப் பெருமானின் குரல் அசரீரியாக வானத்தில் இருந்து சேந்தா! நீ பல்லாண்டு பாடு எனக் கேட்டது. எல்லோரும் திகைத்து நின்றார்கள். யார் இந்தச் சேந்தன்? ஒன்றும் புரியவில்லையே.

உடனே சேந்தன் என்பவர் தேருக்கு முன்பு வந்து நின்று; நடராஜப் பெருமானே ஒன்றும் அறியாத என்னைப் பாடச் சொல்கிறீர்களே? நான் எப்படி உங்களைத் துதித்துப் பாடுவேன். நீங்கள் தான் எனக்கு அருள் புரிய வேண்டும்.

உடனே இறைவன் சேர்ந்தனாருக்கு "மன்னுகதில்லை... என்ற வரியை எடுத்துக் கொடுக்க சேந்தனாரும் இறைவன் அருளோடு பல்லாண்டு பாடினார்.

"மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போய் அகல" பல்லாண்டு பாட தேரும் அசைந்தது.

பின் தொடர்ந்து பதின்மூன்று பாடல்களால் இறைவனை வாழ்த்திப் பாடினார். உடனே சேந்தனாரை அரசரும், தில்லைவாழ் அந்தணர்களும், சிவனடியார்களும் வாழ்த்தி வணங்கினார்கள்.

மன்னர் தான் கண்ட கனவைச் சேந்தனாரிடம் தெரிவித்தார். நடராஜப் பெருமான் தான் தன் வீட்டில் களியுண்ண வந்த சிவனடியார் என்பதை அறிந்து சேந்தனார் மனம் உருகினார்.

*(12 திருமுறைகளில் 9ஆம் திருமுறையில் சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டு இடம்பெற்றுள்ளது.)*

# பத்திரமாய்ப் பார்வையாளர்களைப் பாத்திரமாக்கும் பேராசான்

கே.எஸ். சிவஞானராஜா

தமிழன்னையைத் தீர்க்க சுமங்கலியாகத் தங்க ஆபரணங்களால் அலங்கரித்து முத்துக்கள் நிறைந்த அட்டியலால் கழுத்திலே முத்தமிழை அணிவித்து, தூய தமிழால் தோய அவளின் உடம்பெல்லாம் நெய்வித்து, சந்தப் பாக்களினால் ஓரமெல்லாம் மணிகளாக்கி ஒலிக்கும் நாதமாக்கி, அவளது உதட்டிலே கம்பராமாயணத்தை ஒட்டவும், சொட்டவும், ஊட்டவும் செய்து அவளது கொங்கைகளைச் சுமந்த நெஞ்சமதில் கம்பரசத்தை நிரம்பச்செய்து, பார்ப்போரையும், கேட்போரையும், படிப்போரையும், தொடுவோரையும் பரவசப்படுத்தி, பரவசப்படும் ஒவ்வொருவரையும் பத்திரமாய்ப் பாத்திரமாக்கி பணியுருமாறு பெருமையாக்கி, பேறுடைய பேச்சாளனாக்கி, பெருந்தவத்தோர்களுக்கெல்லாம் ஆசையை அழித்தொழிக்கச் செய்து, அவதார புருஷனாகிய ஸ்ரீ இராமபிரானை இராம காவியத்தினூடாக இறைஞ்சுமாறும் வாழச்செய்து, புனித பாதையை இலங்கைக்கு வரமாக ஈந்த தனிப்பெருந் தலைவரே கம்பவாரிதியாம்! இ.ஜெயராஜ். ஆம்! யாழ்.இந்துக்கல்லூரி பெற்றெடுத்த தவப் புதல்வனாகிய இவர், கம்பராமாயணத்தைக் கரைத்துக் குடித்தவர் மட்டுமல்ல, காத்திரமாய்ப் படமாக்கியவரும் கூட! ஒரு காவியத்தை அக்குவேறு, ஆணிவேறாக ஆழமாகப் படித்த பேராசான் ஒருவர், இலங்கையில் எவராக இருக்க முடியும் என்ற வினாவுக்கு எல்லோராலும் ஒரேயொரு பதிலையே அளிக்க முடியும். அந்தப் பதில்தான் கம்பவாரிதி இ. ஜெயராஜ். பல்கலைக் கழகங்களில் கூடக் கண்டிராத கம்பதங்கச் சுரங்கங்களையும், கம்ப வயல்களையும் கம்பவாரிதி கம்ப விழாக்களிலே அள்ளிக் கொள்ளுமாறு இடம் குறித்துக் காட்டுகின்றார். அள்ளுகிறவர்கள் அள்ளிக் கொள்ளுகின்றார்கள். அள்ளாதவர்கள் அங்கலாய்க்கின்றார்கள். கொழும்பு, யாழ்ப்பாணமும் கம்பக் கடலில் பல தடவை நெடுந்தூரம் பயணித்து விட்டன. திருகோணமலையும், மட்டக்களப்பும், மலையகமும் கம்பக்கடலில் நீந்துவதற்கு வழிசமைத்துக் கொடுத்தேயாக வேண்டும். மேலும், மாணவர்களுக்கு மட்டும் ஒரு நாளை ஒதுக்குவது இன்னும் நன்மை பயக்கும்.

**ஆளுமை**

தனது சீர்களைக் கம்பராமாயணம் மூலம் பெருமதியாக்குவதில் கம்பவாரிதிக்கு நிகர் கம்பவாரிதியே. பணமோ, பதவியோ, பட்டமோ, பயனோ கருதாமல் பல சீடர்களை உருவாக்கிய தமிழிலக்கியப் பேராசான் கம்பவாரிதி ஜெயராஜ் ஒருவரே என்று துணிந்து கூறலாம். உருப்படியான, உண்மையான உலகம் உய்ய தமிழ்ப்பணி ஆற்றும் ஒருவருக்கு, வெளிநாட்டுப் பல்கலைக் கழகம் ஒன்றோ இரண்டோ அதியுயர்ந்த விருதை வழங்கிச் சிறப்பிக்கலாம். இலங்கை இத்தகைய விருதை வழங்குவதற்கு ஆவனபுரியுமாயின், அது இலங்கைக்கே பெருமையளிக்கும். உலகத்தில் கடையில் பொருள் வாங்குவதுபோல, பட்டங்கள் வாங்கியவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் பட்டத்தைப் போட்டு வறுத்து எடுப்பதைப் பார்த்தால், தமிழன்னை நோகாமல் என்னதான் செய்வாள். ஆனால் கம்பவாரிதிக்கு ஒரு கலாநிதிப்பட்டம் இலங்கையில் ஒரு நிறுவனம் கொடுப்பதாக இருந்தால், முதன்முதல் சந்தோசப்படுபவர் எவரென்றால், நல்லூர் கந்த சுவாமியார் ஆவார். ஏனென்றால் அந்தப் பெருமானே கம்பன் கழகத்தின் போசகராவார். இதிலிருந்து கம்பவாரிதியின் ஆளுமை என்றும், எங்கும் வென்றே தீரும், சுணக்கம் ஏன் தானோ.

இந்தியப் பேராசிரியர்களோடு சரிசமமாக நின்று சளைத்து விடாமல் விவாதித்து, போராடி, காவிய நுட்பங்களைத் துல்லியமாகக் கோடிட்டு, வெல்லுபவராக ஜெயராஜ் இலங்கையிலும், இந்தியாவிலும் முதன்மைப் படுத்தப் படுகின்றார். இது தமிழ் அன்னைக்குக் கிடைத்த அதியுயர்ந்த கௌரவமாகும்.

**அரங்கு**

உரையரங்கு, ஆய்வரங்கு, தெளிவரங்கு, இசையரங்கு, விவாத அரங்கு, பேச்சரங்கு, வாத்திய அரங்கு, வழக்காடு அரங்கு, மேன்முறையீட்டு அரங்கு, பட்டிமண்டப அரங்கு, குறைகேள் அரங்கு எனப் பல்வகை அரங்கு மூலம், ஆளுமையான பேச்சாளர்களையும், ஆய்வாளர்களையும், தீர்ப்பாளர்களையும், விரிவுரையாளர்களையும், கம்ப வாரிசுகளையும் உருவாக்கிய பெருமை கம்பவாரிதியையே சாரும். தமிழுக்கும், சமயத்துக்கும் ஒரு தலைவனைத் தமிழ் அன்னை பிரசவித்து விட்டாள் என்று துணிந்து கூறலாம்.

பரிசுத்தமான ஓர் தலைவானாக ஜெயராஜ் அரசியலுக்கும் நீதி சொல்லக் கூடியவராக விளங்குவதனால், தமிழ் அன்னை அவரை அரவணைத்து, ஆசீர்வதித்து, அரியணை ஏற்றப்போகிறாள். 2016 கம்பன் விழா அதனையே சுட்டி நிற்கின்றது. இசை வேள்வி ஆனது நிச்சயம் எதையோ கொண்டு வந்தே தீரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணெய்க் குளிப்பு!



எண்ணெயை சாதாரணமாகப் பலர் நினைக்கின்றனர். அரபு நாடுகள் இன்று தலை நிமிர்ந்து நிற்கக் காரணம் எண்ணெய்தான்.

தண்ணீரும் ஒரு அரிய பொருளாகப் போற்றப்படுகிறது.

சமீபத்தில் அமெரிக்காவில் இடம்பெற்ற ஒரு ஆராய்ச்சியில் ஒரு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இந்தியா வில் உள்ள கங்கை நதி, சீனாவின் வடக்குப் பகுதியிலுள்ள நதி மற்றும் மெக்ஸிக்கோ, ஜோர்டான், அரேபியா, அமெரிக்கா வின் தென் பகுதியிலுள்ள நதிகள் எல்லாம், என்றும் வற்றாத ஜீவ நதிகள் என்று கூறப்பட்டன. கங்கை போன்ற நதிகளின் நீர் வற்றிக் கொண்டிருக்கிறது. இன்னும் 30 ஆண்டுகளில் இந்தப் பகுதியில் கடுமையான தண்ணீர் பஞ்சம் வரப்போகிறது. குடிதண்ணீர் கிடைக்காது. உலகத்தில் மிகப் பெரிய நதியான நைல் நதியைப்போல் 20 நைல் நதிகள் அளவு தண்ணீர் வந்தால்தான் மக்களைக் காப்பாற்ற முடியும்.

ஞாயிறு குளித்தால் வடிவும் அழகும் போய்விடும். திங்கள் குளித்தால் அதிகப் பொருள் சேரும். செவ்வாய் குளித்தால் துன்பம் வரும். புதன் குளித்தால் மிக புத்தி வந்திடும். வியாழன் குளித்தால் உயரறிவு போய்விடும். வெள்ளி குளித்தால் செல்வம் மிகும். சனி குளித்தால் ஆயுள் அதிகமாகும்.

மேற்கண்டவை யாவும் பெண்களுக்கு. ஆண்கள் சனி, புதன் எண்ணெய் தேய்த்து குளிப்பது நல்லது

ஆண்களுக்கு, திங்கட்கிழமை, வெள்ளிக்கிழமை எண்ணெய் தேய்த்து குளித்தால் முடக்கு வாதம் வரும். செவ்வாய்க்கிழமை எண்ணெய் தேய்த்து குளித்தால் முதுகு உளைவு நோய் வரும். வியாழக்கிழமை எண்ணெய் தேய்த்துக் குளித்தால் கால் குடைச்சல் வரும்.

எண்ணெய் தேய்த்துக் குளிக்க முயலும் அல்லது நினைப்பவர்கள் தமக்குத் தேவையான, தமக்கு வேண்டிய நாள்களைத் தேர்தெடுத்துக் கொள்ளவும்.

நம் முன்னோர்கள் சனியையும், புதனையும் ஏன் தெரிந்தெடுத்தார்கள். மற்றச் செல்வங்களைவிட அறிவினையும், உடல் நலத்தையும்தான் உயர்வாக நினைத்தார்கள், மதித்தார்கள். எண்ணெய் தேய்த்துக் குளிக்கும்போது குளிர்ந்த நீரில் குளிக்கக்கூடாது. வெதுவெதுப்பான சுடுநீரில்தான் குளிக்கவேண்டும்.

எண்ணெயை நல்ல என்ற அடை மொழி யோடு அழைப்பதால் அதன் சிறப்பை உணரலாம். வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணிபனுக்குக் கொடு என்பார்கள். அதாவது நல்ல பொருள்களை வாணிபனிடம் இருந்து வாங்கி உபயோகிக்காமல் வியாதிகளை உண்டாக்கிக் கொண்டு வைத்தியனிடம் போய் மருந்துகளுக்காக பொருள் செலவிட வேண்டாம் என்பது இதன் பொருள்.

நல்லெண்ணெயைக் கடையில் வாங்கி உபயோகிக்காதீர்கள் . அதில் மினெரல் எண்ணெய் கலக்கப்படுகிறது. எள் 20 கிலோ வாங்கி நான்கு நாள் அதன் தண்ணீர்ச் சத்து குறையும் வரை வெய்யிலில் வைத்து , பின் ஒரு கிலோ கருப்பட்டியுடன் மரச் செக்கில் (இயந்திரச் செக்கிலேயே மரச்செக்கு இருக்கிறது ) ஆட்டி எடுத்தால், பத்து லீற்றர் எண்ணெய் கிடைக்கும். இதைச் சமையலுக்கும் குளிப்பதற்கும் பயன்படுத்தினால் மிக்க நலம் கிடைக்கும்.


ஆண்கள் புதன்கிழமையும் சனிக்கிழமையும், பெண்கள் செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக்கிழமையும் எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும். முதலில் நல்லெண்ணெயில் சில மிளகு, சீரகம், உள்ளி, சின்ன வெங்காயம், ஓர் உடைக்காத மிளகாய் இவற்றைப் போட்டு புகையாமல் காய்ச்சி , உடலெங்கும் தேய்த்து அரை மணிநேரம் ஊற வைத்து , அதன் மேல் (கடலை மா + பச்சைக் கர்ப்பூரம் + இரு எலுமிச்சம் பழச் சாறு அரை மணி நேரம் ஊற வைத்ததை ) தேய்த்து கால் மணி நேரம் காயவிட்டுப்பின் இதமான வெந்நீரில் குளிக்க மிக்க சுகமாக இருக்கும்.

இதன் பின்னர் பால் சாம்பிராணி அல்லது சிங்கப்பூர் சாம்பிராணி, காயவைத்த துளசி இலை, நிலவேம்புக் குடிதண்ணீருக்காக உபயோகிக்கும் பொடி இவற்றைத் தணலில் போட்டுப் புகை பிடிக்க எந்த நோயும் வராது.

எண்ணெய் தேய்த்து குளிக்க இயலாதவர்கள் பாக்கு மட்டைத் தட்டில் நல்லெண்ணெய் ஊற்றி அதில் கால்களை வைத்து உட் கார்ந்து இருக்க, அரை மணி நேரத்தில் கண்ணில் எண் ணெய் விட்டதுபோல பசுபசுப்புத் தட்டும், அத்துடன் காலை எடுத்துவிட்டுத் துடைத்துவிடவும். இதுவும் எண்ணெய்க் குளியலின் பயனைக் கொடுக்கும்.

எண்ணெய் தேய்த்துக் குளித்த அன்று, வெய்யிலில் அலையக்கூடாது, உறங்கக்கூடாது, பொடி , புகையிலை, வெற்றிலை பாக்கு, சாராயம் உபயோகிக்கக் கூடாது,காரமான உணவுப் பொருள்களையும், மாமிசத்தையும் புசிக்கக் (உண்ணக்) கூடாது.

# கண்டாவளை கொம்படி அம்மன் ஆலயத்தின் 108 பாற்குட பவனி நிகழ்வு



கிளிநொச்சி கண்டவாளை கொம்படி அம்மன் ஆலயத்தின் 108 பாற்குட பவனி நிகழ்வு 26 வருடங்களின் பின்னர், நடைபெற்றுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை கடற்கரையோரத்தில் அமைந்திருக்கின்ற கொம்படி அம்பாள் ஆலயத்தின் மேற்படி வருடாந்த உற்சவம், கடந்த 26 வருடங்களுக்குப் பின்னர் தற்போது நடைபெற்று வருகின்றது.

நேற்றையதினம் கண்டாவளை ஆவரஞ் சாட்டி குஞ்சுப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து108 பெண்கள் மஞ்சள் ஆடையணிந்து பால்செம்புகளைத் தலையில் சுமந்து சுமார் நான்கு கிலோ மீற்றர் பவனியாக எடுத்து வந்தனர். 1008 இளநீர் 1008 சங்குகள் மற்றும் கொண்டு வரப்பட்ட 108 பால்செம்புகள் கொண்டு, கொம்படி அம்பாளுக்கு அபிசேகம் செய்யப்பட்டுள்ளது.

குறித்த ஆலயம் இந்தப் பிரதேசத்தின் பூர்வீக ஆலயங்களில் ஒன்றாகக் காணப்படுவதுடன், கண்ணகி மதுரையை எரித்ததாகக் கூறப்படுகின்ற புராண காலத்தில் இலங்கையில்கடற்கரையோரம்அமைக்கப்பட்ட பத்துகண்ணகி ஆலயங்களில் எட்டாவதாக அமைக்கப்பட்ட ஆலயம் எனக் கூறப்படுகின்றது

கடந்த 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட போரின்போது, ஆலயம் சேதமடைந்துள்ளதுடன், மக்கள் செல்ல முடியாத நிலையும் காணப்பட்டது. மீள்குடியமர்வின் பின்னர் குறித்த ஆலயம் புனரமைக்கப்பட்டு, 26 வருடங்களின் பின்னர் நடைபெற்று வருகின்ற இந்தத் திருவிழா நிகழ்வில் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பூனையுடன் திருமணம் செய்து வாழ விரும்பும் நடிகை!

'ஆஹா கல்யாணம்' என்ற படத்தின் மூலமாகத் தமிழ் மற்றும் தெலுங்கு திரையுலகத்துக்கு அறிமுகமானவர் நடிகை வாணி கபூர்.

இவருக்கு பூனை மிகவும் பிடித்த விலங்கு. பூனை கூடவே திருமணம் செய்து வாழ விரும்புவதாகப் பல இடங்களிலும், பேட்டிகளிலும் கூறிவருகிறாராம்.

நடிகைகள் செல்லப் பிராணிகளான நாய் மற்றும் பூனை வளர்ப்பதில் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஏண்டா நேற்று நீ பாடசாலைக்கு வரலை?




சார் நேற்று உங்கள மருந்துக்கடையில பார்த்தன்.
உங்களுக்கு உடம்பு சரியில்லை எண்டு நினைச்சு லீவு போட்டுட்டன் சேர்...!

நீதிபதி: கைதி எப்படி செத்துப் போனார்?
சிறைச்சாலை அதிகாரி: கரண்டுக் கம்பியை வாயால் கடிச்சு செத்துப் போய்ட்டாருங்கய்யா!
நீதிபதி: அது ஏன் கண்காணிப்புக் கமராவில் பதிவாகலை?



சிறைத்துறை அதிகாரி: ம்ம்... அது வந்து... அப்போ கரண்ட்டு இல்லைங்க...!?





**செல்லகுட்டி_தீபா**

எம்மிடம் இருப்பதை வைத்துப் பெருமைப்பட்டுக் கொண்டால், எம் கண்ணீரைக் கரைக்க வேண்டிய அவசியம் நேரிடாது.

view details

இரவு மூன்று மணி. நல்லாத் தூங்கிட்டு இருந்த மனைவியைக் கணவன் தட்டி எழுப்பினான்.
மனைவி: என்னாங்க இந்த நேரத்தில...
கணவன்: ஒரு அதிசயம் நடந்துருச்சிடி..
மனைவி: என்ன அதிசயம்?
கணவன்: ஒன்னுக்கு இருக்கலாம் என்று பாத்ரூம் கதவத் திறந்தேனா. தானாகவே லைட் எரிஞ்சுதுடி அப்புறம் ஒன்னுக்கு இருந்துட்டு கதவை மூடினா லைட் நின்னுடுச்சி... என்ன அதிசயம் பார்த்தியா?
மனைவி: அறிவு கெட்ட முண்டம். தூக்கக் கலக்கத்திலை பாத்ரூம் என்று நினைச்சி பிரிட்ஜ திறந்து ஒன்னுக்கு இருந்துட்டு கதை சொல்றியா. மூடிகிட்டு படு...
கணவன்:!!!?



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** அன்றாடப் பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். உறவினர் வருகையால் குடும்பச் செலவு அதிகரிக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.



**இடபம்:** மனதில் உற்சாகம் மேலோங்கும். நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இடையூறு விலகும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.



**மிதுனம்:** அதிகம் பேசுவதைத் தவிர்ப்பது நன்மையளிக்கும். தொழில் வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். ஆனால், இலாபத்துக்கு குறைவிருக்காது. வாகன பயணத்தில் மித வேகம் பின்பற்றவும்.



**கடகம்:** மனதில் இருந்த சஞ்சலம் மறையும். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். ஆரோக்கியம் பலம்பெறும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும்.



**சிங்கம்:** திறமையை வளர்த்துக் கொள்வதில் ஆர்வம் கூடும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். நண்பர்களுடன் இனிய சந்திப்பு உண்டாகும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.



**கன்னி:** எதிர்பார்ப்பு எளிதில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணியில் ஈடுபடுவீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உருவாகும். பெண்கள் குடும்ப வளர்ச்சிக்காகப் பாடுபடுவர்.



**துலாம்:** பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவி செய்வீர்கள். தொழில் வியாபாரம் செழிக்கும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். உறவினர்களுடன் சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள்.



**விருச்சிகம்:** எதிர்மறையான சூழலில் இருந்து விலகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர்.



**தனுசு:** குடும்பத்தினரின் கருத்துக்கு மதிப்பளிப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் லாபம் சுமார். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். வெளியூர்ப் பயணத்தின்போது விழிப்புடன் இருக்கவும்.



**மகரம்:** மனச்சாட்சிக்கு அதிக முக்கியத்துவம் தருவீர்கள். திட்டமிட்ட பணிகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால். இலாபம் உயரும். நண்பர் கேட்ட உதவியை செய்து மகிழ்வீர்கள்.



**கும்பம்:** உலக நடப்பு அறிவதில் ஆர்வம் அதிகரிக்கும். இஷ்ட தெய்வ அருளால் நன்மை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் கூடும். கூடுதல் சொத்து வாங்கத் திட்டமிடுவீர்கள்.



**மீனம்:** குடும்பத்தினரின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெண்கள் சிக்கனம் மூலம் சேமிக்க முயல்வர். ஆரோக்கியம் பலம் பெறும்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | | 2 | | 9 | |
| | 4 | | | | | | 6 | |
| 1 | | | | 5 | | 3 | | |
| 6 | | 8 | 9 | 4 | | | | |
| 7 | | | | | | | | 1 |
| | | | | 2 | 3 | 4 | | 6 |
| | | 1 | | 8 | | | | 2 |
| | 7 | | | | | | 1 | |
| | 6 | | 1 | | 7 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 9 | 8 | 6 | 4 | 2 | 5 | 1 |
| 5 | 8 | 1 | 2 | 3 | 9 | 7 | 4 | 6 |
| 6 | 4 | 2 | 7 | 1 | 5 | 9 | 8 | 3 |
| 1 | 9 | 3 | 6 | 8 | 2 | 5 | 7 | 4 |
| 2 | 6 | 7 | 4 | 5 | 3 | 1 | 9 | 8 |
| 8 | 5 | 4 | 9 | 7 | 1 | 3 | 6 | 2 |
| 4 | 2 | 6 | 3 | 9 | 7 | 8 | 1 | 5 |
| 7 | 1 | 8 | 5 | 2 | 6 | 4 | 3 | 9 |
| 9 | 3 | 5 | 1 | 4 | 8 | 6 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள். இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கத்தரிக்காயில் உள்ள மருத்துவப் பயன்கள்

இதில் உள்ள நீர்ச்சத்து சருமத்தை மென்மையாக்கும். கத்தரிக்காயில் விற்றமின் 'சி' மற்றும் இரும்புச் சத்து உள்ளது. கத்தரிக்காய் நரம்புகளுக்கு வலுவூட்டவும் சளி, இருமலைக் குறைக்கவும் செய்கிறது.

முதல்கட்ட சிறுநீரகக் கற்களைக் கரைக்கும் வல்லமை பெற்றது. வாதநோய், ஆஸ்துமா, ஈரல் நோய்கள், கீல்வாதம், சளி, பித்தம், தொண்டைக்கட்டு, மலச் சிக்கல், கரகரப்பானகுரல், உடல் பருமன் முதலியவற்றைக் குணப்படுத்தும் காய்கறிகளுள் கத்தரிக்காயும் குறிப்பிடத்தக்கது.

இதிலுள்ள ஆண்டி ஆக்ஸிடன்ட் கொழுப்பைக் கரைக்கும். உடல் பருமனைக் குறைக்கும். மூளை செல்களைப் பாதுகாக்கும். கத்தரிக்காய் பிஞ்சாகச் சாப்பிடுவதே நல்லது. முற்றிய பெரிய காய்களை அதிக அளவு சாப்பிட்டால்தான் உடம்பில் அரிப்பு ஏற்படும்.



## நாளை
**புரட்டாதி-13**
வியாழக்கிழமை -29.09.2016
திதி:சதுர்த்தசி பி.இ.04.25
நட்சத்திரம்: பூரம் மு.இ.08.46
ராகுகாலம்: 01.32-03.02 வரை
சுபநேரம்: 07.32-09.02 வரை




## தமிழர்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் அவர்களின் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ளனர். அவர்களின் மனங்களில் பிரபாகரன் இன்னும் தலைவராகவே வாழ்கின்றார். வடக்கு - கிழக்குத் தமிழர்கள் மாத்திரமன்றி தோட்டப்புறத் தமிழர்களும் நூறு வீதம் பிரபாகரனை ஆதரிக்கின்றனர். தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டபோது மலையகத் தமிழர்கள் துக்கதினம் நினைவு கூர்ந்தனர்.

பிரபாகரன் கொல்லப்பட்டதை தமிழர்களால் சகிக்க முடியவில்லை. அவரைக் கொலைசெய்த மகிந்த மீது தமிழர்கள் இன்றும் கோபத்துடனேயே இருக்கின்றனர்.

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்து கிளிநொச்சியில் மகிந்த தமிழர்களுக்கு நிவாரணப் பொருள் களை வழங்கியபோது, அவர்கள் மகிந்த வின் முகத்தைப் பார்க்காது வேறு பக்கம் முகத்தைத் திருப்பிய நிலையிலேயே பொருள்களைப் பெற்றனர்.

ஆனாலும் தமிழர்கள் அனைவரும் இனவாதிகள் அல்லர். சிங்களவர்களை விடவும் இந்த நாட்டை அதிகமாக நேசிக்கின்ற தமிழர்களும் இருக்கின்றார்கள்.

அதேநேரத்தில் வடக்கில் இப்போது முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனால் தொடக்கி வைக்கப்பட்டிருக்கும் இனவாத செயற்பாடுகள் முறியடிக்கப்படவேண்டும். தெற்கிலும் வடக்கிலும் இனவாதம் அழிக்கப்படாவிட்டால் எமக்கு - இந்த நாட்டுக்கு எதிர்காலம் என்ற ஒன்று இல்லாமல் போய்விடும் - என்றார். (வ-5)

## முஸ்லிம்களுக்கு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனிஜெகநாதன் தெரிவித்தார்.

முள்ளியவளை குமரபுரம் ஐக்கிய வாலிபர் சங்கத்தினரால் ஹிஜ்ராபுரம் விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட விளையாட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:

1982ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முல்லைத்தீவு மாவட்ட தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்தவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்லத்தம்பிடம் வாய்ப்புக் கோரினேன். எனது வேண்டுகோளை அவர் நிராகரித்தார். உடனே நான் மோட்டார் சைக்கிளில் எனது மைத்துனரையும் ஏற்றிக் கொண்டு மாங்குளத்தில் அமைந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் மன்சூரிடம் சென்று தேர்தலில் போட்டியிடுவதற்கான வேண்டுகோளை விடுத்தேன். அவர் உடனே வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு எனது மைத்துனரை போட்டியிடுவதற்கு அனுமதி வழங்கினார். நான் மைத்துனருக்காக அயராது உழைத்தேன். ஆனால் சிலரின் திட்டமிட்ட நடவடிக்கைகளினால் அப்போது சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் நாம் தோல்வியடைந்தோம்.

கடந்த 35 வருடங்களாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் தேர்தல்களில் போட்டியிடும் எவரும் வெற்றி பெற்றதில்லை. இந்த நிலையிலேயே மாகாண சபைத் தேர்தலின் போது சம்பந்தன் ஐயாவும், மாவை சேனாதிராசாவும் என்னைப் போட்டியிடுமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க தேர்தலில் போட்டியிட்டு வாக்குகளைப் பெற்று மாகாண சபை உறுப்பினரானேன்.

கடந்த காலங்களில் முல்லைத்தீவிலே தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்தோம். தற்போதும் அவ்வாறுதான் வாழ்கின்றோம். முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் முஸ்லிம் மகனும் ஒரு தமிழ் மகனும் சண்டை பிடித்ததென்ற வரலாறு கிடையாது. அப்படி பொலிஸ் நிலையத்தில் எந்த ஒரு முறைப்பாடும் இன்று வரை பதிவு செய்யப்படவில்லை. அவ்வாறு ஒரு சம்பவம் யாரினாலும் நிந்திக்கப்பட்டால், மாகாண சபை உறுப்பினர் பதவியை விட்டு உடனடியாக விலகுவதற்குத் தயாராக இருக்கின்றேன்.

முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டபோது, கண்ணீர் சிந்தியவர்கள் நாங்கள். முல்லைத்தீவு நகரில் ஆரம்பத்தில் தமிழ் மக்கள் யாரும் கடைகள் வைத்திருக்கவில்லை. முழுக்க முஸ்லிம்களே கடைகளை வைத்திருந்தார்கள். நாங்கள் அவர்களிடமே பொருள்களைக் கொள்வனவு செய்து வந்தோம். முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட போது, நொந்து கொண்டவர்கள் நாங்கள். எனவே இடம் பெயர்ந்த முஸ்லிம்களுக்கும் அவர்களின் வழித்தோற்றங்களுக்கும் காணிகள் வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவன் நான். இதற்காக வெளிப்படையாகவே மாகாண சபை உட்பட அனைத்து இடங்களிலும் குரல்கொடுத்து வருகின்றேன்.

எனக்கு நீராவிப் பகுதியில் இருந்த காணிகளில் ஒன்றை முஸ்லிமுக்கே மிகக் குறைந்த விலையில் வழங்கியிருந்தேன். தற்போதும் நீராவிப் பிட்டியில் இருக்கும் எனது காணிக்கான உறுதியில் எனக்கு ஏதேனும் நிகழ்ந்தால், இந்தக் காணிகளை முஸ்லிம்களுக்கே வழங்க வேண்டுமென எழுதி வைத்துள்ளேன்.

நீராவிப்பிட்டி பகுதியில் இன்றைக்கு என்னைப் பற்றி யாரும் அவதூறாகப் பேசிவிட்டு அவர்கள் வெளியேற முடியாது. அந்தளவுக்கு முஸ்லிம் மக்கள் என்மீது விசுவாசம் கொண்டுள்ளனர். எனவே தொடர்ந்து தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒற்றுமையுடனும் ஒப்புரவுடனும் வாழ வேண்டும் - என்றார். (வ-5-21-102)

## புதிய...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவை இல்லை. இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசமைப் புத்தான் கொண்டுவரப்படும் என்று அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித் ததாவது:

விக்கியின் செயற்பாடானது அவர் சார்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைக்கு முரணானது என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனே தெரிவித்துள்ளார். விக்கி மக்களின் செல்வாக்கை இழந்துள்ளார். அதைச் சரி செய்வதற்காகவே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடு கின்றார்.

வடக்குத் தலைவர்கள் அன்று இனவாதம் பேசியபோது தமிழ் அரசியல் தலைவர்கள் மௌனமாக இருந்தனர். இன்று அப்படி அல்ல. அந்த இனவாதத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கின்றனர். எல்லாத் தலைவர்களும் இப்போது விக்கியின் இந்தச் செயற்பாட்டை எதிர்க்கின்றனர்.

நாம் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம். அதற்காகவே புதிய அரசமைப்பைக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். புதிய அரசமைப்பு பற்றி எவரும் அச்சப்படத் தேவை இல்லை. அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசமைப்பே கொண்டு வரப்படும்.

அரசமைப்பு நாடாளுமன்றில் மூன் றில் இரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்டதும் பொது வாக்கெடுப்புக்காக மக்களிடம் அதைக் கொண்டு செல்வோம். மக்கள் விரோத - அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளாத அரசமைப்பை எப்படி எம்மால் மக்களிடம் கொண்டு செல்ல முடியும்? அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளும் அரசமைப்பையே நாம் கொண்டு வருவோம்.

இந்த நிலையில், வடக்கிலும் தெற்கிலும் இனவாத செயற்பாடுகளில் ஈடுபடுவதை இனவாதிகள் நிறுத்திக்கொள்ளவேண்டும். இதை நாம் முறியடித்தே தீருவோம் - என்றார். (வ-5)

## பெட்டி...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலைப்பித்தால் தமிழர்கள் அனைவரும் பெட்டி படுக்கையுடன் தமிழ்நாட்டுக்குச் செல்லத் தயாராக வேண்டும்.

இவ்வாறு எச்சரிக்கை செய்கிறது பொதுபல சேனா அமைப்பு.

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் நடத்தப்பட்ட ஊர்வலத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை அடிப்படையாக வைத்து முதலமைச்சர் விக்னேஸ்வரனை இனவாதி என்று தெரிவித்த பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலபொடஅத்தே ஞானசார தேரர், சிங்களவர்களின் பொறுமையை சீண்டிப்பார்க்க வேண்டாம் எனக் குறிப்பிட்டார்.

கொழும்பு-கிருலப்பனையில் அமைந்துள்ள பொதுபல சேனா அமைப்பின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தெற்கில் எந்தவொரு இடத்திலும் தமிழ் மக்களுக்கு வர்த்தகம் செய்ய முடியுமானால், பருத்தித்துறையிலிருந்து தெய்வேந்திர முனை வரை தமிழர்களுக்கு எந்த இடங்களிலும் சுதந்திரமாக செயற்பட முடியுமாக இருந்தால், மலையகத்தில் தமிழர்கள் கலாசாரத்தைப் பாதுகாத்து, விண்ணைத் தொடும் அளவுக்கு கோவில்களைக் கட்டிக்கொண்டு, அவர்கள் சிங்கள மக் களுடன் ஐக்கியமாக வாழ முடியுமாக இருந்தால், ஏன் அப்படிப்பட்ட உரிமையை சிங்கள மக்களுக்கு வடக்கில் மறுக்கப்படுகின்றது என்பதை விக்னேஸ்வரனிடம் நாங்கள் கேட்க விரும்புகின்றோம்.

மறுபுறத்தில் பலவிதமான பிரிவினைவாதப் பேச்சுக்களை பேசுகின்ற வேளையில் ஆரம்ப காலத்தை நினைத்துப் பார்க்க வேண்டும். சிங்கள மக்களுக்கு சண்டித்தனம் காட்டினால், தமிழர்கள் அனைவரையும் தமிழ் நாட்டுக்கு நாடு கடத்துவோம். இந்த நிலமையை உருவாக்க விரும்புகின்றீர்கள் என்று கேட்க விரும்புகின்றோம்.

சிங்கள மக்களின் பொறுமையின் இறுதி விளிம்பை தட்டிப்பார்க்கும் பரிசோதனையைச் செய்ய வேண்டாம்.? ஆட்சியிலுள்ளவர்கள் இதுதொடர்பில் மௌனம் காத்திருந்தாலும் இந்த நாட்டுக்கும், சிங்கள இனத்துக்கும் ஏற்படுத்தப்படுகின்ற அவமானத்தைப் பௌத்த சமூகத்தின் இளைய தலைமுறையினர் இதனைப் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்.

இவ்வாறான செயல்களைக் கண்டு ஏன் இன்னும் மௌனமாக உள்ளீர்கள் என சிங்கள இளைஞர்கள் எங்களிடம் வினவுகின்றனர். ஆனாலும் நாங்கள் மௌனமாக இல்லை. குளமாக இருந்தாலும், கிணறாக இருந்தாலும் அது கலங்கியிருக்கும். போது அதன் ஆழம் தெரியாது. அதேபோல் தான் நாம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் - என்றார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### வீரகத்தி பொன்னுத்துரை



தோற்றம் 05.10.1921 — மறைவு 27.09.2016

393/25, கோயில் வீதி, நல்லூரை வசிப்பிடமாக கொண்ட வீரகத்தி பொன்னுத்துரை நேற்று (27.09.2016) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற கலைவாணி (ஜேர்மனி) மற்றும் காந்திமதி (பிரதேச செயலகம் - உடுவில்), சிறிசிற்சபேசன்( ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலேந்திர ராஜா (ஜேர்மனி), குருநாதன் (செயலாளர்- வேலணை பிரதேச சபை) மதிவதனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரணவன்(ஜேர்மனி), கங்கா (ஜேர்மனி), சோபிதா (ஜேர்மனி), மகிந்தன்(கிராமஅலுவலர் - பிரதேச செயலகம்- நல்லூர்), மயூரன்(ஜேர்மனி), வர்ஷினி (ஜேர்மனி), ஜனார்த்தனன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2016) புதன்கிழமை மு.ப 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**393/25, கோயில் வீதி,**
**நல்லூர்.**

தகவல் :
குடும்பத்தினர்.

**077 4585272**

(1/4832)(12.18)

---

திருமதி

### இரத்தினேஸ்வரி சரவணமுத்து



**தோற்றம்** **01.01.1950** — **மறைவு** **25.09.2016**

சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், சுதுமலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினேஸ்வரி சரவணமுத்து 25.09.2016 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி - கனகமணி தம்பதிகளின் அன்பு மூத்த புதல்வியும், காலஞ்சென்ற சரவணமுத்துவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - ஞானமுத்து தம்பதிகளின் மூத்த மருமகளும், அப்புத்துரை, திருச்செல்வம், தவகுணராஜேஸ்வரி, கமலேஸ்வரி, அருள்செல்வம், காலஞ்சென்ற விக்கினேஸ்வரி மற்றும் தங்கமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பெரியதம்பி, செல்வராசா, பொன்னையா, சரஸ்வதி, நாகரத்தினம், காலஞ்சென்ற நவரத்தினம் ஆகியோரின் மைத்துனியும், கிருஷ்ணகுமார் (லண்டன்), சிவகௌரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் விக்கினகுமார் (லண்டன்), ரமணகுமார் (பிரான்ஸ்), விஜயகௌரி (நவாலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயந்தினி, கலைச்செல்வம், ரமணி, கமல்ராஜ் ஆகியோரின் அன்பு மாமியாரும், கஸ்தூரி, கௌதமன், கயல்வண்ணன், கஜீவன், கௌசீகா, கஸ்மிதா, அபிஷேக் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.09.2016) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுழிபுரம் கிழக்கு திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(J/4927)
(11,18)
**077 468 2642, 077 872 8578**

---

## ஜெனிவாவில்...

லாந்தின் தலைநகர் ஜெனிவாவில் திரண்டு கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 33ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் நடைபெற்றுவரும் நிலையில், தியாக தீபம்திலீபனின் 29ஆவது ஆண்டுநினைவு தினமான நேற்றுமுன்தினம் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு மற்றும் ஈழத் தமிழ் மக்களவை ஆகிய புலம்பெயர் அமைப்புகள் இணைந்து இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

இதில் சுவிட்சர்லாந்தில் வாழும் ஈழத் தமிழர்கள் மாத்திரமன்றி பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, டென்மார்க், நெதர்லாந்து, நோர்வே உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலிருந்து பல்லாயிரக்கணக்கான புலம்பெயர் தமிழர்கள் கலந்துகொண்டனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் புலிக் கொடிகளையும், அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் புகைப்படங்களையும் தாங்கியவண்ணம் திரண்டிருந்த புலம்பெயர் தமிழர்கள், தமிழ் மக்களுக்கான நீதியை தாமதப்படுத்தாது நிலைநாட்டுமாறு வலியுறுத்தும் கோஷங்களை எழுப்பினர்.

ஜெனிவா ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள பூங்காவிலிருந்து ஆரம்பமான பேரணி, ஜெனிவா ஐ.நா. முன்றல் வரை சென்றடைந்தது. இதில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் என அனைத்துத் தரப்பினரும் கலந்துகொண்டு, தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட இனப்படுகொலைகளுக்கு பன்னாட்டு விசாரணை மூலம் நீதியை வலியுறுத்தினர்.

காணாமற்போனோர் அலுவலகம் என்ற பெயரில் காணாமற்போனோர் விடயத்தைத் தொடர்ந்தும் இழுத்தடிக்க இலங்கை அரசு முற்படுவதாகக் குற்றஞ்சாட்டிய ஈழத் தமிழர்கள், போர்க்குற்றங்களை விசாரிப்பதற்காக அமைக்கப்படவுள்ள உள்ளக நீதிமன்றப் பொறிமுறையாலும் தமிழர்களுக்கு நீதி கிடைக்கப்போவதில்லை என்றும் குறிப்பிட்டனர்.

இதனால் பன்னாட்டுச் சமூகம் நேரடியாகத் தலையிட்டு சுயாதீன விசாரணைகளை நடத்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்ததுடன் இனியும் காலம் கடத்தாது அதனை உலக நாடுகள் நிறைவேற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தின் தலைமைச் சட்ட ஆலோசகர் பரிந்துரைத்துள்ள நிலையில், நடைபெற்ற முதலாவது பேரணி இதுவாகும்.

## இரு நாள்களில்...

ஏனைய சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தபோது, நீரில் மூழ்கி உயிரிழந்ததாக விசாரணைகளின் மூலம் தெரியவந்தது. சடலம் விசாரணைகளின் பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

**சிறுநீரகப் பாதிப்பால் மாணவி உயிரிழப்பு**

16 வயது மாணவிக்கு சிறுநீரகப் பாதிப்பு ஏற்பட்டது. அது 3 மாதங்களுக்கு முன்னரே தெரியவந்திருந்த நிலையில் நேற்றுமுன்தினம் அந்த மாணவி திடீரென உயிரிழந்தார். கரவெட்டி - கரணவாயைச் சேர்ந்த பாலகிருஸ்ணன் வின்சுதா என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்தார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. அவர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஜீ.சி.ஈ. சாதாரணதரத்தில் கல்வி பயில்கிறார்.

அவருக்குக் காலில் வீக்கம் ஏற்பட்டது. அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது சிறுநீரகத்தில் பாதிப்பு இருந்தமை பரிசோதனையில் கண்டறியப்பட்டது. அதற்குச் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், காலில் காயம் (புண்) ஏற்பட்டது. அதனால் நேற்றுமுன்தினம் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் மறுநாள் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார் என்று திடீர் இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

**மின்சாரம் தாக்கியதில் குடும்பத்தலைவர் சாவு**

மின்சாரம் தாக்கியதில் குடும்பத்தலைவர் கண்ணிமைக்கும் நேரத்தில் தூக்கி வீசப்பட்டு உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

முதன்மை ஆளியை (மெயின் சுவிட்ச்) நிறுத்தாது தண்ணீர் இறைக்கும் மோட்டருக்கு இணைப்பை வழங்கிய போதே மின்சாரம் தாக்கி அவர் தூக்கி வீசப்பட்டதாக விசாரணையில் கூறப்பட்டது.

யாழ். கொட்டடி - கற்குள வீதியில் நேற்று முற்பகல் 9.45 மணியளவில் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த கனகரட்ணம் பாபு (வயது 41) என்பவரே உயிரிழந்தார். அவர் 4 வயதுப் பிள்ளையின் தந்தை என்று தெரிவிக்கப்பட்டது.

வீட்டில் நிலத்தில் மூர்ச்சையற்றிருந்த அவரின் அருகே சென்றபோது, விபரீதத்தை வீட்டிலுள்ளவர்கள் கண்டனர். உடனடியாக அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், அவர் அதற்கு முன்னரே உயிரிழந்து விட்டமை பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(வ-4,றி7)

---

### கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக பிரதம முகாமைத்துவ
உதவியாளர் (நிதி)
**திருமதி காந்திமதி குருநாதன்**
அவர்களுடைய தந்தையார்
**வீரவாகு பொன்னுத்துரை**

அவர்கள் 27.09.2016 அன்று இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அவர்களது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிசங்கம், பிரதேசசெயலகம்,
வலிகாமம் தெற்கு, உடுவில்.

பிரதேச செயலரும்,அனைத்து
உத்தியோகத்தர்களும்.

### கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக சமூகசேவை
உத்தியோகத்தர்
**கந்தையா முருகையா**
அவர்களுடைய தாயார்
**திருமதி யோகமலர் கந்தையா**

அவர்கள் 27.09.2016 அன்று இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அவர்களது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிசங்கம், பிரதேசசெயலகம்,
வலிகாமம் தெற்கு, உடுவில்.

பிரதேச செயலரும், அனைத்து
உத்தியோகத்தர்களும்.

### கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும்
திருமதி நிசந்திலா சிவதரன் அவர்களின்
பாசமிகு மாமனார்
**சின்னத்தம்பி இலகுப்பிள்ளை**
அவர்கள் 13.09.2016 செவ்வாய்க்கிழமை
சிவபதமடைந்துவிட்டார். அவரின் மறைவையிட்டு
அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு
அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.



பிரதேச செயலரும் அனைத்து
உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிசங்கம்,
பிரதேச செயலகம், கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

வடக்கு மாகாண சமூகசேவைத் திணைக்களத்தை சேர்ந்த உடுவில் பிரதேச செயலகத்தில் சமூகசேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் கந்தையா முருகையா அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி யோகமலர் கந்தையா**

அவர்களின் பிரிவால் துயரும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சமூகசேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நலன்புரி சங்கம், யாழ் மாவட்டம்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு 10 . 04 . 1948

உதிர்வு 29 . 08 . 2016

**அமரர் புனிதவதி அன்னலிங்கம்**

கடந்த 29.08.2016 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத்தெய்வத்தின் வீட்டுக்கிருத்திம் இன்று (28.09.2016) புதன்கிழமை மு.ப. 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்
021 2225019
077 3305344

## TRADE FINANCE & INVESTMENTS PLC

TFI நிறுவனத்துடன் இணைந்து நிதித்துறையின் முன்னேற்றப்பாதையில் நீங்களும் பயணியுங்கள்

01. சந்தைப்படுத்தல் நிர்வாக உத்தியோகத்தர்
ஆண்கள் (லீசிங்)

**தகைமைகள்:**

* வயதெல்லை 25 - 32 வயது வரை
* நிதி மதிப்பீடு தொடர்பான அனுபவம் குறைந்தது 3 வருடங்கள் விரும்பத்தக்கது.

02. சந்தைப்படுத்தல் உதவியாளர்கள் (Marketing)
ஆண்கள் (லீசிங்)
(யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, வவுனியா மற்றும் மன்னார்)

03. முகாமைத்துவ உதவியாளர் (Management Asst.)
ஆண்கள் மற்றும் பெண்கள்

**வருமானம் : நிரந்தர வருமானம் மற்றும் ஊக்குவிப்புக்கொடுப்பனவுகள்.**

**பொதுவான தகைமைகள்:**

*உயர்தரப்பரீட்சையில் ஒரே தடவை 3 பாடங்களில் சித்தி
*வயதெல்லை 19 வயதிற்கு மேல்
*நிதி மதிப்பீடு தொடர்பான அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்
*செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்
*உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியவர்களும் விண்ணப் பிக்கலாம்.

**விண்ணப்பதாரி**

விண்ணப்பதாரி தாம் விண்ணப்பிக்கும் பதவியினை தபால் உறையில் குறிப்பிட்டு அனுப்பவும் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி நிதி சம்பந்தமான பல்வேறுபட்ட செயற்பாடுகளை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும். தேவையேற்படின் நீண்ட தூரங்களுக்கு பயணம் செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பதவிக்கு நீங்கள் தகுதியுடையவராயின் உறவினர் அல்லாத இரண்டு நபர்களின் விவரங்களுடன் சுய விவரக் கோவையை இவ்விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதி யிலிருந்து 7 தினங்களுக்குள் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மனிதவளப்பிரிவு
ட்ரேட் பினான்ஸ் அன்ட்
இன்வெஸ்ற்மென்ஸ் பி.எல்.சி
233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## இராணுவத்தால்...

அவரது மகனும் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வவுனியா பிராந்திய இணைப்பாளர் ஆர்.பிரியதர்சன தெரிவித்தார்.

சில வருடங்களுக்கு முன்னர் குறித்த தாய் இராணுவத்தினரால் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார். அவரது வீட்டிலிருந்து அவரைக் கடத்திச் சென்று பற்றைப் பகுதிக்குள் வைத்து தாய் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார். அது பற்றிய விசாரணைகள் யாழ்.மேல்நீதிமன்றில் இடம்பெற்று தகுந்த சாட்சியங்களின் அடிப்படையில் 4 இராணுவத்தினரும் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டனர். அதன் பின்னர் 4 பேருக்கும் தலா 25 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது யாழ்.மேல்நீதிமன்று. இந்தநிலையில் அந்தத் தாய் பொலிஸாரால் கைது செய்யப் பட்டார்.

"கசிப்பு உற்பத்தி செய்ததாகவும், பியர் விற் பனை செய்ததாகவும் என் மீது குற்றம் சாட்டப் பட்டுள்ளது. அந்தக் குற்றச்சாட்டுக்கள் பொய். நான் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட வில்லை. என்னைக் கைது செய்த பொலிஸார் அடித்துத் துன்புறுத்தினர். எனது மகனையும் பொலிஸார் இல்லாத குற்றங்களைச் சுமத்தி சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைத் துள்ளனர். அவர் கல்வி கற்றுவரும் நிலையில் இவ்வாறு வைக்கப்பட்டுள்ளார் என்று அந்தத் தாய் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தெரிவித்தார்.

அந்தத் தாயார் பற்றிய தகவலின் அடிப்படை யில், அவரிடம் வாக்குமூலம் பெற்றுள்ளோம். அதில் இந்தக் குற்றச்சாட்டுக்களை அவர் கூறியுள்ளார். அதனால் பொலிஸார் அந்த தாயைக் கைது செய்யும்போது சட்டநடைமுறை பின்பற்றப்பட்டதா என்பது தொடர்பில் விசா ரணை ஆரம்பித்துள்ளோம். 7 நாள்களுக்குள் விசாரணை நிறைவுபெறும்.

அதற்கு முன்னர் இருவரையும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறும், சிறு வனை வேறு இடத்தில் தங்க வைப்பது தொடர் பில் ஆராயுமாறும் வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்கள ஆணையா ளருக்கு அறிவித்துள்ளோம்" என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா இணைப்பாளர் ஆர்.பிரிய தர்சன தெரிவித்தார். (வ-4)

## வீடு பராமரிப்பாளர் தேவை

அழகோலைப் பிள்ளையார் கோயிலடி, அளவெட்டியில் அமைந்துள்ள எமது வீட்டைப் பராமரிப்பதற்கு சிறிய குடும்பம் தேவை. மாதாந்த சம்பளம் வழங்கப்படும்.

**075 095 7233**

(ஜே/4936)
(11.17.18)

## துயர் பகிர்கின்றோம்



எமது சக உத்தியோக நண்பர் **ராஜமேனகன்** (பொது சுகாதார பரிசோதகர்) அவர்களின் அன்புத் தந்தை

**வரப்பிரகாசம் மரியதாஸ்**

காலமான செய்தி அறிந்து துயரடைவதுடன் அவரது ஆத்ம இளைப்பாற்றுக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அகில இலங்கை
பொது சுகாதார பரிசோதகர் சங்கம்
யாழ் மாவட்டம்.

## வீக்னேஸ்வரனுக்கு...

மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அம்பாறையில் நேற்று முன்தினம் மாலை நடை பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

விக்னேஸ்வரன் என்பவர் நீதியரசராக செயற்பட்ட நபர். ஆனாலும் அவரின் அறிவிப்புகள் வியப்பாக இருக்கின்றன. அவர் கூறுவதுபோல் நடவ டிக்கை எடுத்தால், அவ ரின் பிள்ளைகளுக்கும் சிக்கல் ஏற்படும். அவரின் பிள்ளைகள், சிங்களவர் களையே திருமணம் முடித்துள்ளனர். எனவே, அவர்களையும் வெளி யேறவா சொல்கின்றார்? குறுகிய அரசியலை நடத்தாது, அவரது அறி விப்பை மீளப் பெறுமாறு வலியுறுத்துகின்றோம்.

நாட்டை ஐக்கியப்படுத் துவதற்காக நாம் பேச்சு செய்தோம். அந்த ஐக்கி யம் தொடர்ந்தும் பாது காக்கப்பட வேண்டும். இலங்கை ஒரு சிறிய நாடு. அது இந்தியாவோ, அமெரிக்காவோ அல்ல. சில மணிநேரங்களில் அனைத்து இடங்களுக் கும் சென்று வரலாம். எனவே, எதற்காக இந்தப் பிரிவினை?

அரசமைப்புத் திருத்தம் என்ற போர்வையில், வடக்கு, கிழக்கு மாகா ணங்களை மீண்டும் ஒன்றிணைப்பதற்குரிய முயற்சியில் அரசு இறங் கியுள்ளது. நிறைவேற்று ஜனாதிபதி முறைமை யை நீக்குவதாகக் கூறி, வேறொரு திட்டம் அரங் கேற்றப்பட்டுவருகின்றது. மாகாண சபைகள் இணைக்கப்பட்டால் பெரிய சிக்கல்கள் உரு வாகும் நிலை இருக்கின் றது - என்றார். (வ-5)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 20 . 07 . 1937

மறைவு 29 . 08 . 2016

**அமரர் பகவதி பீதாம்பரம்**

கடந்த 29.08.2016 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் பகவதி பீதாம்பரம் அவர்களின் 31 ஆம் நாள் நினைவு நிகழ்வுகள் இன்று (28.09.2016) புதன்கிழமை மாலிபோண், இலண்டனிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அன்றைய ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

அன்னாரின் பிரிவால் நாம் துயருற்றிருந்த போது நேரிலும், தொலைபேசி வாயிலாகவும் ஆறுதல் கூறிய லண்டன் வாழ் தாயக உள்ளங்களுக்கும் அனுதாபச் செய்திகள் வெளியிட்டோருக்கும் தாயகத்திலிருந்து அனுதாபச் செய்தி அனுப்பியோர், தொலைபேசி வாயிலாக ஆறுதல் கூறியவர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், நண்பர்களுக்கும் அனைத்து வழிகளிலும் உதவிய அன்பு உள்ளங்களுக்கு இறுதிக் கிரியைகளின் போது கலந்து கொண்டவர்களுக்கும் என்றும் எங்கள் சிரம் தாழ்த்திய நன்றிகள்.

குறிப்பு: அன்னாரின் பிறந்தவூரான மருதங்கேணி தெற்கு, புளியடிப் பிள்ளையார் ஆலயத்தில் 2016.09.30 வெள்ளிக்கிழமை மதியம் சிறப்பு பூஜையும் அன்னதானமும் இடம்பெறும்.

மாலிபோண்,
லண்டன்.

பீ.கிருபாகரன் (மகன்)
0044 7411184247

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாட்டில்...

டெங்குக் கட்டுப்பாட்டு வாரம் நேற்று ஆரம்பமானது. இதன் தேசிய நிகழ்வு யாழ். நகரில் நேற்றுக் காலை நடை பெற்றது. இந்த நிகழ்வில் கொழும்பிலிருந்து வருகை தந்த சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் உள்ளிட்ட பல தரப்பினரும் பங்கேற்றனர்.

"டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் கூட்டுப் பொறுப்புடன் சகல திணைக்களங்களும் பங்கேற்க வேண்டும். பொதுச் சுகாதார சேவைகள் எமது பகுதியில் சிறப்பாக உள்ளன. போர்க் காலத்திலும், இப்போதும் தொற்று நோய்களிலிருந்தான பாதுகாப்பு அதிகமாக உள்ளது. சுகாதாரத் திணைக்களத்தினர் மாத்திரம் டெங்கை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுக்க முடியாது. சகல திணைக்களங்களும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்" என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்ததாவது: வடக்கு மாகாணத்தில் டெங்கின் தாக்கம் கடந்த வருடத்தை விட இந்த வருடம் கூடுதலாக இருக்கின்றது. 2016ஆம் ஆண்டில் இதுவரைக்கும் 2 ஆயிரத்து 291 நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 753 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 68 பேரும், மன்னார் மாவட்டத்தில் 108 பேரும், வவுனியா மாவட்டத்தில் 212 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 150 பேரும் என்று இனங் காணப்பட்டனர். இலங்கையில் இதுவரைக்கும் 41 ஆயிரத்து 173 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளாகியுள்ளனர்.

மழை காலம் ஆரம்பித்தால் டெங்கின் தாக்கமும் அதிகமாகும். இதனைக் கருத்திற் கொண்டு தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காலத்துக்கு முன்னரும், வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காலத்துக்கு முன்னரும் 2 தடவைகள் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரம் கடைப்பிடிக்கப்படுகின்றது. இன்று தொடக்கம் ஒக்ரோபர் 3 ஆம் திகதி வரை தேசிய டெங்கு வாரமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது.

வீடுகள், பாடசாலைகள், தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், பொது இடங்கள் என்பவற்றுக்கு சுகாதாரப் பணியாளர்கள், முப்படையினர், உள்ளூராட்சிப் பணியாளர்கள் என்று குழுவாகச் சென்று பார்வையிட்டு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்களை அடையாளம் கண்டு அழிப்பதற்கான நடவடிக்கைகளைச் செய்து வருகிறார்கள். மழை தொடங்குவதற்கு முன் இதனைச் சிறப்பாகச் செய்வதனால் டெங்குத் தாக்கத்தில் இருந்து மக்களைக் காத்துக் கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட தேசிய டெங்கு வாரத்தில் முதல் நாளான நேற்று யாழ். மாநகர சபை பிரதேசமும், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் பார்வையிடப்பட்டன. கடந்த சில மாதங்களில் கூடுதலான டெங்கு நோயாளர்கள் இந்தச் சுகாதார வைத்திய பிரிவுகளில் இனங் காணப்பட்டுள்ளனர்.

யாழ். சுகாதார வைத்திய பிரிவில் ஆயிரத்து 285 இடங்கள் பார்வையிடப்பட்டன. அதில் 3 இடங்களில் நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டன. 484 இடங்களில் நுளம்பு பெருகக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்பட்டன. 453 இடங்கள் உடனேயே திருத்தம் செய்யப்பட்டன. 28 இடங்களுக்கு அறிவித்தல் அனுப்பப்பட்டன. மற்றும் 3 இடங்களுக்கு வழக்குத் தாக்கல் செய்யப் பட்டது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய பிரிவுக்குள் ஆயிரத்து 376 இடங்கள் பார்வையிட இருந்தன. அதில் ஆயிரத்து 210 இடங்கள் பார்வையிடப்பட்டன. நுளம்பு உற்பத்தியாகக் கூடிய சாத்தியக் கூறுகளைக் கொண்ட இடங்கள் 612, நுளம்புக் குடம்பிகள் காணப்பட்ட இடங்கள் 3, உடனேயே திருத்தம் செய்யப்பட்ட இடங்கள் 526, அறிவித்தல் அனுப்பப்பட்ட இடங்கள் 89 ஆகும்.

டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு டெங்குத் தாக்கம் ஏற்பட்ட நோயாளிக்குச் சிகிச்சை அளிப்பது தொடர்பான பயிற்சிகள் யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவர்களுக்கும், தாதியர்களுக்கும் வழங்கப்பட்டன-என்றார். (வ-5-ரி)

## மரண அறிவித்தல்

### திருமதி கலாவதி சிவசோதி



புலோலி மத்தி பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாவதி சிவசோதி நேற்று (27.09.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கார்த்திகேசு மற்றும் காலஞ்சென்ற இராசமணி தம்பதியரின் அன்புப்புதல்வியும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - பார்வதி தம்பதியரின் அன்புமருமகளும் சிவசோதி இன் அன்பு மனைவியும் குணநாயகம் (ஓய்வு பெற்ற பொதுமுகாமையாளர்), செல்வநாயகம், **Dr.** குலநாயகம் (புத்தூர் ஆரம்ப வைத்தியசாலை), **Dr.** திருமகள் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரியும் பாலகௌரி (ஆசிரியை யா/கலட்டி றோ.க.த.க. பாடசாலை), கௌசலை (லண்டன்), கிருஷ்ணகாந்தன் (ஆசிரியர், தி/ஸ்ரீசண்முகா இந்துக்கல்லூரி - திருகோணமலை), பாரதி (ஆசிரியை, யா/துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்), கௌதமி (முகாமைத்துவ உதவியாயளர், யாழ்.மாநகரசபை) ஆகியோரின் அன்புத்தாயும் கணேஷ் (தொழில்நுட்ப வியலாளர்), ரவீந்திரகுமார் (லண்டன்), சர்மிளா (ஆசிரியை, ஸ்ரீசண்முக இந்து மகளிர் கல்லூரி - திருகோணமலை) ஆகியோரின் அன்புமாமியும் சேரலாதன், பிரவீணா, பூரணி ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2016) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புலோலி மத்தி,**
**பருத்தித்துறை.**
**077 4348667**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### தாமு ஐயம்பிள்ளை



தம்பாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமு ஐயம்பிள்ளை 25.09.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமு - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் சின்னத்தம்பி - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும் மாணிக்கத்தின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற கணேசமூர்த்தி(லண்டன்) மற்றும் சத்தியமூர்த்தி(டோகா), கருணாநிதி, செல்வநிதி(லண்டன்), கலாநிதி (லண்டன்), கிருபாமூர்த்தி(டோகா), தயாநிதி, விக்னேஸ்வரமூர்த்தி(கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் காலஞ்சென்ற சுசிலாதேவி(லண்டன்) மற்றும் இராசசுலோசனா, துரைராஜா(டோகா), அமிர்தலிங்கம்(லண்டன்), தவராசா(லண்டன்), குலேந்திரா, காலஞ்சென்ற சாந்தகுமார், றஜிதா(கனடா) ஆகியோரின் பேரன்பு மிக்க மாமனாரும் காலஞ்சென்றவர்களான கனகசபை, மாணிக்கம், பூமணி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கண்மணி, முத்தையா மற்றும் செல்லையா ஆகியோரின் மைத்துனரும் திலிப்காந் - வேணுஜா, ஜெயகாந் - றொம்மியா, கம்சன் - ஜஸ்மினா, தீபன் - றஜிதா, தினேஸ் - பர்மிளா, திலக்சன், துளசிகா - சுசான், நரோசன் - நிருஜா, தூரிகா, திலிசன்- சாரங்கி, கரிசன், பொன்னுஷா, ஜதுயா, விதுஜா, மதுஜா, கிரிசாந், பிரசாந், தக்ஷிகா, அஸ்வின், அனிக்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் அபிசன், ஜெனிஷா, கஸ்வின், கஜோஸ், விகாஷ், சாருஸ் ஆகியோரின் செல்லப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் நாளை (29.09.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தம்பாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சத்தியமூர்த்தி - 077 [illegible] தயாநிதி - 021 [illegible]
விக்னேஸ்வரமூர்த்தி(க[illegible]) [illegible]
திலிப்காந்(லண்டன்) - 0044 208 698 7637
கம்சன்(பிரான்ஸ்) - 0033 623 565 149

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி எலிசபேத் சவரிமுத்து



**பிறப்பு** **07.06.1926**
**இறப்பு** **26.09.2016**

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டலேனைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட எலிசபேத் சவரிமுத்து (26.09.2016) திங்கட்கிழமை காலமானார்.


அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 08, இராசாவின் தோட்ட லேன்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

### கிருஸ்ணபிள்ளை தேவராசா



தையிட்டியைப் பிறப்பிடமாகவும், கச்சேரி கிழக்கு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை தேவராசா நேற்று (27.09.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை - பாக்கியம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் - புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும் நகுலேஸ்வரியின் அன்புக்கணவரும் வாசுகி, வாகீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதர்சன், பதுமினி ஆகி யோரின் மாமனும் காலஞ் சென்ற தியாகராசா மற்றும் பரமேஸ்வரி, காலஞ் சென்ற தில்லைநடராசா மற்றும் பவளக்கொடி, லங்கதேவி, லங்கநாயகி, செல்வநாயகி, யோகராசா ஆகியோரின் சகோ தரனும் கவிசன், பானுஜன் ஆகி யோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2016) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் கொழும்புத்துறை துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**

### கனகரத்தினம் பாபு



444, இராமலிங்கம் வீதி, முடமாவடியைப் பிறப்பிடமாகவும் 33, கற்குளம்வீதி, கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் பாபு நேற்று (27.09. 2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் நித்தியானந்ததேவி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், தர்சினியின் பாசமிகு கணவரும், பிரகாஷின் அன்புத் தந்தையும், ஜெகசோதி, மற்றும் காலஞ்சென்ற செல்வதியம்மா தம்பதியரின் நேசமிகு மருமகனும், விஜயகுமாரி, பிறேமா, யசோதா, யான்சி, மோகனறானா ஆகி யோரின் நேசமிகு சகோதரனும், மோகனரூபன், சுதர்சன் (மலேசியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2016) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கற்குளம் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**33, கற்குளம் ஒழுங்கை,**
**கொட்டடி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# கோல்ப் ஜாம்பவான் பாமர் சாவடைந்தார்

கோல்ப் விளையாட்டின் தலை சிறந்த வீரர்களுள் ஒருவராகக் கருதப்பட்ட அமெரிக்காவின் ஆர்னல்ட் பாமர், தனது 87 ஆவது வயதில் நேற்றுமுன் தினம் சாவடைந்தார்.

இதயத்தில் காணப்பட்ட நோய் காரணமாக மருத்துவமனை யில் சேர்க்கப்பட்ட பாமர், சிகிச்சை பயனளிக்காத நிலையில் சாவ டைந்தார். கோல்பின் பிரதான தொடர்களில் 7 சம்பியன் பட் டம் உள்ளடங்கலாக உல கெங்கிலும் 90க்கும் மேற்பட்ட தொடர்களை வெற்றி கொண்ட அவர், 'கோல்ப்பின் அரசர்' என அழைக்கப்பட்டார்.

ஒலிம்பிக் தொடர்களில் நீண்ட காலமாக புறக்கணிக்கப்பட்டி ருந்த கோல்ப் விளையாட்டு கிட்டத்தட்ட 100 வருட கால இடைவெளிக்குப்பின்னர், அண் மையில் நடைபெற்ற ரியோ ஒலிம்பிக் தொடரில் சேர்க்கப் பட்டது. ரியோவில் கோல்ப் சேர்க்கப்பட பாமர், வழங்கிய அழுத்தமும் பிரதான காரணங் களில் ஒன்றாக இருந்ததாகச் சொல்லப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது. (ம)





# ரசிகர்களின் அணிக்கு தலைவரானார் டோனி

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, ரசி கர்கள் மத்தியில் நடத்திய கருத்துக்கணிப்பை வைத்து, அனைத்துக் காலத்துக்கும் ஏற்ற கனவு அணியை அறிவித்தது. ரசிகர்கள் டோனியையே தலைவராகத் தெரிந்துள் ளார்கள்.

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் இந்திய அணியின் 500 ஆவது டெஸ்ட் ஆட்டமாகும். இதனை யடுத்தே இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ரசிகர்கள் மத்தியில் இணையத்தில் இந்த வாக்கெடுப்பை நடத்தியது.

ஆரம்ப வீரர்களாக சுனில் கவாஸ்கர், சேவாக் தெரிவு செய்யப்பட்டனர். கவாஸ் கருக்கு 68 சதவீத வாக்குகளும், சேவாக் குக்கு 86 சதவீத வாக்குகளும் கிடைத்தன. 3ஆம் நிலையில் களமிறங்க ஏறத்தாழ ஏகமனதாக ராகுல் ராவிட் தேர்ந்தெடுக்கப் பட்டார். அவருக்கு 96 சதவீத வாக்குகள் கிடைத்தன. 4ஆம் நிலையில் களமிறங்க சச்சின் தெரிவானார். அவருக்கு 68 சதவீத வாக்குகள் கிடைத்தன. லக்ஸ்மன் 5ஆம் நிலைக்காக 58சதவீத வாக்குகள் பெற்றார். இவருக்கும் கங்குலிக்கும் கடும் போட்டி நிலவியது. 6 ஆம் நிலையில் களமிறங்க சகலதுறை வீரராக கபில்தேவ் தெரிவானார். அவருக்கு 91சதவீத வாக்குகள் கிடைத்தன. 7 ஆம் நிலையில் களமிறங்கவும், இலக் குக்காப்பாளராகவும், தலைவராகவும் டோனி தெரிவானார். அவர் 90 சதவீத வாக்கு களைப் பெற்றார்.


8ஆம் இடத்துக்கு 53சதவீத வாக்குகளுடன் அஸ்வினும், 9 ஆம் இடத்துக்கு 92 சதவீத வாக்குகளுடன் கும்ளேயும், 10 ஆம் இடத் துக்கு 78 சதவீத வாக்குகளுடன் ஜவகல் சிறிநாத்தும், 11 ஆம் இடத்துக்கு 83 சதவீத வாக்குகளுடன் சகீர் கானும் தெரிவாகினர். மேலதிக வீரராக யுவராஜ் தெரிவானார்.

ரசிகர்களின் கனவு அணி: சுனில் கவாஸ் கர், சேவாக், ராகுல் ராவிட், சச்சின், லக்ஸ் மன், கபில்தேவ், டோனி, அஸ்வின், கும்ளே, சிறிநாத், சகீர்கான், யுவராஜ் சிங். (ம)

# கிறைக் வெளியே பட்டேல் உள்ளே

இந்திய அணிக்கு எதிராக எஞ்சியிருக்கும் இரு டெஸ்ட் ஆட்டங்களிலிருந்தும் நியூ சிலாந்து அணியின் சுழல் பந்துவீச்சாள ரான கிறைக் விலகிய நிலையில், பதில் வீரராக பட்டேல் சேர்க்கப்பட்டார்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களில் நேற்று முன் தினம் நிறைவடைந்த முதலாவது ஆட் டத்தில், இந்திய அணி அபார வெற்றிபெற் றது. இதனால் அடுத்த இரு ஆட்டங்களில் வெற்றிபெற்றால் மட்டுமே நியூசிலாந்து அணியால் கிண்ணத்தைக் கைப்பற்ற முடியும். இந்த நிலையில் காயம் காரண மாக கிரைக் விலகியமை அந்த அணிக்கு பின்னடைவை ஏற்படுத்தும் என்று கருதப் பட்ட நிலையில், பதில் வீரராக சுழல் பந்து வீச்சாளரான பட்டேல் அறிவிக்கப்பட்டார். கிரைக் ஓர் சுழல்பந்துவீச்சாளர். துடுப் பாட்டத்தையும் ஓரளவு அறிந்தவர். இந் திய ஆடுகளங்கள் சுழலுக்குச் சாதக மானவை. எனவே கிரைக் போன்றதொரு வீரரை இழப்பது அணிக்குக் கடினமான தருணம். கிரைக்கின் இடத்தை நிரப்பவல் லவராக பட்டேலே கருதப்படுகிறார் என நியூசிலாந்தின் தலைவர் வில்லியம்சன் தெரிவித்தார். (ம)



# சகிப் அல் ஹசன் சாதனை

ஒருநாள் ஆட்டங்களில் அதிக இலக்கு களைக் கைப்பற்றிய பங்களாதேஷ் வீரர் என்ற சாதனையை நிலைநாட்டினார் நட் சத்திர சுழல்பந்து வீச்சாளரான சகிப் அல் ஹசன்.

ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒருநாள் ஆட்டத்தில் இரு இலக்குகளைக் கைப்பற்றி யதன் மூலமே அவர் இந்தச் சாதனையை நிலைநாட்டினார். 206 இலக்குகளே பங்களாதேஷ் பந்துவீச்சாளர் ஒருவரின் ஆகச்சிறந்த அடைவு மட்டமாக இருந்தது. 207 இலக்குகளை வீழ்த்தி சகிப் அல் ஹசன் அந்தச் சாதனையை தனது பெய ரில் பதிவுசெய்தார். (ம)



# இந்திய பூப்பந்தாட்ட வீராங்கனை சிந்து 110 கோடிகளுக்கு ஒப்பந்தமானார்



ரியோ ஒலிம்பிக் தொடரில் வெள்ளிப்பதக்கம் வென்ற இந்திய பூப்பந்தாட்ட வீராங் கனை சிந்துவுடன் விளம்பர நிறுவனமொன்று இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 110 கோடிகளுக்கு ஒப்பந்தம் செய்துள்ளது.

ரியோ ஒலிம்பிக் தொடர் ஆரம்பமாகும் முன்னர் சிந்து பெரிதளவில் பேசப் படாத வீராங்கனையாகவே இருந்தார். பிறிதொரு இந் திய பூப்பந்தாட்ட வீராங் கனையான சாய்னா நேவாலே அந்த நாட்டின் நட்சத்திர வீராங்கனை யாக வலம்வந்தார். ஆனால் ரியோ ஒலிம்பிக் தொடர் சிந்துவின் வாழ்க் கையை மாற்றியமைத்துவிட்டது. அவர் வென்ற வெளிப்பதக்கத்தின் மூலம் இந்தியாவெங்கும் பிரபலமானார். பரி சுத்தொகைகள் வந்து குவிந்தன. லட்சங் களில் இருந்த அவரது ஒப்பந்தப் பெறுமதி கோடிகளைத் தொடும் என்று எதிர்பார்க்கப் பட்டது. இந்த நிலையில் பிரபல நிறுவனமொன்று கிட்டத்தட்ட 110 கோடிக ளுக்குச் சிந்துவை ஒப் பந்தம் செய்துள்ளது. இருப்பினும் இந்த ஒப்பந்தம் எத்தனை வருடகாலத்தைக் கொண்டது என்று வெளியிடப்படவில்லை. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யங்கம்பன்ஸ், கலைமதி அணிகள் முன்னேற்றம்

கரணவாய், செப். 28
குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டன.

குறிஞ்சிக்குமரன் வி.கழக மைதானத்தில் ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக் கழகமும் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. கோல்கள் இல்லாமல் முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியின் 23ஆவது, 26 ஆவது நிமிடங்களில் சென். லூட்ஸ் அணி கோல்களைப் பதிவுசெய்தது. 32ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் அணியின் நிறோவும், 34 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் அணியின் பார்த்தீபனும் கோல்களைப் பதிவுசெய்ய 2:2 என்று சமநிலையானது. யங்கம்பன்ஸ் அணியின் பிரகாஸ் 38ஆவது மற்றும் 39ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரண்டு கோல்ளைப் பதிவுசெய்ய முடிவில் 4:2 என்ற கோல்களின் அடிப்படையில் சென். லூட்ஸ் அணியை வீழ்த்தி முன்னேற்றம் கண்டது யங்கம்பன்ஸ் அணி.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும் ஏழாலை பைவ் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதின. பலத்த போராட்டத்தின் மத்தியில் 2:1 என்ற கோல்களின் அடிப்படையில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது. (ம-108)



# நெளுக்குளம் கலைமகள் வித்தி. இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது

யாழ்ப்பாணம், செப். 28
சமபோசா கிண்ணத்துக்காக பாடசாலைகளின் 15 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையில் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் வவுனியா மாவட்ட அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ஆண்கள் பிரிவில் நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. அந்த அணி செட்டிக்குளம் மகா வித்தியாலய அணியுடன் இன்று பலப்பரீட்சை நடத்தவுள்ளது.

வவுனியா சிறுவர் பூங்கா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில், வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அணியை எதிர்த்து மூன்று முறிப்பு அ.த.க. பாடசாலை அணி மோதியது. கோல் கணக்கு இல்லாமல் முடிவடைந்தது முதல் பாதி. கோல்கள் இல்லாமல் இரண்டாம் பாதியும் நகர்ந்துகொண்டிருந்தது. ஆட்டம் நிறைவடைய 5 நிமிடங்கள் இருக்கும் போது ஆட்டத்தின் முதல் கோலையும் இறுதிக்கோலையும் பதிவுசெய்த நெளுக்குளம் மகா வித்தியாலயம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. முன்னதாக நடைபெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் செட்டிக்குளம் மகா வித்தியாலயம் பூவரசன்குளம் மகா வித்தியாலயத்தை 3:0 என்ற கோல் கணக்கில் விழ்த்தி இறுதிக்குத் தகுதி பெற்றது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இறுதியாட்டம் வவுனியா சிறுவர் பூங்கா மைதா னத்தில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும். (ம-422)





தேசியமட்ட தடகளத்தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில் மைதானத்தில் சில கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒலிம்பிக் தீபத்தை ஏற்றுவதற்கென்றும் பிரத்தியேகமாக ஒரு கோபுரம் அமைக்கப்பட்டது. (ம-23)

# உடற்பயிற்சிப் பயிற்றுநராக நியமனம் பெற்றார் நிக் லீ



இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரரான நிக் லீ இலங்கை அணியின் உடற்பயிற்சிப் பயிற்றுநராக நியமிக்கப்பட்டார்.

இலங்கை அணியின் உடற்பயிற்சிப் பயிற்றுநராக இருந்த மைக்கல் மெய்னின் பதவிக்காலம் அண்மையில் முடிவுக்கு வந்தது. இதனையடுத்து அந்த இடத்துக்கு இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரரான நிக் லீ நியமிக்கப்பட்டார். ஒக்ரோபர் மாதம் முதல் தனது கடமைகளை நிக் லீ பொறுப்பேற்பார் என இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்தது. அவர் தற் போது இங்கிலாந்தின் கழக அணியான சசெக்ஸ் பிராந்திய அணி யின் உடற்பயிற்சிப் பயிற்றுநராக பணியாற்றுகின்றார். (ம)

## தேசியமட்ட கூடைப்பந்தாட்டம் கால்பந்தாட்டம் யாழ். மாவட்டத்தில்

யாழ்ப்பாணம், செப். 28
தேசியமட்ட கால்பந்தாட்ட, கூடைப்பந்தாட்டத் தொடர்கள் யாழ். மாவட்டத்தில் இன்று புதன்கிழமை ஆரம்பமாகின்றன.

கால்பந்தாட்டத் தொடர் சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலையம், யாழ். துரையப்பா விளையாட்டு மைதானம் ஆகியவற்றிலும், இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடர் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலிலும் இடம்பெற வுள்ளன. (ம-23)

## பலாலி விண்மீன் இறுதிக்கு தகுதி

கரணவாய், செப். 28
பொலிகை பாரதி வி.கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் பாலாலி விண்மின் வி.கழகம் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

பாரதியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் மோதின. விண் மீன் கோலொன்றினைப் பதிவுசெய்ய வேறெந்த மாற்றமும் இல்லாமல் முதல் பாதி முடிவடைந்தது. இரண் டாம் பாதியில் மாற்றங்கள் எவை யும் நிகழவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது விண்மீன் அணி. ஆட்டநாயகனாக விண்மீன் அணியின் யுட் கெனடி தெரிவானார். (ம-108)

# சென். சாள்ஸின் துடுப்பாட்டத் தொடர் அரையிறுதியில் கரவெட்டி ஞானம்ஸ்



கரணவாய், செப். 28
குருநகர் சென். சாள்ஸ் கல்லூரியின் 140 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி ஞானம்ஸ் அணி அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

குருநகரிலுள்ள மைதானமொன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டமொன்றில் யாழ். கிறீன் கிங்ஸ் அணியும் கரவெட்டி ஞானம்ஸ் அணியும் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஞானம்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சு[illegible]தன் 38 ஓட்டங்களையும் ஜீவன் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அசோக் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

88 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய கிறீன் கிங்ஸ் அணி 6 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 54 ஓட்டங்களை மட்டுமே பெற்றதையடுத்து 33 ஓட்டங்களால் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது ஞானம்ஸ் அணி. பந்து வீச்சில் ஜீவன் மற்றும் சேந்திரன் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்திரேலியாவிடம் அச்சமடையவில்லை

## வில்லியர்ஸ் தெரிவித்தார்



ஆஸ்திரேலிய அணியைக் கண்டு அச்சமடையவில்லை இவ்வாறு தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் தலைவரான வில்லியர்ஸ்.

ஆஸ்திரேலியா - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ளது. தென்னாபிரிக்காவில் தொடர் நடைபெறுவதால் அந்த அணியின் ஆதிக்கம் மிகுந்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையிலேயே வில்லியர்ஸ் இவ்வாறு வெளிப்படுத்தினார். குறித்த தொடர் தொடர்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய அணி பலமானது. இந்த விடயத்தில் எனக்கு மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனால் அந்த அணிக்கு நிகரான பலம் எமக்கு உள்ளது. குறிப்பாக தென்னாபிரிக்காவின் பந்துவீச்சுவரிசை பலம்பெற்றுள்ளது. ஆரம்ப வீரர்களாக அம்லாவும், குயின்டன் டி ஹொக்கும் அணிக்கு சிந்த அடித்தளத்தை வழங்குகிறார்கள். மட்டுமல்லாமல் தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெறுவதால் ஆடுகளங்கள் எமக்குச் சாதகமாக அமையும் என்பதே எனது கருத்து. இவை எல்லாவற்றையும் ஒன்று சேரப் பார்த்தால் ஆஸ்திரேலிய அணியைக்கண்டு நாம் அச்சமடையத்தேவையில்லை என வில்லியர்ஸ் மேலும் தெரிவித்தார்.

(ம)

# தேசியமட்ட தடகளத் தொடர் யாழ். துரையப்பாவில் நாளை



யாழ்ப்பாணம், செப். 28

தேசியமட்ட தடகளத் தொடர் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நாளை ஆரம்பமாகவுள்ளது. நாளை ஆரம்பமாகும் இந்தத் தொடர் எதிர்வரும் 2ஆம் திகதி வரை நடைபெறும். ஆரம்பநாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், இறுதிநாள் நிழ்வுக்கு முதன்மை விருந்தினராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கலந்து கொள்கின்றனர்.

(ம-23)

# சுழற்பந்துவீச்சாளர் அஸ்வின் பெறுமதியான கிரிக்கெட் வீரர்

## கோக்லி பெருமிதம்

இந்திய அணியின் சுழற்பந்துவீச்சாளர் அஸ்வின் விலைமதிப்புமிக்க கிரிக்கெட் வீரர் என்று இந்திய அணியின் டெஸ்ட் தலைவர் கோக்லி புகழாரம் சூட்டினார்.

நியூஸிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி 197 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் இந்திய அணியின் சகலதுறை வீரரான அஸ்வின் 10 இலக்குகளை வீழ்த்தியதுடன், முதல் இன்னிங்சில் 40 ஓட்டங்களையும் குவித்தார். இந்த நிலையில் ஆட்டம் நிறைவடைந்த பின்னர், நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்தே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய அணியின் தலைசிறந்த வீரர்களில் ஒருவர் அஸ்வின். உலக கிரிக்கெட் அரங்கில் தாக்கம் ஏற்படுத்தும் வீரர்கள் வரிசையில் அவருக்கும் பிரதான இடமுண்டு. ஒவ்வொரு அணியிலும் தாக்கம் ஏற்படுத்தக்கூடிய வீரர்கள் இருப்பார்கள். அந்த வகையில் இந்திய அணியில் பந்துவீச்சில் முக்கிய இடம்பிடித்திருப்பவர் அஸ்வின். கடந்த சில வருடங்களாக அஸ்வின் அருமையாக பந்துவீசி வருகிறார். அவர் தனது ஆட்டத்துக்காக கடுமையாக உழைத்து வருகிறார். அஸ்வின் இந்திய டெஸ்ட் அணியின் விலை மதிப்புமிக்க கிரிக்கெட் வீரர் என கோக்லி மேலும் தெரிவித்தார்.



(ம)

# முதல் சுற்றுடன் வடக்கு வெளியே

யாழ்ப்பாணம், செப். 28

தேசியமட்ட கரப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் வடக்கு மாகாண அணி முதல் சுற்றுடன் வெளியேறியது.

பொலனறுவையில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் வடக்கு மாகாண அணி தென் மாகாண அணியை எதிர்த்து மோதியது. ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் மூன்று செற்களையும் 13:25, 16:25, 13:25 என்ற புள்ளி அடிப்படையில் இழந்ததையடுத்து, 0:3 என்ற செற் கணக்கில் வடக்கு மாகாண அணி தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறியது.

(ம-23)

# அயர்லாந்தை வீழ்த்தியது ஆஸ்திரேலியா

அயர்லாந்துக்கு எதிரான முதலாவதும் கடைசியானதுமாக ஒருநாள் ஆட்டத்தில் 9 இலக்குகளால் வெற்றிபெற்றது ஆஸ்திரேலியா.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அயர்லாந்து முதலில்துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 198 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக அன்டர்சன் 39 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் ஆஸ்திரேலியாவின் சார்பில் சம்பா மூன்று இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா முன்வரிசை வீரர்களின் சிறப்பான ஆட்டத்தால் 119 பந்துகள் மீதமிருக்க ஓர் இலக்கை மாத்திரம் இழந்து 9 இலக்குகளால் வெற்றிபெற்றது. கவாயா ஆட்டமிழக்காமல் 82 ஓட்டங்களையும், ஸ்ரீவ் சிமித் ஆட்டமிழக்காமல் 59 ஓட்டங்களையும், வோர்ணர் 48 ஓட்டங்களையும் பெற்றனர். கவாயா ஆட்ட நாயகனானார்.

(ம)



# ரஹ்மானுக்கு அபராதம்

பங்களாதேஷ் அணியின் நட்சத்திர வீரரான சபீர் ரஹ்மானுக்கு அபாரதம் வித்தித்தது பன்னாட்டு கிரிக்கெட் சபை.

பங்களாதேஷ் - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ஒரு கட்டத்தில் ஆப்கானிஸ்தான் அணி வெற்றி பெறும் நிலையில் இருந்தது. ஆப்கானிஸ்தான் துடுப்பாட்ட வீரர் சாகிடி சிறப்பாக துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தார். அவரது கால்கவசத்தை பந்துதாக்கியதையடுத்து பங்களாதேஷ் வீரர்கள் நடுவரிடம் முறையிட்டனர். நடுவர் ஆட்டமிழப்பு அல்ல என அறிவிக்க சபிர் ரஹ்மான் நடுவருடன் வாக்குவாதம் செய்தார். பன்னாட்டு கிரிக்கெட் சபையின் விதிமுறையின் அடிப்படையில் இது குற்றமாகும். ரஹ்மானும் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து குறித்த ஆட்டத்துக்கான கட்டணத்திலிருந்து 30 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டது.

(ம)

# பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களை கைவிடுகிறது இந்திய கிரிக்கெட்



பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களை நடத்தும் திட்டத்தைக் கைவிடும் முடிவுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வந்துள்ளதாகத் தெரியவருகிறது.

இந்திய அணி எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் 13 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடவுள்ளது. இவற்றில் சில ஆட்டங்கள் பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களாக நடத்தப்பட வாய்ப்புள்ளதாகக் கருதப்பட்டது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையும் பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களை நடத்தப் பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்திருந்தது. ஆனால் அத்தகைய ஆட்டங்களை நடத்தும் திட்டத்தை கைவிடுவதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நேற்று அறிவித்தது.

பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களை நடத்த முடிவு செய்வதற்கு முன்பு பல விடயங்களைப் பார்க்க வேண்டியுள்ளது. இந்த வருடத்துக்குள் பகலிரவு ஆட்டங்களை நடத்துவதுக்கு இந்திய கிரிக்கெட் சபை தயாராக இல்லை. எதிர்வரும் மார்ச் மாதம் வரை நடைபெறவுள்ள தொடர்கள் அனைத்தும் வழமையான பகல் ஆட்டங்களாகவே அமையும் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் அனுராத் தாக்கூர் தெரிவித்தார்.

(ம)

உடனடி வேலைவாய்ப்பு

DMI நிறுவனமானது தனது புதிய கிளைகளை பல்வேறு மாவட்டங்களில் ஆரம்பிக்கவுள்ளதால் O/L,A/L படித்த மாணவர்களை வேலைவாய்ப்புக்காக இணைக்கவுள்ளது. ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 076 8643505 077 6953242

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L,A/L எழுதியோர், இளைஞர்கள், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!

சனி, ஞாயிறு பிரிவுகள் 01.10.2016 சனிக்கிழமை

1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.ப 01.00-03.00
4. மாலை 03.00-05.00

பயிற்சிகள் சாம்சன் அவர்களினால் மட்டுமே வழங்கப்படும்

அனைவரும் 01.10.2016 அன்று ஆரம்ப வகுப்பிற்கு சமூகமளிக்கமுடியும்.

SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org